(ஆ) மக்களின் கோரிக்கைகளுக்கிணங்க ஆலங்காயத்திலிருந்து நெல்லி வாசல் நாடுக்கு, ஆண்டியப்பனூர், புதூர் நாடு வழியாக ஒரு மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்பட்டு தற்காலிக அனுமதி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் இத்தடத்தில் மினி பஸ் ஒன்று விடப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, அரசினுடைய அனுமதிக்காக இது எப்போது அனுப்பப்பட்டது? அரசு எப்போது அனுமதி வழங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): இந்த மினி பஸ் விடுவதற்கு ஏற்கெனவே வி. கே. குப்புசாமி என்பவருக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அந்தக் கால கட்டத்திலே அவர் மினி பஸ் விடாத காரணத்தால் சையத் அன்வர் என்பவருக்கு 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாளன்று அனுமதி வழங்கப்பட்டது. சையத் அன்வார் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் நாளுக்குள் அவருக்குக் கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மினி பஸ் விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அதற்குள் அவர்கள் விட்டுவிடுவார்கள் என்று போக்குவரத்துத் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள்.

1979 மார்ச் 30]

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, ஆலங்க காயத்திலிருந்து நெல்லிவாசல் நாட்டிற்கு ஒரு மினி பஸ் விடப்பட்டிருக்கிறது. அதைப்போல ஆலங்காயத்திலிருந்து ஜமீனாமருதூருக்கும், ஆலங்காயத்திலிருந்து காவலூருக்கும் புதூர் நாட்டிற்கும், புங்கம்பட்டு நாட்டுக்கும் பஸ்கள் விட்டால் தான் சரியான முறையில் போக்குவரத்து வசதி கிடைக்கும் என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே அங்கே மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா? அனுமதி வாங்கிக் கொண்டவர்கள், பஸ் விடாமல் இருக்கிறார்கள், அதைப்பற்றி அரசு கவனித்து யாருக்குச் சரியான தகுதி இருக்கிறதோ அவர்களுக்குக் கொடுப் பதற்கு அரசு முன்வருமா? அது மட்டுமல்ல, ஆலங்காயத் திலிருந்து ஜோலார்பேட்டைக்கும், ஏலகிரி மலைக்கும் விட வேண்டுமென்ற கோரிக்கை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒன்று கேட்டால்தான் ஒழுங்காகப் பதில் வரும்.

திரு. எம். ஏ. லத்தீப்: அது பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர், மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தற்காலிக அனுமதிபெற்றவர்கள் ஒழுங்காகப் பேருந்துகள் ஓட்டுவது இல்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஓட்டாதவர்களுடைய உரிமம் ரதது செய்யப்படும் என்பதைத் தெரிவிதது்ச் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இப் போது மலைவாழ் மக்களுடைய நலனைக் கருதி இப்படிச் செய்கிறபோது தனியார்கள் நஷ்டம் வருகிறது என்ற காரணத் தால் வண்டி ஓட்ட மறுக்கிறார்கள். அந்த இடங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக அந்த மார்க்கங்களில் வண்டி விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): அது போன்ற வழித் தடங்களில் தனியார்கள் ஓட்ட மறுப்பார் களானால் அல்லது அவர்கள் கிடைத்த உரிமையைப் பயன் படுத்திக் கொள்ளாமல் இருப்பார்களானால் அரசு அதிலே பஸ் விட தயாராக இருக்கிறது.

தனுஷ்கோடிக்கு ரயில்பாதை.

*வினா எண். 573—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தனுஷ்கோடிக்கு உடனடியாக ரயில் பாதை போட வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?—

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) மற்றும் (ஆ) இல்லை.

அரசு மருத்துவமனை ஆலங்குடி

*வினா எண். 574—திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி நகரப் பஞ்சாயத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் கட்டட வசதியை அதிகப்படுத்தி, காலரா நோய்ப் பிரிவைத் தனியாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) காலரா நோய் பிரிவிற்கென கட்டடம் கட்டுவது, பொது சுகாதார விதிகளின்படி அந்தந்த ஊராட்சியின் பொறுப்பாகும். ஆலங்குடி அரசினர் மருத்துவமனையில் காலரா பிரிவு கட்ட ஆலங்குடி ஊராட்சி முன்வந்து, இதைச் செய்வதற்கான ஒப்புதலை ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் கோரியுள்ளது.

REPORTING SECTION

புதுக்கடை நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் யானைக்கால் வியாதி.

*வினா எண். 575—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டம் புதுக்கடை நகரப் பஞ்சாயத்து பகுதிகளில் யானைக்கால் வியாதி பரவி வருவது அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்நோய் பரவாமல் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

(இ) குமரி மாவட்டத்தில் வேறெந்தப் பகுதிகளெல்லாம் அந்நோயால் பாதிக்கப்பட்டு உள்ளன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) புதுக்கடை நகரப் பஞ்சாயத்துப் பகுதி யானைக்கால் நோய் பரவ வாய்ப்புள்ள பகுதியாகும்.

(ஆ) விளவங்கோடு வட்டம், புதுக்கடை பேரூராட்சிப் பகுதியில் ஆண்டொன்றுக்கு ரூ. 3,800 செலவில் யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு 1977-ம் ஆண்டு அனுமதி வழங்கியுள்ளது.

(இ) குமரி மாவட்டத்தில், நாகர்கோவில், பத்மநாபபுரம், இரணியல், திருவிதாங்கோடு ஆகிய பகுதிகளில் இந்நோயைத் தடுக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறைகள் தடுப்பு நடவடிக்கைகளை அமல் செய்து வருகின்றன. இவற்றைத் தவிர, தக்கலை, குறுத்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்திலும் அதனைச் சார்ந்த மண்டைக்காடு, கள்ளுக்கோட்டம், தலக்குளம், மண்டே மார்க்கட் போன்ற பகுதிகளில் முதுநிலை பூச்சியல் அறிஞரால் ஆய்வு செய்யப்பட்டு இந்நோய் அப்பகுதிகளில் பரவி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேவையான செயற் குறிப்புகள் தீட்டி, அதற்கு உள்ளாட்சி மன்றங்களின் ஒப்புதலும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதலும் பெற பொது சுகாதாரம், தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

[முற்பகல் 10–00]

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்ட பதிலிலேயிருந்து புதுக்கடை பேரூராட்சியில் ஏறக்குறைய 3,000 ரூபாய் அளவிற்கு அந்த யானைக்கால் வியாதியைக் தடுப்பதற்காக அனுமதித்துள்ளார்கள்

என்று தெரிகிறது. இந்தப் பணம் மிகவும் குறைவான தாகும். அந்தப் பகுதியிலுள்ள சிறுவர், சிறுமியர் மற்றும் வயோதிகர்கள் இந்த வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்தப் பணத்தை அதிகப்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல, அதிகமான பகுதிகளில்—இரணியல் போன்ற பகுதிகளில்—இந்த நோய் பரவிக் கொண்டே வருவதால், குமரி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து இந்த நோயை அறவே போக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல—ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இல்லை என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்—போதுமானதாக இல்லை என்பதுஅங்கிருக்கின்ற மருத்துவநலத் துறையால்பரிசீலிக்கப்பட்டு அறிவிக்கப்படுமேயானால் தேவையான அளவுக்கு விஸ்தரிக்கப்படும். இந்த நோய் அறவே தடுக்கப்பட வேண்டுமென்ற நடவடிக்கைகளில் மத்திய அரசும், இந்த அரசும் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் இரண்டு நிமிடங்களுக்கு நீட்டிக்கிறேன்.

திரு. ஆ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, இந்த யானைக் கால் நோயைத் தடுப்பதற்காக அரசு என்னென்ன வகைகளிலே நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது? கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல் எனது தொகுதியில் இரணியல், திருவிதாங்கோடு, தக்கலை, பத்மநாபபுரம் போன்ற பகுதிகளில் இந்நோய் இருக்கிறது. அங்கு நல்ல குடிநீர் வசதி இல்லை. இந்த நோயைத் தடுப்பதற்காகப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நோய் 'கியூலெக்ஸ்' என்ற கொசுவால் உண்டாகிறது. இந்தக் கொசுவைத் தடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் பல்வேறு விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், இந்த நோயை அறவே ஒழிப்பதற்குச் சரியான வழிமுறைகள் இதுவரையில் கண்டறியப்படவில்லை. ஆகவே, இப்பொழுது நகரங்களிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் மட்டும் செயல்படுகின்ற தடுப்பு நடவடிக்கைகளை கிராமப் பகுதிகளிலும் செயல்படுத்துவதற்கு மத்திய அரசால் விரிவாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

1979 மார்ச் 30]

பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லாப் பகுதிகளிலும் தரப்பட வேண்டுமென்ற ஒரு பிரச்சினையை இந்த நாட்டிலே முதன்முதலாக உருவாக்கி வைத்தார்கள். இன்றைக்கு அந்த எண்ணத்திலேதான் இந்த அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுபற்றி விரிவாக கேள்வியை மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சரவர்களிடத்திலே கேட்டார்களானால் விரிவான பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம முடிவுற்றது. மற்றக் கேள்விகள் நாளைக்குத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படும.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெறறது என்பதைக் குறிக்கும்.]

(2) உரிமைப் பிரச்சினைகள்.

(அ) கிராமத் தொழில்கள் அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேரவையின் 184-வது விதியின் கீழ், உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். இது சம்பந்தமாக நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். (குறுக்கீடு.) இது வேறா, சரி.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையில் மதுவிலக்குச் சட்டத்தை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தின் மீது நடந்த விவாதத்தில் நானும், இந்த அவையிலே உள்ள வேறு ஒரு சில முஸ்லீம் உறுப்பினர்களும் கலந்து கொண்டோம். நான் பேசும்பொழுது, மதுவிலக்குச் சட்டத்தை, ஒரு ஜீவாதாரமான கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் நாம், மதுவிலக்குச் சட்டம் நாட்டுக்குத் தேவையான ஒரு சீர்திருத்தச் சட்டமாக மட்டுமல்லாமல், அதை நாங்கள் முஸ்லீம்கள் என்ற

முறையில் ஏற்றுக் கொண்டிருக்கிற நம்பிக்கையின் அடிப்படைப் பகுதியாக ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் என்று மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி மிகத் தீவிரமாக, எப்பொழுதும் போல் எங்கள் கொள்கைக்கு ஒப்பப் பேசியிருக்கிறோம். ஆனால் அதற்கு மாறாக, இந்தச் சபையிலே நடக்காத, இந்தச் சபையிலே பேசப் படாத ஒரு கருத்தை கடந்த 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22-ம் நாளைய 'அண்ணா' நாளிதழில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்கள் உத்திரமேரூர் என்ற ஊரில் பேசியபொழுது வெளியிட்டு இருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், ஒரு முஸ்லீம் உறுப்பினர், குடிக் கட்டுமே, நாட்டு மக்கள் குடிக்கட்டுமே என்ற கருத்தில், அவர்கள் குடிப்பதற்கு ஆக்கம் அளிக்கும் வகையில் பேசியிருக் கிறார்கள் என்று அமைச்சரவர்கள் பேசியிருக்கிறார்கள். இது ஒரு தவறான கருத்தை நாட்டு மக்களிடத்திலே ஏற்படுத்தி யிருக்கிறது. அவர், எந்த உறுப்பினர் என்று குறிப்பிடாவிட் டாலும்கூட, மன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒரு உறுப்பினர் என்று பேசியிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால், இந்த அவையில் எந்த உறுப்பினரும்—முஸ்லீம் உறுப்பினர் என்ற முறையில் அந்த விவாதத்தில் கலந்து கொண்ட எந்த முஸ்லீம் உறுப்பினரும் மதுவிலக்கு வேண்டாமென்று யாரும் பேசவில்லை.

அது மட்டுமல்லாமல், மதுவை மக்கள் சாப்பிடட்டுமே என்ற தோரணையிலும் யாரும் பேசவில்லை. அதற்கு மாறாக, நாட்டிலே மதுவிலக்குச் சட்டம் தீவிரமாக அமல் படுத்தப்படவேண்டும், மது என்ற அந்த அரக்கன் நாட்டிலே யிருந்து ஒழிக்கப்படவேண்டும். மதுவிலக்கு சட்டத்தைத் தீவிர மாகச் செயல்படுத்துவதற்கு இந்தச் சட்டத்திலே இருக்கிற சில ஊனங்களை இங்கேயே நாம் களைந்து விடுவோமானால், நாளைக்கு மதுவை ஆதரிப்பவர்கள் அதை ஒரு காரணமாக வைத்து கோர்ட்டு களுக்குச் சென்று அந்தச் சட்டத்தையே சிறிது காலத்திற்குத் தள்ளிவைக்கும் காரியத்தில் ஈடுபட முடியாது என்ற வகையில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டதே தவிர, அந்த வகையில் தீவிரமாக மதுவிலக்குச் சட்டம் அமல் படுத்தப்பட வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டதே தவிர, இங்கே பேசப்படாத ஒன்றை, ஏதோ உள்நோக்கம் வைத்து, அரசியல் காரணங்களுக்காக என்று கருதுகிறேன், சபையில் பேசப்படாத ஒன்றை, அமைச்சர் என்ற தகுதியையும் மறந்து, உண்மைக்கு மாறாக, வெளியிலே பேசியிருக்கிறார்கள். அது 'அண்ணா' நாளிதழில் வந்திருக்கிறது. இது தவறான கருத்தை நாட்டு மக்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான பேச்சை அமைச்சரவர்கள் அடிக்கடி பேசி வருகிறார்கள். இதனால், அவையிலே

நாங்கள் எல்லாம் பேசுவதற்குத் தயங்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அவையிலே பேசாத ஒன்றை, வெளியிலே பேசியிருப்பதால் அமைச்சர் அவர்கள் அவை உரிமையை மீறியிருக்கிறார்கள்.

அதோடு, யார் என்றும் குறிப்பிடாமல், ஒரு முஸ்லீம் உறுப்பினர் என்று குறிப்பிட்டு, ஆளுங்கட்சி முஸ்லீம் உறுப்பினர்கள் உட்பட அவர் பேசியிருக்கிறார். ஆகவே, யார் என்று தெரியாது என்று வெளியே பேச்சு அடிபட்டாலும், அது யாரைக் குறித்து என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அரசியல் காரணங்களுக்காக, அவையில் பேசாத ஒன்றைப் பேசியதாகக் கூறுவது, அவை உரிமையை மீறியதாகும். அது கண்டிக்கத்தக்கதாகும். ஆகவே, இது அவை உரிமையை மீறியது என்பதால், இதை அவை உரிமைக் குழுவுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவரவர்களே, உத்திரமேரூர் தொகுதியில் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ம் நாளில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அங்கே நான் பல்வேறு பொதுக் கூட்டங்களிலே பேசிய பேச்சுக்களை 'அண்ணா' நாளிதழில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். நானும் அதைப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூறுவதைப் போல், சட்டப் பேரவையிலே உறுப்பினர்கள் இப்படியெல்லாம் பேசினார்கள் என்ற தொனியிலே கருத்துக்கள் சொல்லப்படவும் இல்லை. அப்படி செய்தியாகவும் வரவில்லை. பொதுவாக சட்டத்தை எதிர்ப்பதன் மூலமாக, சில ஷரத்துக்களை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, மது அருந்துகிறவர்களுக்கு உற்சாகத்தை அளித்து விடக்கூடிய முறையில் நம்முடைய பணி அமைந்துவிடக் கூடாது. மதுவிலக்குச் சட்டத்திலே குறைபாடுகள் இருந்தாலும் கூட காலப்போக்கிலே நாம் திருத்திக்கொள்ளலாம். ஆனால், உண்மையிலே மது அரக்கனை ஒழிக்கவேண்டுமென்று சொன்னால் விமர்சனங்களைப் பெரிதுபடுத்திக்கொண்டு போகக்கூடாது. அந்த அடிப்படையில் மது அருந்துபவர்களுக்கு ஆதரவு தருகிற வகையில் சிலபேர் பேசி வருகிறார்கள். அரசியல் காரணமாக, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் மது அருந்துபவர்களை உற்சாகப்படுத்திவிடக்கூடாது. ஆனால், அவ்வகையில் சில உறுப்பினர்கள் பேசிவருவதாக நான் வெளியிலே கருத்து தெரிவித்திருக்கிறேன். சட்டப் பேரவை என்றும் குறிப்பிடவில்லை, சட்டமன்றம் என்றும் குறிப்பிடவில்லை. Member of a particular community என்றுகூட எடுத்துக் கொள்ளலாம். எனவே, அவர்களாக வலிந்து நான் ஏதோ உள்நோக்கத்தோடு சொன்னேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த நோக்கம் எனக்கும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, நானும் இங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட குறைபாடுகளின் காரணமாக, இந்தச் சட்டத்தையே எதிர்த்து, வழக்குமன்றத்திற்குச் சென்று, இந்தச் சட்டமே செயல் படாத முறையில், அவர்கள் ஈடுபடுவார்கள் என்று கருத்து தெரிவித்ததை நானும் அறிவேன். எனவே, அவை மீறிய செயலாக இதைக் கருதத் தேவையில்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தைக் கேட்ட பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது; திரு. சுப்பு அவர்களைச் சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—10]

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் கொடுத்த தீர்மானத்தைப் படித்து விடுகிறேன். அதற்குப்பிறகு இரண்டொரு நிமிடங்களில் நான் பேசி முடித்து விடுகிறேன்.

Under Rule 184 of the Assembly Rules, I am giving notice to raise the following matter of privilege against the Inspector-General of Police, Mr. E. L. Stracey, on the floor of the House, viz :—

"The Inspector-General of Police, Mr. E. L. Stracey, has met the Press at Trichy on 28th March 1979 and made certain important announcements about the major changes in this Police Department. The Report of the Press Conference has been given wide coverage in the dailies like the " Indian Express " " Malai Murasu " etc. The statement of the I.G. contains the following announcements among other things".

1. The State Police will be headed by a Director-General who will be a senior I.P.S. Officer.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படித்துவிட்டால் போதும். பிறகு பேசவேண்டாம் என்று நினைக்கிறேன்.

1979 மார்ச் 30]

திரு. க. சுப்பு : படித்துவிட்டு, ஓரிரு பாயின்ட் மட்டும் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். கொடுத்துள்ள தீர்மானத்தை மட்டும் படித்து விடுங்கள். அதுவே முழுமையாக இருக்கிறது. அதையும் மீறி பேசப்போகிறீர்கள் என்றால், தீர்மானம் என்னிடத்தில் இருக்கிறது. உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள். அதைப் படிக்கவேண்டாம்.

திரு. க. சுப்பு : படித்து விட்டு பிறகு கருத்து சொல்வது தான் சரியாக வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் படிக்கிறபோதே கருத்து இந்த அவைக்கு புரிந்துவிடும். அதற்கு மேலே பேசவேண்டியது இல்லை.

திரு. க. சுப்பு : அதற்கு மேலே இருந்தால் பேசுகிறேன். இல்லாவிட்டால் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.

Thiru K. Suppu—

2. The Director - General will be assisted at the head quarters by three Inspectors-General of Police who will assume different functional responsibilities.

3. The three New Inspector-General proposed are:

Inspector General of Police (Enforcement) who will be incharge of enforcement of the Tamil Nadu Prohibition Act, the protection of Civil Rights Act, and other Acts.

I. G. of Police (Services) who will be in-charge of matters of administrations, Registration of crimes, etc.

Inspector-General of Police (Emergency Services) who will be in.charge of emergencies like Major Law and Order situation in the State, rioting, natural calamities like floods, fire and drought, Home Guadrs, etc."

The Director General-will be the Co-ordinating authority and his word will be final.

[Thiru K. Suppu] [1979 மார்ச் 30

It is also proposed to upgrade the post of Commissioner of Police in Madras City to the rank of additonal Inspector-General ".

" Under the proposed Re-organisation some of the D.I.G.'s post might be abolished; for instance the post of Railway and Armed Reserve Police D.I.G. might go. Railway and Armed Reserve Police might come under the I.G. (Services)

" Mr. Stracey said it was proposed to permit Women Police in the State to wear Khaki Sarees and Khaki Shirts or Blouses instead of Khaki Pants and Khaki Shirts.

" The Women Police now functioing in Madras City, Madurai, Coimbatore and Trichirappalli would be extended to the other Cities of State.

These announcements of the I.G. are very important in nature and related to policy matters of the Government. Such announcements are expected to be made by the Hon.Chief Minister, particularly on the floor of the House, when the Assembly is in Session. In any event the Officials are not expected to make such statements assuming the role of the Ministers. The Government is understood to have given clear instructions to the officials not to make such statements excepting that of routine nature. It is the exclusive right andthe previlege of the House to revive such announcements from the Minsters at the first instance.

In the light of these observations it is clear that the I.G. of Police has deliberately violated the instructions of the Government in making such statements, especially when the Assembly is in Session. Therefore, the conduct of the I.G. assuming the role of the Hon. Chief Minister will certainly amount to contempt of the House and oppose to the established norms and principles of Parliamentary democracy

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான் சொன்னேன், நீங்கள் கொடுத்துள்ள அறிக்கையிலேயே தெளிவாக இருக்கிறது. அதைப் படித்து விட்டீர்கள். மேலே விளக்க என்ன இருக்கிறது? ஒரு உரிமை மீறல் தீர்மானம் 1½ பக்கம் கொடுத்து, அதில் கடைசி பாராவில் எல்லாவற்றையும் விளக்கியிருக்கிறீர்கள். அதையே திரும்ப விளக்கி தமிழில் பேசவேண்டியது இல்லை.

திரு. க. சுப்பு : நான் சொல்லிவிடுகிறேன்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரைக்கும் யாரும் 1½ பக்கம் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தது இல்லை. நீங்கள் தான் கொடுத்து இருக்கிறீர்கள். அது அனுமதிக்கப் பட்டு இருக்கிறது.

திரு. க. சுப்பு : இனிமேல் வேண்டுமானால் அனுமதிக்க வேண்டாம். இப்போது பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பிளிட்டாக படித்து விட்டீர்கள். கடைசி பாராவில் நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டீர்கள். மேலும் அனுமதிப்பது முறையல்ல. இப்படிப்பட்ட முறையை இனி அனுமதிக்க முடியாது. எல்லாவற்றையும் சொல்லிவிட்ட பிறகு அதைத் தமிழாக்கம் செய்து பேசுவது அவையின் நேரத்தை வீணாக்குவது மாதிரி உள்ளது.

திரு. க. சுப்பு : நான் அதிலே சொன்னவற்றைச் சொல்லவில்லை. இது பிரைமபேசி எப்படி பிரிவிலேஜ் ஆகும் என்கிற ஆர்கியூமென்டை எழுதிக்கொடுக்க முடியாது. ஆகவே அதைமட்டும் சொல்வதற்கு அனுமதிக்கவேண்டும். தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த சட்டமன்றத் திற்கு பொறுப்பானவர்கள். இந்த சட்டமன்றம் மக்களுக்குப் பொறுப்பானது. கொள்கை முடிவுகளைப் பற்றி காபினட் அமைச்சர்கள் அறிவிக்க வேண்டும். அப்படித்தான் நிதிநிலை அறிக்கையிலும் போலீஸ் துறை விவாதத்திலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் டீட்டேய்ல்ஸ் கொடுக்கப் படவில்லை. எப்படி இருந்தாலும் அமைச்சர்கள்தான் கொள்கை முடிவுகளைப்பற்றி அறிவிக்க வேண்டும்; ஏனென் றால் கொள்கைகளை வகுப்பவர்கள் அவர்கள்தான்; அமைச் சர்கள்தான் அதுபற்றி முடிவு செய்கிறார்கள். அதனால் அமைச்சர்கள் தான் அறிவிக்க வேண்டும். அந்த முறையில் தான் ஜனநாயக மரபை வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

மின்சாரத் துறை அமைச்சர் ஒருமுறை 'பிரஸ் கான்ஃ பிரன்ஸ்' ஒன்றை முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்காக கூட்டினார்கள். அதற்காக அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். ஆனால் அதற்கு முன்னால் அதற்கு முந்தின நாள் எலெக்ட்ரி சிட்டி சேர்மேன் பிரஸ் கான்பிரன்சை கூட்டி, அறிவித்து விட்டார். அதற்குப் பின்னால் அமைச்சர் அந்த 'பிரஸ் கான்ஃபி ரன்சை கான்சல்' செய்ய வேண்டி வந்தது. அதிகாரிகள் எல்லாம் இப்படி அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை அறிவிக்கும் நிலைமை ஏற்பட்டால் அமைச்சர்களுக்கு இப்படிப் பட்ட இக்கட்டான சூழ்நிலை உருவாகத்தான் செய்யும்.

அமைச்சர்கள்தான் இப்படிப்பட்ட கொள்கை முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்று அரசு ஆணை இருக்கிறது; உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் அறிவிப்பதாக இருந்தாலும் சட்டமன்றம் நடைபெறும்போது முதலில் இங்கேதான் அறிவிக்க வேண்டும். அதற்கும் ஆணை இருக்கிறது.

அதை மீறியிருக்கிறார் இந்த ஐ.ஜி. ஏற்கெனவே இவருக்கு 6 மாதம் சர்வீஸ் எக்ஸ்டன்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் இப்படி விதிகளுக்குப் புறம்பாக அமைச்சர்களின் வேலையை செய்கின்ற வகையில் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை அவரே அறிவிப்பதற்காக அதுவும் இந்த சட்ட மன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இங்கே தெரியாமல் வெளியிலே அறிவிப்பதற்காக இன்னொரு எக்ஸ்டன்ஷன் கொடுக்க வேண்டியதுதான். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஒரு மக்கள் மன்றம். இங்கே மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. மக்களாட்சியின் சட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒரு தலைமை போலீஸ் அதிகாரி விதிகளுக்குப் புறம்பாக வேலை செய்கிறார். அவருக்கு சட்டம் நன்றாகத் தெரியும். சட்டம் தெரியாது என்று அவர் சொல்ல முடியாது. ஐ.ஜி. சட்டம் தெரியாதவர் என்று சொல்ல முடியாது. Ignorance of law is not an excuse சட்டம் தெரியாது அல்லது சர்க்கார் உத்தரவு தெரியாது என்று அவர் சொல்வதாக இருந்தால், சர்க்கார் உத்தரவு தெரியாத அதிகாரியை 'சாக்' பண்ணவேண்டியதுதான். இப்படிப்பட்ட பல்வேறு காரியங்கள் இதிலே இடம்பெற்றிருப்பதால் இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். கமிட்டியில் அவரை விசாரிக்க வேண்டும். அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். லெஜிஸ்லேச்சர், ஜுடிஷியல் இரண்டையும் ஓவர்டேக் பண்ணக்கூடிய அளவுக்கு அவர் போயிருக்கிறார். ஆகவே, ஸ்ட்ரேசி, ஐ.ஜி. அவர்களை பிரிவிலேஜ் கமிட்டியில் அழைத்து, விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, திரு. சுப்பு அவர்கள் தமிழக காவல்துறை தலைமை அதிகாரி மீது ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல; அவர் பேசும்போது மிகவும் உணர்ச்சி வசத்தோடு அவருக்கு பணியை நீட்டித்துக் கொடுத்தது சரியல்ல; மேலும் இத்தகைய காரியங்களைச் செய்ததற்கு அவரை நீக்கினால் கூட பொருத்தமானது என்ற அடிப்படையில் வேகமாகப் பேசினார். ஆனால் சரியான விவரங்கள் அவருக்கு தெரிந்திருந்தால் அவரே அரசாங்கத்தில் நிலையைப் புரிந்து கொள்வார் என்பதை நான் நன்றாக உணர்வேன்.

திருச்சியில் தலைமை காவல் அதிகாரி அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு கொடுத்த பேட்டியைப்பற்றி அவர்கள் குறிப்பிடும்போது அவர் முக்கியமானது, கொள்கை சம்பந்தமானது, அதை அறிவித்திருக்கிறார் என்று சொன்னார்கள். அது முக்கியமானதுதான். கொள்கை சம்பந்தமானதுதான். ஆனால் அதை ஐ.ஜி. தெரிவிக்கலாமா? முதலமைச்சர் அல்லவா தெரிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

1979 மார்ச் 30] [திரு. ச. இராமச்சந்திரன்]

நான் அதற்குச் சொல்ல விரும்புவது, முதலமைச்சர் அவர்கள் இதே மன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அன்றைக்கு ஒருவேளை மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு அது முக்கியமானதாக, கொள்கை சம்பந்தப்பட்ட அறிவிப்பாகத் தெரியாமல் போய்விட்டதோ என்று தான் கருதுகிறேன். 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 26-ந் தேதி அன்று நம்பிக்கை யில்லாத் தீர்மான விவாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் பதில் அளிக்கையில் இதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். புதிதாக ஒரு திட்டத்தைக் கொண்டுவரலாமா என்று யோசித் துக்கொண்டிருக்கிறோம். காவல் துறையை மூன்றாகப் பிரிக்க லாமா ? மதுவிலக்குத் தொடர்பான வழக்குகள் பற்றியது ஒன்று. இன்னொன்று, வன்முறை, கலவரங்கள் சம்பந்தப் பட்ட குற்றங்களுக்கு. நிர்வாகத்தைக் கவனித்து, ஆங்காங்கே மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற பணிக்கு அது தொடர்பான வழக்குகளுக்கு மற்றொன்று. இப்படி இந்த மூன்று பிரிவு களாகக் காவல்துறையைப் பிரிக்கலாமா என்று திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம் ; அதற்கு அவர்களைக் கேட்டிருக் கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக இதை அறிவித்திருக்கிறார்கள். ஒருவேளை திரு. சுப்பு அவர்கள் இங்கே இருந்து, அதைக் கேட்கவில்லையோ என்பதற்காக அவரை 'சாக்' பண்ண வேண்டுமென்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். இந்த அறிவிப்பு இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே தெரிவிக்கப் பட்ட அறிவிப்பின் அடிப்படையில் இப்படி முதலமைச்சர் அறிவித்து இருக்கிறாரே ; அதை என்ன செய்யப் போகிறீர்கள்? மூன்று தலைமை காவல் அதிகாரிகள் என்றால் மூன்று பேருக் கும் இடையே முரண்பாடு வந்தால் என்ன செய்வது என்று பத்திரிகையாளர்கள் கேட்டிருக்கிறார்கள். தலைமை காவல் அதிகாரி பத்திரிகையாளரிடம் சொல்லும்போது, சில மாநிலங் களில் அத்தகைய நிலைமை ஏற்படும்போது 'டைரக்டர் ஜெனரல்' பதவி கூட வைத்திருக்கிறார்கள். அப்படி கூட போடலாம் என்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 10-20]

ஆகவே அவர்கள் அங்கே தெரிவித்தது கூட I mentioned that I was thinking of even a more Senior Officer such as Director-General which other States already has. ஆக ஒரு கருத்தைத்தான் அங்கே தெவித்திருக்கிறாரே தவிர அது ஒரு கொள்கை அறிவிப்பு அல்ல. அரசாங்கம் ஒரு முடி வினை எடுத்து அந்த முடிவினை அவர்கள் அறிவிக்கவில்லை. ஏற்கெனவே இந்தப் பேரவையில் முதல்வரவர்கள் அறிவித்த தற்கொப்ப பதிலளிக்கின்ற வகையிலேதான் அவர் அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

[திரு. ச. இரரமச்சந்திரன்] [1979 மார்ச் 30

அதுமட்டுமல்ல. அதிகாரிகள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்பதைப் பற்றி அரசாங்கத்தினுடைய உத்தரவு ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முக்கியமான அறிவிப்புகள் அமைச்சர்களால்தான் செய்யப்பட்டுள்ளது. சாதாரணமாக ரகசியம் அல்லாதவைகள் மற்றும் நடைமுறையிலே வரக்கூடியவைகள் எல்லாம் அமைச்சர்கள்தான் சொல்ல வேண்டும் என்ற நிலை இருக்க வேண்டியதில்லை என்று அண்மையிலே ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டத்திற்கு ஒரு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் இது அவை உரிமை மீறியதாகாது என்று தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றிய எனது தீர்ப்பை நாளை தெரிவிக்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருப்பரங்குன்றம் சம்பவம் குறித்து அரசு அறிவித்த முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத்தலைவர்; ''திருப்பரங்குன்றம் சம்பவம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 27-ந் தேதியன்று சட்டமன்றப் பேரவையில் முன்னவர் அறிவித்த அரசாங்க முடிவுகளை அனைத்து வழக்கறிஞர்களும் நிராகரித்ததின் விளைவாகவும் தொடர்ந்து நீதிமன்றத்தை பகிஷ்காரம் செய்ய முடிவு செய்துள்ளதாலும், உயர்நீதிமன்ற காம்பவுண்டுக்குள் நகர போலீஸ் சட்டம் 41-வது விதி அமல்படுத்தியதின் விளைவாகவும் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்று கேட்டு திரு. ரா. உமாநாத், திரு. ரா. கிருஷ்ணன், திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. கு. ரமணி, திரு. மு. ஆறுமுகம், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. செ. சிவசாமி, திரு. எம். ஏ. லத்தீப், திரு. என். கிட்டப்பா, திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. சோ. அழகர்சாமி, திரு. கே. கந்தசாமி, திரு. ரா. மார்க்கபந்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், நானும் ஒரு உரிமை மீறல் பிரச்சினை குறித்து கொடுத்திருந்தேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, உட்காருங்கள்.

[1979 மார்ச் 30]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, 27 ஆம் தேதி அன்று இந்த அவையில் அவை முன்னவரும், நிதியமைச்சருமாக இருக்கின்ற நமது மதிப்பிற்குரிய திரு. மனோகரன் அவர்கள் கொடுத்த......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 8 பேர் பேச வேண்டி இருக்கிறது. அதைத்தான் தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேனேயல்லாமல் வேறெல்ல. ஆகவே சுருக்க மாகப் பேசவேண்டும்.

திரு. கு. ரமணி : அன்றைய தினம் அவர்கள் அவ்வாறு அறிக்கை கொடுக்கின்ற போது எங்களது கட்சியின் சார்பிலே நாங்கள் கமெண்ட்ஸ் கொடுக்கவில்லை. வக்கீல்கள் அவர்களுக்குள் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும், அதுதான் ஜனநாயக அமைப்பு, ஆனால் அவர்களுடைய நியாயமான முடிவுகளை நாங்கள் ஆதரிப்போம் என்பதை மட்டும் நாங்கள் அன்றைக்கே குறிப்பிட்டோம். ஆனால் அன்றைக்கு அமைச்சரவர்கள் அளித்த அறிக்கைக்குப் பிறகு நிலைமைகள் ஒழுங்காக மாறுவதற்குப் பதிலாக அதிலே சிக்கல்கள் அதிகமாக ஆகி இருக்கிறது என்பது நடைமுறை அனுபவம். ஆகவே தொடர்ந்து கோர்ட் பகிஷ்காரம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது என்பது உண்மை. அது மட்டுமல்ல, முக்கியமான இரண்டு விஷயங்கள் சொல்ல வேண்டி இருக்கிறது. ஒரு நீதிபதியை நியமித்து விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் நீதிபதியல்ல ஒரு வக்கீல்தான். அதாவது ஜில்லா கோர்ட்டுகளிலே நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர்கள் பின்னர் வக்கீல்களாக மாறுகிறார்கள். அப்படிப் பட்ட வக்கீலை மறுபடியும் நீதிபதியாக்கி விட்டோம் என்று அன்றைக்கு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார். அது மட்டு மல்ல இந்த மன்றம் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார். அமைச்சரவர்களுடைய பதிலை வைத்து அன்றைக்கு விவாதம் செய்வதற்கு உறுப்பினர்களாகிய எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே அன்றைக்கு அதனை விவாதிக்க வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால் அவர்கள் வக்கீல்களின் தலைமையைக் கலந்து, அரசு வக்கீல்களும் சேர்ந்து ஆலோசித்து அவ்வாறு நீதிபதி நியமிக்கப்பட்டிருப்பது சட்டப்படி சரியல்ல என்றெல்லாம் அவர்கள் தங்களுடைய பாயின்டை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி எல்லாம் ஆலோசிக்க வேண்டாமா ?

அடுத்து ஹைகோர்ட் காம்பவுண்டிற்குள், நகர போலீஸ் 41-வது சட்டத்தின்கீழ், நகர போலீஸ் பலர் கொண்டு போய் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு செய்யப்பட்டிருப்பது ஒரு சட்ட விரோதமான நடவடிக்கை. தலைமை நீதிபதி உட்பட பல நீதிபதிகள் கலந்தாலோசித்து அவ்வாறு போலீஸைக்

கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று கேட்டார்களா ? அப்படி அவர்கள் கேட்க நியாயம் இல்லை. அதுதான் பிறகு அனுபவத்தில் தெரிகிறது, அவர்கள் அத்தனை பேரும் அதாவது மாநிலம் முழுவதும் உள்ள வக்கீல்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அவர்களுடைய கூட்டத்தில் எடுத்த முடிவு. அதாவது நீதிபதிகளும், வக்கீல்களும் ஒன்றாகச் சேர்ந்து அரசாங்கத்தின் இந்த முடிவை நிராகரித்து இருக்கிறார்கள். நீங்கள் போட்ட கமிஷன் ஜுடிஷியல் கமிஷன் அல்ல. அடுத்து அந்தப் போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று சொல்லியதை மாற்றி, டிரான்ஸ்பர் செய்யலாம் என்ற நிலைமைக்கு வந்ததாகக் கேள்விப்படுகிறோம். உண்மை நிலை தெரியாது. போலீஸ் சட்டம் 41 வது பிரிவை அமுலாக்கி போலீஸ்காரர்களை நீதிமன்றத்துக்கு உள்ளே செல்ல அனுமதித்து இருக்கிறீர்கள். இது மிகவும் தப்பு. அந்த விஷயத்தில் அனைத்து வக்கீல்களும், நீதிபதிகளும் ஒன்றாக இருக்கிறார்கள். உண்மையாக நிலைமை சீர்படுத்தப்படவில்லை, நாங்கள் எதிர்ப்பார்த்த காரியங்கள் நடக்கவில்லை, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் அவர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஒரு பணியில் உள்ள நீதிபதியைக் கொண்ட விசாரணை கமிஷனை ஏற்படுத்த வேண்டும்.

போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது, போலீஸ் சட்டம் 41-வது விதியை போட்டு அங்கே நீதி ஸ்தலத்திற்குள் காவல் துறையினரை நிறுத்தியிருக்கிறார்கள். சிறையில் உள்ள கைதிகளைக் காப்பதுபோல், சிறைச்சாலை போல் அங்கே காட்சி அளிக்கின்றது. அந்த நிலைக்கு நீதி ஸ்தலத்தை போலீஸ் முகாமாகப் பட்டிருப்பதை மக்கள் கேவலமாக பேசுகிறார்கள். இந்த நிலையில் இருக்கிறபோது மக்கள் எப்படி நீதி நிர்வாகத்தில் நம்பிக்கைக் கொள்ள முடியும், இது மிகவும் தப்பு. நீதித்துறையை எந்த வித நிர்பந்தத்திற்கும் ஆளாக்காமல் சுதந்திரமாக செயல்படுத்துவதற்கு உரிய ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப் பற்றி சாங்கோபாங்கமாக விவாதிக்க அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வாரங்களாக தமிழ்நாட்டில் வழக்கறிஞர்களும், அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்களும், இன்றைக்கு எங்கும் நடைபெறாத அளவிற்கு போரட்டம் நடத்தி வருவதை உண்மையில் ஜனநாயகத்தில் அக்கறை கொண்டிருக்கிறவர்கள் கவலைப்படக் கூடிய ஒன்று, காரணம், நம்முடைய தலைமை நீதிபதி எப்படி இந்த விஷயத்தில் ஒரு உடன்பாடு செய்ய வேண்டும் என்ற சமரச கருத்தினை சொல்லியும் அதை அனுமதிக்காத காரணத்தால் இன்றைய தினம் வழக்கறிஞர்கள் மத்தியில்.......

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைமை நீதிபதி சொன்னதை ஏற்கவில்லை என்று அவர்கள் கூறிய வாதங்கள் அவையில் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்பதைத் தெரிக்வித்துகொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னது தலைமை நீதிபதி அவர்கள் ஒரு ப்ரபோசல் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் ப்ரபோசல் பற்றி விவாதிக்கிறபோது தலைமை நீதிபதி அவர்கள் கோர்ட் நடவடிக்கை பற்றிப் பேசவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சார், ஐ அக்ரி வித் மிஸ்டர் சாதிக்பாட்சா.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : அந்தக் கருத்தை தான் விமரிசித்தேனே ஒழிய. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லுங்கள். இன்னும் 6 பேர் பேச வேண்டி இருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஆகவே, இன்றைய தினம், போலீஸ் சட்டம் 41வது பிரிவு படி ஒரு சட்டத்தை போட்டு போலீஸ்காரர்களை அங்கே நீதி மன்றங்களில் நிறுத்தப்பட்டிருப்பது நாட்டிலே நடைபெறாத ஒன்று. நீதி மன்றங்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய மன்றங்கள். அதை மீறி இரும்புத் தொப்பி அணிந்த ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்கள் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதை எதிர்த்து வழக்கறிஞர்கள் உண்ணா விரதம் இருக்கிறார்கள்.

[முற்பகல் 10-30]

அதுமட்டுமல்ல, நீதிபதிகள் கூடி பேசிய அறையில் போலீஸ் கமிஷனர் அத்துமீறி பிரவேசித்து அவர்களை மிரட்டிக் கொண்டிருக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகளை நடத்துதிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இதைப் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிப்பதற்காக இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் போராட்டம் சம்பந்தமாக நாம் இந்த மன்றத்தில் பல தடவை விவாதித்து இருக்கிறோம். கடைசியாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்த மாமன்றத்தில் ஒரு அறிக்கையை வைத்தார்கள். அது ஒரு நீதிபதியை நியமித்து விசாரணையை நடத்தச் செய்வதற்கு அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாக அன்று அறிவித்தார்கள். ஆனால் அவர்கள் இப்போது நியமித்திருப்பது நீதிபதியை நியமிப்பதற்குப் பதிலாக ஒரு வழக்கறிஞரை நியமித்து இந்த வழக்கை விசாரிக்கும்படி சொல்லி

யிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. ரிட்டயரான ஒரு செஷன்ஸ் ஜட்ஜ் என்று சொன்னால் அவருக்கு சாதாரண வழக்கறிஞர் அந்தஸ்து மட்டும் தான். அது மட்டுமல்ல. இந்த அரசால் நியமிக்கப்பட்டிருக்கின்றவர் அவர் ஓய்வு பெற்றபிறகு வழக்கறிஞராக பணியாற்றுவதற்கு சன்னத் எடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. அப்படி சன்னத் பெற்ற உடனேயே ஒரு வெறும் வழக்கறிஞராக மாறியிருக்கிறாரே தவிர நீதிபதி அந்தஸ்து கிடையாது என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா வழக்கறிஞர்களும் இந்த மாமன்றத்திலுள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் கேட்டுக் கொண்டது என்னவென்றால் இதில் ஒரு நீதி விசாரணை வேண்டும் என்பதுதான். நீதி விசாரணை என்று சொல்லும்போது, சர்வீஸில் இருக்கின்ற உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்க வேண்டும் அல்லது ரிட்டயரான ஹைகோர்ட் ஜட்ஜாக இருக்க வேண்டும். அல்லது சர்வீஸிலுள்ள டிஸ்ரிக்ட் ஜட்ஜாக இருக்க வேண்டும் என்பது தான் பொருள் என்பதை இந்த அரசு அறியும், பொது மக்களும் அறிவார்கள். ஆனால் இந்த உண்மைக்கு மாறாக அரசு ஒரு நீதிபதியை நியமிப்பதற்குப் பதிலாக ஒரு வழக்கறிஞரே இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது வெந்த புண்ணில் வேலால் குத்துவது போல் இருக்கிறது. இது வழக்கறிஞர்களை ஏமாற்றுகின்ற செயலாகும். இதற்கிடையில், கடந்த 27-ம் தேதி அன்று சென்னை உயர்நீதிமன்ற விளாகத்திற்குள் போலீசார் குவித்து வைக்கப்பட்டு, உள்ளேயும் சென்று வழக்கறிஞர்களை மிரட்டியிருக்கிறார்கள். அங்கு போலீஸ் ராஜ்யம் அமைக்கப்பட்டு விட்டதோ என்று எண்ணுகிற வகையில் இருப்பதைப் பார்த்து உண்மையிலேயே நான் வேதனையோடு கூற விரும்புகிறேன். ஆகவே இந்த நிர்வாகம் போலீஸை பயன்படுத்தி நீதிமன்றத்திற்குள் சென்று.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவோ சொல்லிவிட்டேன. சக்கிரமாக முடியுங்கள்.

திரு ஜே. ஜேம்ஸ் : ஆகவே அங்கு 'கமிட்டெட் ஜூடிஷியரி' என்ற அளவில் வழக்கறிஞர்கள் வற்புறுத்தப்பட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை வந்திருப்பதால், இது முக்கியமாக இருக்கின்ற காரணத்தால், சபையின் இதர அலுவல்களை மாற்றி வைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று நான் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கறிஞர்களுடைய போராட்டம் சம்பந்தமாக கடந்த 24-ந் தேதி இந்த அவையில் அவை முன்னவராக இருக்கின்ற நிதி அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபோது, வழக்கறிஞர்கள் பிரச்னை சுமுகமாக தீரக்கூடிய வகையில், அவர்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு முடிவு தெரிவிக்கப்படும் என்று சொன்னார்கள். பின்

னால், நடந்து கொண்ட முறை, வழக்கமாக அரசு மேற்கொண்டு வருவதைப்போல், அவர்களுக்குள்ளே பிளவை உண்டு பண்ணி, எவ்வளவு என்னென்ன ஏற்பாடுகளை செய்ய முடியுமோ அவைகளை எல்லாம் இங்கு சொன்னதற்கு மாறாக, உறுப்பினர்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள். சுமுகமாக முடிக்கக்கூடிய இந்தப் பிரச்னையில் பெரிய போலீஸ் படையை நீதிமன்ற காம்பவுண்டுக்குள் நிறுத்தி பயமுறுத்தி அவர்களுக்கு எதிராக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவைகளை எல்லாம் வழக்கறிஞர்களுடைய கோரிக்கைக்கு எதிராக—வழக்கறிஞரை தாக்கிய போலீஸ் அதிகாரியை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள்—அதையெல்லாம் விட்டுவிட்டு முன்னால் இருந்ததைவிட மோசமாக அவரை வேலை நீக்கம் செய்யவும் இல்லை நீதிபதி மூலம் விசாரணை என்பதற்கு பதில் வெறும் வழக்கறிஞர் என்ற நிலையிலுள்ளவரை ரிட்டயரான ஜட்ஜ் என்று சொல்லும்போது வழக்கறிஞராகதான் அவர் இருக்க முடியும். அவரைக்கொண்டு ஒரு விசாரணை நடத்தலாம் என்று அறிவிப்பு செய்திருப்பது எங்களை எல்லாம் ஏமாற்றியதோடு மட்டுமல்ல. வழக்கறிஞர்களுக்கு செய்திருக்கக்கூடிய பாதகமான செயல் மட்டுமல்ல, நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற செயலாகவும் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இப்போது கொடுத்துள்ள அந்த அறிவிப்பை வழக்கறிஞர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. உங்கள் கட்சிக்காரர்களே, ஆளும் கட்சி வழக்கறிஞர்களே ஒத்துக்கொள்ளாமல் போராட்டம் நடத்துகிறார்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்பு அவர்களுக்கே திருப்தி அளிக்கவில்லை. ஏனென்னில் நீங்கள் அன்றைக்குச் சொன்னது அப்படியல்ல. சுமுகமாக, நல்ல முறையிலே நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லிவிட்டு, வழக்கறிஞர்கள் ஒத்துக்கொள்ளுகின்ற முறையிலே காரியங்கங் செய்வதாகச் சொல்லிவிட்டு, அதற்கு நேருக்கு மாறாக அங்கே போலீஸ் படையைக் கொண்டுபோய் குவிக்கக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். எனவே, மேலும் பதட்ட நிலைமையை ஏற்படுத்துகின்றதே அல்லாமல், நீங்கள் சொன்ன வாக்குறுதிபடி நடந்து கொள்ளவில்லை. அதற்கு மாறாக நடந்திருப்பதால், இதைப்பற்றியெல்லாம் விவாதிக்க, வழக்கறிஞர்களிடையே பதட்ட நிலைமை இல்லாமல் இருக்க இந்த அவையை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டும். எனவே, இந்த சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு காணாத அளவுக்கு இன்றைக்கு தமிழ்நாட்டில்அராஜக விளிம்பில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். ஒரு பெரிய கான்ஸ்டிடியூஷனல் கிரைசிஸ் என்று சொல்லக்கூடிய அளவிற்கு,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 மார்ச் 30

We are in the midst of a constitutional crisis.
இன்றைக்கு தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது. ஒன்று, வாக்குறுதி தரப்பட்டதற்கு மாறாக, நீதிபதி விசாரணை வைக்கப்படும் என்று அரசு சொன்னதற்கு மாறாக, ஒரு வழக்கறிஞரை வைத்து நீதி விசாரணை என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், நீதி விசாரணை இதுதான் என்று இந்த அவைக்கு அறிவித்திருக்கிறது. இது உண்மைக்கு மாறாக இந்த அவையை திசை திருப்புகிறது இந்த அரசு என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறேன். மற்றொன்று. வழக்கறிஞர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, இன்றைக்கு வழக்கறிஞர்கள் மீண்டும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இன்றைக்கு பதட்ட நிலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், எந்த நாட்டிலும், எந்த மாநிலத்திலும், எந்த நேரத்திலும், எந்தக் காலத்திலும், எந்த அரசாங்கத்தாலும், எப்போதும், எங்கும் நடைபெறாத அளவுக்கு இன்றைக்கு 1000 போலீஸ்காரர்களுக்கு மேல் ஹைகோர்ட் வளாகத்தில் கொண்டு சென்று, அங்கே போலீஸ் சட்டத்தை 41-வது விதியை பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அங்கே இருக்கின்ற உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களின் அனுமதி இல்லாமல், வேண்டுகோள் இல்லாமல் போலீஸ்காரர்களை அங்கே அழைத்துச் சென்று, 41—வது விதியை அங்கே பிரகடனப்படுத்தி, அந்த இடத்தில் 4 பேர்களுக்கு மேல் யாரும் கூடவோ, ஊர்வலம் நடத்தவோ அல்லது நான்கு பேர்களுக்கு மேல் அங்கே கூடிப் பேசுவதையோ தடை செய்திருக்கிறார்கள். ஒரு வக்கீல் தன் கட்சிக்காரர்களுடன் அங்கே 4 பேர்களுடன் செல்வதற்கோ, கட்சிக்காரர்கள் நான்கு பேர்களுக்கு மேல் அங்கே சென்று வக்கீலைப் பார்ப்பதற்கோ முடியாத அளவுக்கு நீதி மன்றத்தின் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்த அரசாங்கம் செய்திருப்பதால், அங்கே அராஜக நிலைமையும், ஒரு பதட்டமான நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை அங்கே பிரகடனப்படுத்தி யிருப்பதாலும், அங்கே ஒரு பெரிய அராஜக நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே போலீஸ் கமிஷனர் அவர்களே,

He has no business to enter into the High Court campus என்று சொல்லக்கூடிய ஒரு மிகப் பெரிய ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திலே, 1921 லே ஒரு அக்ரிமெண்டு நடந்தது. அட்வகேட்டுகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே 1921 ஆம் ஆண்டிலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசுவதன் மூலம் பிரச்னையை வளர்க்காதீர்கள். பிரச்னை சுமுகமாக ஆவதற்குப் பேசுங்கள். நீங்கள் கோபப்படாதீர்கள் - அமைதியாக சொல்லுங்கள். பிரச்னையை பெரிது படுத்தாதீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் பெரிது படுத்தவில்லை. இந்த அரசாங்கம் தான் பெரிது படுத்துகிறது. விஷயம் எல்லாம் தெரிந்து போய் விட்டது.

[முற்பகல் 10-40.]

ஆகையால் தலைவர் அவர்களே, 21-வது ஆண்டு ஒப்பந்தத்தை மீறி வழக்கறிஞர்கள் பயமுறுத்தப்படுகிறார்கள். 'உங்களையெல்லாம் வெளியேற்றுவோம்' என்ற நோட்டீசை ரிஜிஸ்ட்ரார் கொடுத்திருக்கிறார். யாருடைய அனுமதியோடு கொடுத்தார் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இந்த நிலைமை சரியான நிலைமையல்ல. மாநிலத்தின் பெரிய கான்ஸ்டிடியூஷனல் கிரைசிஸ் ஏற்பட்டிருக்கும் காரணத்தால் ஒரு நாணயமான அரசாங்கமாக இருந்தால் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும். நீதிமன்றத்திலே தலையிட்ட அரசாங்கம் இந்த உலகத்திலேயே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிக்கிரம் முடியுங்கள், ஒத்துழையுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : அரசாங்கத்தை நான் வேண்டிக் கொள்வது—

The Goverment has completely failed to retain the individual identity of the Judiciary guaranteed by the Constitution. It has grossly interfered and has crippled the Judiciary. Not only that, it has used its official machinery to hamstring and jeopardise the Indian Constitutional independence and sovereignty of Judiciary. As such, this Government has no power, whatsoever, no Constitutional competency whatsoever, no Constitutional right to continue in office. It should forthwith resign, or the Government of India must see that this Government is dismissed.

ஆகவே, இதுபற்றி விவாதிக்க இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

• திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சுமுகமாக முடியவேண்டுமென்பதற்காகத்தான் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சுமுகமாக முடியாததற்கு காரணம் என்ன. அந்த வக்கீல்கள் கோரிக்கை நீதி விசாரணை வைக்க வேண்டுமென்பது. நீதிபதி யார் என்று சொல்லும்போது அரசு சட்டத் துறையைக் கலந்து ஆலோசித்தால் தெரியும். Either a sitting District Judge or retired High Court Judge என்று சொல்லப்படுகிறது.

இப்போது கூட காலம் கடந்துவிடவில்லை. இப்போதுகூட அனவரதம் பிள்ளையை மாற்றிவிட்டு சிட்டிங் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜைப் போடலாம் அல்லது ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜைப் போடலாம்.

இப்போது அந்த போலீஸ் அதிகாரியை சஸ்பெண்ட் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைக் கூட விட்டுவிட்டு அவரை வெளி மாவட்டத்திற்கு மாற்றினால் போதும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது சாதாரணமான கோரிக்கை. சுமூக மாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விடலாம்.

நேற்று கலைஞரோடு நான் வழக்கு மன்றத்திற்குப் போன போது பார்த்தேன். குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் கூட இல்லாத அளவுக்கு போலீஸ் போடப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு டெரரிஸம் ஏற்படுத்துவது போல் பயமுறுத்துவது போல் போலீஸைப் போட்டிருக்கிறார்கள். இப்போதாவது ஜுடிஷியரி அசர்ட் செய்து போலீஸை வாபஸ் செய்வதற்காக ஜுடிஷியரியை மனதாரப் பாராட்டுகிறேன். இன்டிபென்டன்ஸ் ஆப் ஜுடிஷியரி காப்பாற்றப்பட வேண்டும். முன்னவர் அவர்கள் பேசும்போது இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது என்று எதிர்பார்ப்போம் என்றார். ஆனால் அது நீடித்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் அளித்த அறிக்கை வக்கீல்களைத் திருப்திபடுத்தவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் நெல்லையில் சொன்னதாகப் படித்தேன்— வக்கீல்கள் நேரடியாக தலைமை நீதிபதியைச் சந்தித்து அவர் களுடைய கருத்தைத் தெரிந்து கொள்வது நல்லது என்று சொன்ன தாகப் பார்த்தேன. பேச்சு வார்த்தை நடைபெறுவதாகத் தெரிகிறது. தலைமை நீதிபதி ப்ரோபோசலை ஏற்றுக் கொள் வதா இல்லையா என்பதற்கு அந்த விவரங்கள் தெரியவில்லை. இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டியாக வேண்டும்.

ஜுடிஸியரியை மிரட்டுவது எவ்வளவு ஆபத்தானது. எமர் ஜன்சி காலத்தில் கூட இவ்வளவு கடுமையை பார்க்கவில்லை. ஹைகோர்ட் காம்பவுண்டுக்குள் போலீஸைப் பார்க்கும்போது ஏதோ அங்கு பெரிய கலவரம் நடைபெறுகிறதோ என்ற எண்ணம் ஏற்பட்டது. அதற்கு முன்பு அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்து கால் அட்டென்ஷனாக கன்வர்ட் பண்ணிய நேரத்தில் நான் '' இந்த அரசாங்கம் வக்கீல்கள் அசோசியேஷ னோடு பேச வேண்டுமென்று சொன்னேன். இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. அட்வகேட் அசோசியேஷன் பார் கவுன்சில், நீதிபதிகளை எல்லாம் கலந்து பேசி இப்போது கூட முடிவு காண வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கம் பிரிஸ்டிஜ் ஆக எடுத்துக் கொள்ளாமல், கான்ஸ்டிடியூஷனல் கிரைசிஸ் என்றெல்லாம் சொல்லிவிட்டார்களே என்று எடுத்துக் கொள்ளாமல் சுமுகமான நிலை ஏற்பட வழி செய்ய வேண்டும் ''. It will be swept away by the constitutional crisis ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து கடந்த சனிக்கிழமையன்று எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்கள் அனைவரும் வழக்கறிஞர்கள் சார்பாக முறையீட்டை வைத்து, வழக்கறிஞர்களுக்கும், காவல் துறையினருக்கும் ஒரு நீண்ட மோதுதலை நிலையானதாக ஆக்கிவிடக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று வலியுறுத்தினோம். அதை வலியுறுத்தியதற்கு மேலும் வலிமையூட்டுகின்ற வகையில் இந்த அவையிலே அமைதியான முறையிலே நாங்கள் எழுந்து நின்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற வரையில் நாங்கள் உட்காருவதாக இல்லை என்றும் குறிப்பிட்டோம். அப்போது முதல் அமைச்சர் அவர்களும் இந்த மன்றத்திலே இருந்தார். அப்போது அவை முன்னவர் முதலமைச்சர் சார்பாகப் பொறுப்பேற்றுக்கொண்டு பதில் அளித்தார். செவ்வாய் அன்று மாலைக்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று குறிப்பிட்டார்கள். நான் கூட சொன்னேன். செவ்வாய் வெறும் வாயாகி விடக் கூடாது என்று. அவை முன்னவர் அவருக்கே உரிய தமிழ் சொல்லாடல் திறமையின் காரணமாக செவ்வாய்க்கிழமையன்று நீ வெல்வாய் என்று சொன்னார். நானும் அதற்கு அடிக்கடி நீ அப்படித்தான் சொல்வாய் என்றேன். ஆனால் நான் அன்றைக்குச் சொன்னது தான் உண்மையாகிவிட்டது. பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதற்கு பதிலாக அரசின் சார்பாக ஒரு அறிக்கையைத் தான் படித்தார்கள். பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அவர் சொன்னதை எப்படி நாங்கள் எடுத்துக் கொண்டோம். எப்படி நம்பினோம் என்றால், எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் வழக்கறிஞர்களின் பிரதிநிதிகளையும், அரசாங்கத்தினுடைய சார்பில் அமைச்சர்களையும் உட்கார வைத்துப் பேசி திங்கள் அல்லது செவ்வாய்க் கிழமைக்குள் இந்தப் பிரச்சினை முடிந்து வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குத் திரும்பினார்கள் என்ற நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையோடு தான் அவை முன்னவர் அளித்த வாக்குறுதியை அன்றைக்கு நாங்கள் எடுத்துக் கொண்டோம். ஆனால், இன்றைக்கு அதற்கு மாறாக நிலைமைகள் தலைகீழாகி விட்டதைத் தான் பார்க்கிறோம். நேற்றுக் கூட ஒரு வழக்கு சம்பந்தமாக நான் நீதிமன்றத்திற்குச் சென்றபோது ஒரு ராணுவ முகாமிற்குள் நுழைகிறோமோ என்று ஐயம்படத் தக்க அளவிற்கு போலீஸார் நூற்றுக் கணக்கில் அங்கே குவிக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன். அவைகளைப் பற்றி எல்லாம் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். முதலமைச்சர் திருநெல்வேலியிலே நிருபர்களிடத்திலே பேசியதாக தினத்தந்தி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. '' வக்கீல்கள் நேரடியாக தலைமை நீதிபதியைச் சந்தித்து அவருடைய கருத்தைத் தெரிந்து கொள்வது நல்லது '' என்று முதலமைச்சர் பதில் அளித்து இருக்கிறார். அது எவ்வளவு சரியான தகவல் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் கேட்பது எல்லாம் ஒரு உயர் நீதி மன்ற நீதிபதியை, அவர் ஓய்வு பெற்றவராக இருந்தாலும், நியமித்து அவரைக்

[திரு. மு. கருணாநிதி] [1979 மார்ச் 30

கொண்டு ஏன் இந்த விசாரணையை நடத்தக் கூடாது என்பது தான். ஆளுங்கட்சியினுடைய பொதுச் செயலாளர் கூட பேசிய தாக பத்திரிகையிலே செய்தி படித்தேன். நாவலர் அவர்கள் பேசியதாக, அண்ணாமலைப் பல்கலைகழகச் சம்பவம் பற்றி கழக ஆட்சியிலே ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிக்கவில்லையா என்று கேட்டு இருக்கிறார். அப்போது நியமிப்கப்பட்டது உயர் நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி. இப்போது வழக்கறிஞர்கள் பிரச்சினைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டு இருப்பது ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி. இங்கே நண்பர் ஜேம்ஸ் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல. ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி வழக்கறிஞராகிவிடுகிறார். மாவட்ட நீதிபதி இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறவரைப் போட வேண்டும் அல்லது ஓய்வு பெற்றவரைத்தான் போடவேண்டுமென்றால் உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியைப் போட வேண்டும், இது வழக்கறிஞர்கள் சமரஸத்திற்கு வர இந்த அரசுக்கு நாங்கள் எடுத்து வைக்கிற யோசனை. சஸ்பென்ட் செய்ய முடியாது, தற்காலிக வேலை நீக்கம் கூடாது என்று அரசு முடிவைத் தெரி வித்து விட்ட காரணத்தாலே எதிர்க் கட்சிகளின் சார்பாக எங்க ளுடைய சமரஸ யோசனை, அவர் திருப்பரங்குன்றத்திலிருந்து தல்லாகுளத்திற்கு மாற்றிய நிலைக்கு முற்றிலும் மாறாக வேறு ஒரு மாவட்டததிற்கு அவரை வேலை மாற்றம் செய்கிறோம் என்று அரசு உறுதி அளித்தால் இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடும். ஜனநாயகத்திலே நீதித்துறை, சட்டமன்றத் துறை, நிர்வாகத் துறை இந்த மூன்றும் ஒரு அரசின் முக்கியமான அம்சங்கள். அதிலே ஒரு துறை இன்றைக்கு ஒழுங்காகச் செயல் படாத அளவிற்கு, செம்மையாக நடைபெறாத அளவிற்கு நிர்வாகத் துறை காரணமாக இருக்கிறது என்றால் அதை சட்ட மன்றத் துறை தான் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். சட்டமன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சிகள் அனைத்தும் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு அரசாங்கத்தோடு ஒத்துழைக்கின்ற வகை யில் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்தக் கோரிக்கைகளை

[முற்பகல் 10-50]

எடுத்து வைக்கிறோம். ஓய்வு பெற்ற நீதிபதியைத்தான் போட வேண்டுமென்றால் ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற நீதிபதி யைப் போடுங்கள், அவரை வேலை நீக்கம் செய்ய முடியாது என்றால்—சஸ்பென்ஷன் செய்ய முடியாது என்றால்— வேறு ஒரு மாவட்டத்திற்காவது அந்த அதிகாரியை மாற்றுங்கள், இதற் காகவாவது இந்த அரசு உடன்படுமா என்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்திலுள்ள மற்றக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர் களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். ஆகவே, காலத்தை முன்னிட்டு நான் சுருக்கமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1979 மார்ச் 30] [திரு. கே. கந்தசாமி]

இந்தப் பிரச்னையில் எழுந்துள்ள சட்டப் பிரச்னை என்று நான் கருதுகிறேன். வழக்கறிஞர்கள் சங்கத் தலைவரும் மற்ற ஏனைய மூதறிஞர்களும் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களையும் சட்டத்தையும் பார்க்கிறபொழுது, 'A retired S ssions Judge is considered to be only a practising lawyer' என்று கருதுகிறார்கள் என்று தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். அப்படியிருக்கிற பொழுது அரசு அன்றே அறிவித்த அறிவிப்பில் நீதிபதியை வைத்து விசாரணை செய்கிறோம் என்று ஒப்புக்கொண்டது. அப்படி நீதிபதி என்று யாரைச் சட்டம் கருதுகிறதோ அவரைப் போடுவதில் என்ன தயக்கம் இருக்கிறது என்பதிலேதான் எனக்கு ஐயப்பாடு. மற்றவர்கள் கேட்கிறார்களா இல்லையா என்பதைவிட, அரசு கொடுத்த உறுதிமொழிக்கேற்ப, ஒன்று. 'Sitting Sessions Judge' போட வேண்டும், அல்லது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைப் போடுங்கள் என்பதுதான் குறைந்தபட்ச கோரிக்கை. இதில் கருத்து வேறுபாடு இல்லாமல் மாண்புமிகு அமைச்சரவர்கள் முதல்வரவர்களுக்கு எடுத்து தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் நாடு தழுவிய பொதுப்பிரச்னையாக இது இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் தெரிவித்ததைப் போல் பிரச்னையின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, நாட்டில் அமைதிக்கும், சட்டத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ என்று மக்கள் ஐயப்படுகின்ற அளவிற்கு, நீதிமன்ற கட்டிடத்தில் போலீசாரை அனுமதிக்கலாமா என்று ஐயப்பாடாக இருக்கிறது. இதுகுறித்து நான் தெளிவாகப் பார்க்கவில்லை. City Police Act enforcement என்றுதான் விளக்கம் கிடைக்கிறது. 'On a special request fr m the Officer in-charge of building or a public Place, the P lice may be sent for protecting the life and property.' என்ற ஒரு பொது விதியின் கீழ் வேண்டுகோளின் காரணமாக ரிஜிஸ்திராரின் வேண்டுகோளின் காரணமாக அனுப்பியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எது எப்படியிருந்தாலும் நீதி நிர்வாகத்தில் சுமுகமான நிலை நிலவுவதற்குப் பதிலாக போலீசாரின் தலையீடு இருக்கிறதோ என்ற அச்சத்தை விளைவிக்கிறது என்ற பயங்கரமான நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலை தொடராமல் உடனடியாகச் சுமுகமாகத் தீர்வு காண்பதற்காக வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக நாங்கள் வேண்டிக் கொண்டதன் பேரில் நீதிபதியை, சட்ட விளக்கத்திற்கு உட்பட்ட முறையில் அமைத்து இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும். ஒன்று இந்த அறிவிப்பைக் கொடுக்க வேண்டும், இல்லையேல், அரசுக்கு ஆலோசனை கூறுகின்ற அளவிற்கு விவாதிப்பதற்காக அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, பார்-கவுன்சில் சட்டப்படி ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள், நாட்டினுடைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிறகு அவர் ரிடையர் ஆன

வுடன் பார் கவுன்சில் சட்டப்படி அவர் மெம்பர் ஆகக் கூடாது. ஆனால், உச்ச நீதிமன்றத்திதில் சுப்ரீம் கோர்ட்டிலே—மட்டும் அவர் ஆஜர் ஆகலாம். ஆனால் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்களும், மற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற பிறகு, பார் கவுன்சில் ஆக்ட் படி, 'I want to resume my practice' என்று ஒரு மனு கொடுத்தால் அவரை வழக்கறிஞராக ஏற்றுக் கொள்ளலாம் என்று சட்ட விதி இருக்கிறது.

நீதிபதி விசாரணை வேண்டுமென்று வழக்கறிஞர்கள் வைத்த கோரிக்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்றுக் கொண்டபொழுது, அந்த நீதிபதியைப் போட்டிருக்கிறோம் என்று சொன்னது. நான் இதிலே ஒன்றை இந்த அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்த்திற்கு யாரோ தவறான முறையில் சட்ட விதிகளை விளக்குகிறார்கள். தவறான தகவல் களை அரசாங்கத்திற்குத் தருகிறார்கள். அதனால்தான் இந்த வினையே வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதில் அரசாங்கத்திற்குக் கௌரவப் பிரச்னை இருப்பதாகவும் நான் கருதவில்லை. ரிடையர்ட் டிஸ்ட்டிரிக்ட் ஜட்ஜ்கூட நீதிபதி அந்தஸ்து என்ற உரிமை உடையவர் என்ற தவறான தகவலை இந்த அரசாங்கத்திற்குக் கொடுத்து, இந்த அரசாங்கம் ரிடையர்ட் ஜில்லா நீதிபதியை நியமித்திருக்கிறது.

சட்ட முறைப்படி அவர் நீதிபதி அந்தஸ்தைப் பெறமாட்டார். ஆகையினாலேதான், பார் கவுன்சில்லே கூட சிட்டிங் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அளவிலே நீதிவிசாரணை போட வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். அல்லது ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜை நீதிபதி அஸ்தஸ்திலே உள்ள அவரைப் போடவேண்டும். ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ், 'Till he dies, he continues to be a Justice and he is addressed to be 'Justice' என்று சட்டத்திலே விதிகள் இருக்கின்ற காரணத்தாலே இந்த அரசாங்கம் அறிவித்த கொள்கைப்படி நீதி விசாரணையை, சிட்டிங் டிஸ்டிரிக்கட் ஜட்ஜைக்கொண்டோ, அல்லது ரிடையரான நீதிமன்ற நீதிபதியைக் கொண்டோ, நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம்.

அந்த போலீஸ் அதிகாரியை சஸ்பென்ட் செய்யவேண்டு மென்ற கோரிக்கையைக் கூட வக்கீல்கள் விட்டிருக் கிறார்கள். ஆனால், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரியை, அந்த மாவட்டத்திலேயிருந்து வேறு மாவட்டத்திற்கு மாற்றுங்கள் என்று — தமிழகத்தினுடைய உச்ச நீதிபதி அவர் கள்—கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் போலீஸ் அதிகாரிக் காக பரிந்துகொண்டு அந்த இடத்திலேயே வைக்கவேண்டுமென்ற அவசியம் அரசாகத்திற்கு என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன். ஆகவே, உயர்நீதிமன்ற நீதிபதி

கேட்டுக்கொண்டதற் கிணங்க வேறு மாவட்டத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சஸ்பென்ஷனைக்கூட வக்கீல்கள் கேட்கவில்லை.

அதிலே, நிலவரங்கள் என்னவென்றால், I can use one word வழக்கறிஞர்கள் சப்-இன்ஸ்பெக்டரைச் சந்திக்கிறார்கள் ஒரு விஷயமாக

* * *

அதனுடைய தமிழாக்கதை நான் சொல்ல விரும்பவில்லை. அது விரசமான.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே சொன்னது, சுமுகப்படுத்துவதற்கு தாங்கள் பேசவேண்டுமே தவிர, மற்ற நிகழ்ச்சிகளை இங்கே பேசுவதற்கு நான் அனுமதிக்க இயலாது. சொன்னதையேதான் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். விரசமாக இருக்கும் என்று தாங்கள் வேறு மேற்கோள் காட்டியதை நீக்கிவிடும்படி உத்தர விடுகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: ஒரு கேவலமான வார்த்தை ஐயா.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் அதை சொல்லக் கூடாது. மறுபடியும் அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: அவர்களை அணுகி மற்றவர்களுக்குக் கீழ்படிகின்ற, தலைகுனிந்து செல்கின்ற நிலைக்கு எங்களை கேவலப்படுத்தக்கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு இந்த வழக்கறிஞர்கள் எடுத்து வைத்திருக்கின்ற கோரிக்கையை, அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற கோரிக்கை கையை, சட்டமுறைப்படி நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்,. ரிடையர்ட் டிஸ்ரிக்ட் ஜட்ஜ்தான் போட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால், தவறான அட்வைஸின் காரணமாக, ரிட்டையர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜைப் போட்டிருக்கிறார்கள். ஜூடிஷியல் என்குயரி என்பதற்கு ஏற்றாற் போல டிஸ்டிரிக்சிங், டி ஜட்ஜையோ அல்லது ரிட்டையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜையோ போடுவதால் வேறு எந்தவிதமான நிலைமையும் வந்து விடாது. நீங்கள் அறிவித்ததை அமுலாக்குங்கள் என்று கேட்டுக் கொண்டு வேறு மாநிலத்திற்கு மாற்றுவதன் மூலமாக (குறுக்கீடு) வேறு மாவட்டத்திற்கு போலீஸ் அதிகாரியை மாற்றுவதன் மூலமாக, சுமுகமான நிலை உருவாகும். இந்த

* மாண்புமிகு பேரவைத் தலைவரவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவையின் இதர அலுவல்களைக் கூட ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை, அரசிடமிருந்து இந்த இரு கோரிக்கைகளுக் கான அறிவிப்பு வந்து விட்டால்—நாங்கள் திருப்தி அடைவோம் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னைப்பற்றி அடிக்கடி இந்த மன்றத்தில் பேசப்பட்டு அவ்வப்போது இந்தப் பிரச்னையின் நிலைமைகள் பற்றி எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சில புதிய நிலைமைகளைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர் களும் மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே சில கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் முதலில் தெரிவிக்கவிரும்பு வது, சட்ட நுணுக்கங்கள் எல்லாம் தெரிந்த வழக்கறிஞராக நான் இல்லை. ஆனாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் காவல் துறையினர் ஆனாலும், வழக்கறிஞர் துறையினர் ஆனாலும், ஒருவருக்கொருவர் நல்ல உறவுகொள்ளவும் அதே நேரத்தில் ஒருவரையொருவர் கண்ணியமாக நடத்துவதுமான சூழ் நிலையை உருவாக்கவேண்டியது இம்மன்றத்திலுள்ள அனைவ ருடைய கடமை என்பதையும், அரசினுடைய கடமை என்பதை யும் நான் மனதார ஏற்றுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களும் பேசுகிறபோது நம் முடைய முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் சென்று இருந்த போது, பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் வழக்கறிஞர்கள் பிரச்னை சம்பந்தமாக தெரிவித்த கருத்தினை எடுத்துச்சொன் னார்கள். அதிலே அவர்கள் குறிப்பிட்டு இருப்பது, நெல்லை யில் பேட்டி அளித்த போது, வக்கீல்கள் நேரடியாக தலைமை நீதிபதியைச் சந்தித்து, அவர்களது கருத்து என்ன என்று தெரிந்து கொள்வது நல்லது என்று பதில் அளித்து இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர் அப்படி பதில் அளித்ததற்கு காரணமே அரசு தனது கௌரவத்தைக் காட்டவேண்டும் என்ற காரணத் தாலோ அல்லது பிடிவாதம் காட்ட வேண்டும் என்ற காரணத் தாலோ நடந்து கொள்ளவில்லை என்பதற்காகத்தான். இந்தப் பிரச்னையில், குறிப்பாக அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும், ஒரு தீர்வு காணவேண்டும் என்று திரும்பத திரும்ப வற்புறுத்தி, அன்றைக்கு ஒரு அமைதியான சத்தியாக்கிரஹத்தை முன் உதாரணமாக செய்து காட்டியபோது நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் இந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்படும் என்று அறிவித்தார்கள்.

காவல் துறை ஏதோ தலைமை நீதிமன்றத்திற்குள் புகுந்து இருக்கிறார்கள், அங்கே நிறையபேர் காவல் துறையினர் வைத்து இருக்கிறார்கள், அங்கே இதுவரையில் இல்லாத அளவிற்கு, வர

லாற்றில் இல்லாத அளவிற்கு, நம்முடைய மாண்புமிகு லத்தீப் அவர்கள் மொழியில் சொல்லப்போனால், எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும், எந்த அரசும் என்று இப்படி அடுக்கிக் கொண்டே போனால், அவர் கூட கடைசியாகச் சொன்னால், இப்படி எல்லாம் செய்து இருக்கிற அரசு இருக்கலாமா என்று கேட்டார், ராசினாமா செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ராசினாமா செய்யவேண்டும் என்பதை மறுத்தால் மத்திய சர்க்கார் டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று அவருடைய ஆசையை தெரிவித்துக்கொண்டார். நான் அதைப்பற்றிச் சொல்ல பிறகு வருகிறேன்.

இந்தப் பிரச்னை பற்றி ஏன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படி தெரிவித்தார்கள் என்றால் அரசு எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் கூடுமான வரையில் நீதித்துறையோடு கலந்து எடுக்கப்பட்டது என்று தெரிவிப்பதற்கு அவர் இப்படி சூசகமாகக் குறிப்பிட்டார்கள்.

ஒரு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி இந்தப் பிரச்னையை விசாரிக்க போடலாமா, அது சட்டப்படி நீதி விசாரணை ஆகுமா என்று கேட்டார்கள். ஆனால் இந்த மன்றம் நன்கு அறியும். பல்வேறு சம்பவங்கள் இப்படி நேருகிறபோது ஓய்வு பெற்ற நீதிபதியை நாம் போடுவது வாடிக்கை. மாவட்ட நீதிபதி அல்லது உயர்நீதி மன்ற நீதிபதி போடப்பட்டு, அவர்கள் தகவல்கள் அறிந்து, உண்மையை அறிந்து தருகிற அறிக்கையை இந்த மாமன்றம் ஏற்றுக்கொண்டது உண்டு. ஓய்வு பெற்ற நீதிபதி வழக்கறிஞர் ஆகிறார் என்று சொன்னார்கள். அது இன்னும் வாதத்தை வலிவுபடுத்துகிறதே தவிர வலுவிழக்கச்செய்யவில்லை. காவல் துறை, வழக்கறிஞர் துறை என்று இரு பிரிவுகளாக எடுத்துப் பார்க்கிறபோது, ஒரு வழக்கறிஞரை நீதிபதியாக போடுகிறோம் என்றால் காவல் துறை எதிர்க்கவேண்டுமே தவிர வழக்கறிஞர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பது எனக்கு உண்மையிலேயே புரியவில்லை. ஒரு வேளை சட்ட நுணுக்கம் தெரிந்த வழக்கறிஞர்களுக்கு இது தெரிந்து இருக்கலாம். எனக்குத் தெரியவில்லை. அவர் வழக்கறிஞர் என்று சொல்லிய பிறகு, வழக்கறிஞரைப் போடுகிறீர்கள் என்று சொல்கிறபோது, நியாயமாக எதிர்க்கவேண்டியவர்கள் காவல் துறையினர் தான். வழக்கறிஞர்கள் எதிர்க்கிறார்கள் என்றால் என்ன நிலைமை. பெரும்பாலானவர்கள் நல்ல முடிவு என்று சொல்கிறார்கள். ஒருசிலர் அந்த முடிவை மேற்கொள்ளமுடியாது என்று சொல்கிறார்கள். ஒரு சிலரின் பிடிவாத நடவடிக்கையின் காரணமாக இத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது இந்தப் போராட்டத்தில் மட்டுமல்ல, பல்வேறு போராட்டங்களில் நியாயத்தை பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டாலும், ஒரு சிலர் அதிலே தீவிரம் காட்டுவதும், எதிர்ப்பு தெரிவிப்பதும் அல்லது அதன்

மூலம் சில ஆதாயங்களைப் பெறவேண்டும் என்பதற்காக மேலும் பிரச்னைகளைச் சிக்கலாக்குகிறார்கள். இங்கே காவல் துறைப் பற்றிச் சொல்லி, நீதிமன்றத்திற்குள் அனுப்பலாமா என்று கேட்டார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: வழக்கறிஞர்கள் ஜுடிசியல் என்கொயரி வேண்டும் என்று சொல்கிறார்கள். வழக்கறிஞர் தான் என்று அரசு எடுத்துக் கொண்டால் ஜுடிசியல் என்கொயரி என்று சொல்லாமல் வழக்கறிஞர் என்கொயரி என்று தானே சொல்லவேண்டும். அது ஜுடிசியல் என்கொயரி ஆகாது, நிச்சயம் ஆகாது.

திரு. துரை முருகன்: ஒரு ஓய்வு பெற்ற நீதிபதிபோடுவ தாலே அரசாங்கத்திற்கு இருக்கும் சங்கடம் என்ன? நாங்கள் வக்கீலைப் போட்டு இருப்பதாலே உங்களுக்குத்தானே லாபம் என்று கேட்டார்கள். நீங்கள் உயர்நீதி மன்ற நீதிபதியைப் போடுவதாலே உங்களுக்கு என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது.

திரு. கு. ரமணி : ஒரே ஒரு சின்ன விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பேசுவது கூடாது. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் பேசியபின்னர், அமைச்சர் எழுந்து பேச ஆரம்பித்த பிறகு, கேள்வி கேட்பது சரியல்ல. அமைச்சர் பேசட்டும், உட்காருங்கள்.

திரு. கு. ரமணி: அவருக்கு உதவியாகத் தான் சொல் கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், இதுபோன்ற விஷயங்களுக்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளைத்தான் நாங்கள் போட்டிருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன் னார்கள். அந்த கமிஷன் எல்லாம் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்டு போடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பிரச்னைக்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியைத்தான் போட் டிருக்கிறார்கள். அதை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் குறிப்பிட்டது போதும் ; புரிந்துகொண்டேன் ; உட்காருங்கள்.

திரு. கு. ரமணி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் அமைச்சருக்கு உதவியாகத்தான் சொல்கிறேன். அவர்கள் சொல்லும்போது ஒரு சில தீவிரவாதிகள் என்று சொன்னார்கள். வக்கீல்கள் பூராவுமாக ஒன்றாகச் சேர்ந்திருக்கிற பிரச்னை இது

1979 மார்ச் 30] [திரு. கு. ரமணி]

(மணியடிக்கப்பட்டது) இந்தப் பிரச்னையில் இப்படிச் சொல்லலாமா. தீவிரவாதிகள் என்பது யார்? அவர்கள் அப்படி சொல்வதை மாற்றிக்கொள்ள வேண்டும். பிரச்னையைச் சுமூகமாக தீர்க்க வேண்டுமென்று சொல்லுகிற இந்த நேரத்தில் இப்படிப் பேசுவதே பிரச்னையை பெரிதாக ஆக்கிவிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீவிரவாதிகள் என்பதால் தங்களுக்கு இதில் ஒன்றும் பங்கு இல்லையே. தாங்கள் ஏன் குறுக்கிட வேண்டும்? தங்களுக்கு அதில் சம்பந்தம் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார்கள். அரசு தலைமை நீதிபதியை கலந்து கொண்டுதான் இப்படிப்பட்ட முடிவை எடுக்கிறது; இந்தப் பிரச்னையில் தீர்வு காண விரும்பியது என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் தலைமை நீதிபதி இந்தப் பிரச்னையில் தீர்வு காண என்ன சுமூகமான கருத்தைக் கூறினார் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைமை நீதிபதி அவர்கள் இது சம்பந்தமாகத் தெரிவித்தது, 'ஜுடிஷியல் என்குயரி' யைப் பொறுத்த மட்டில் ஏற்கெனவே 'போர்ட் ஆஃப் என்குயரி' என்று சொன்னது தேவையில்லை; ஒருவரைப் போட்டால் போதும் என்று குறிப்பிட்டார்கள்.

அந்த சப் இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டுமா அல்லது அங்கேயே வைத்துக்கொள்ள வேண்டுமா என்பது நிர்வாக சம்பந்தப்பட்ட பிரச்னை; அதில் தான் ஆலோசனை சொல்ல விருப்பவில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஏனென்றால் அது எக்சிகியூட்டிவாக இருக்கிறப் பிரச்சனை. (குறுக்கீடு) இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே காவல் துறையினர் தானாகவே அங்கே போய் தலையிட முடியாது; அப்படிச் செய்யவில்லை. 18—3—1979 அன்று அன்றையதினம் தலைமை நீதிபதி அவர்கள் டெல்லிக்கு சென்றுவிட்டார்கள். நீதிபதி இஸ்மாயில் அவர்கள் அந்தப் பொறுப்பில் இருந்தார்கள். அன்றையதினம் நீதிபதிகள் இருந்த அந்த கான்ஃபிரன்ஸ் ஹாலில் கற்கள் வந்து விழுந்தன என்பதைப்பற்றியும், போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்பதைப்பற்றியும் அவர்களே அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினார்கள். நான் அதை மட்டும் சுருக்கமாகச் சொல்கிறேன்.

I request you to kindly give necessary directions to the police for their assistance, so that personal safety of the Judges and the staff, and the safety of the properties and records in the Court buildings are assured.

கோர்ட்டிலே இருக்கிற ரிக்கார்டுகள் அங்கு இருக்கிற மற்ற வைகள், அங்கே பணியாற்றுகின்றவர்கள் நீதிபதிகள் அவர்களுக்கே கூட பாதுகாப்பு, காவல்துறை பாதுகாப்பு தேவை என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். தலைமை நீதிபதி அவர்கள் டெல்லியிலிருந்து வந்த பிறகு வழக்கறிஞர்கள் சங்கத்தினரோடு விரிவாக பேசி, ஒரு சுமுகமான நிலையை உருவாக்க முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

திரு. துரை முருகன்: கடிதம் எழுதியது யார்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நீதிபதி இஸ்மாயில் அவர்கள்.

திரு. துரை முருகன்: ஒரு ஹைகோர்ட் நீதிபதியே எங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று சர்க்காருக்கு எழுதுகிறார் என்றால் இந்த நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு இருக்கிறதா என்பதை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் இப்படி ஒரு பழக்கத்தை அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

திரு. துரை முருகன்: நான் சபாநாயகருக்கு மதிப்பு கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தீர்மானம் கொடுக்கவில்லை. ஆதலால் பேச முடியாது; உட்காருங்கள்.

திரு. துரை முருகன்: இது ஒரு முக்கியமான பிரச்சனை என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கே லா மினிஸ்டர் இல்லை; சீஃப் மினிஸ்டர் இல்லை; அவை முன்னவர் இல்லை. வேறு ஒரு அமைச்சர் ஏனோதானோ என்று பிரச்சனைக்கு பதில் சொல்கிறார். அப்படியானால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தில் இப்படி ஒரு கட்டுப்பாடு இல்லாமல் பேசலாமா? நீங்கள் தீர்மானமும் கொடுக்கவில்லை. அப்படி இருக்கும் போது எழுந்து பேசவே கூடாது. நீங்கள் உட்காருங்கள். அனுமதி இல்லாமல் இப்போது பேசிய அனைத்தையும் நீக்கி விட உத்தரவிடுகிறேன.

1979 மார்ச் 30]

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். 'லா மினிஸ்டர் இல்லை, சீஃப் மினிஸ்டர் இல்லை, முன்னவரும் இல்லை' என்று குறிப்பிட்டது தவறான வார்த்தைகளா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏனோ தானோ என்று அமைச்சர் பதில் சொல்கிறார் என்று சொன்னால் அதெல்லாம் இருக்க வேண்டுமா ? இதிலே எதிர்க்கட்சித் தலைவர்தான் வழி காட்ட வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லாமே இருக்கலாம். இருப்பதில் தப்பு இல்லை. ஏனோ தானோ என்பதுகூட நன்றாகத்தான் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : ஏனோ தானோ என்று சொன்னதை நீக்கி விடலாம். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் துறைமுருகன் அவர்கள் இங்கே குறிப்பிட்டது செவ்வாய்க் கிழமை அன்று அவைக்கு உறுதியளித்த அவை முன்னவரும் இல்லை ; முதலமைச்சரும் இல்லை, சட்ட அமைச்சரும் இல்லை என்பது. அந்த குறிப்பை நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய கருத்து.

[முற்பகல் 11-10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் தந்தவர்கள் வேண்டுமானால் இந்த விவாதத்தில் ஒன்றிரண்டு கேட்கக்கூடும். அதுவும் அமைச்சரவர்கள் எழுந்து பதில் சொல்ல ஆரம்பித்த பிறகு உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பே கொடுக்கப்படுவதில்லை. அப்படி இருக்கும்போது ஒத்திவைப்புத் தீர்மானம் தராதவர்கள் என்னுடைய அனுமதி இல்லாமல் எழுந்து பேசுவதை நீக்காமல் என்ன செய்வது? அதெல்லாம் நீக்காமல் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறீர்களா ? மாண்புமிகு அமைச்சரவர்கள் அவ்வாறே இருக்கட்டும் என்று சொன்னதற்காக வேண்டுமானால் அப்படியே இருக்கட்டும். ஆனால் இப்படி இடையிலே எழுந்து பேசுவதெல்லாம் சரிதானா என்பதற்கு நீங்கள் வழிகாட்டவேண்டும். என்னுடைய அனுமதி இல்லாமல் எழுந்து பேசுவதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறீர்களா ?

(கூச்சல், குழப்பம்)

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிற பிரச்சினை வேறு. என்னுடைய அனுமதி இல்லாமல் (கூச்சல் குழப்பம்).....

நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது என்னுடைய அனுமதி இல்லாமல் எழுந்து பேசுவதை எப்படி அனுமதிக்க முடியும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நீதிபதி அவர்களே பாதுகாப்பு கோருகிறார்கள். வழக்கறிஞர்கள் போராட்டம் என்கிறபோது அதிலே வருகின்றவர்கள் வழக்கறிஞர்கள் மட்டும்தானா என்ற பிரச்சினையின் அடிப்படையிலேதான் இதைப் போக்க வேண்டுமே தவிர வேறல்ல. வழக்கறிஞர் போராட்டம் அல்லது எந்த போராட்டம் என்றாலும் முறை தவறி நடக்கின்ற சில பேர் அங்கே நுழைந்து விடுகிறார்கள் என்பதை நாம் கண்கூடாக அறிந்து வருகிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள் முதல்வரும் இல்லை முன்னவரும் இல்லை, சட்ட அமைச்சரும் இல்லை என்று அவர்கள் இல்லாவிட்டாலும் பதில் இருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பதிலாவது இருக்கிறது. ஒருவேளை அவர்கள்தான் பதில் சொல்லவேண்டுமென்றால் அது வேறு.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள சொல்வதை விட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் தெளிவாகப் பதில் சொல்வார்கள், திறமையாகவும் பதில் சொல்வார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. நான் இப்படிச் சொலலுவதால் அவரைக் குறைப்படுத்திச் சொல்லவில்லை. ஆனால் உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், முதல்வரவர்களும் இல்லை, முன்னவரவர்களும் இல்லை, சட்ட அமைச்சரவர்களும் இல்லை என்று குறிப்பிட்டதைக் கூடவா நீக்க வேண்டும் என்றும் அதிலே என்ன தவறு என்றும் கேட்டேன். ஆனால் இப்போது மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் பதில் சொல்வதில் எங்களுக்கு மிக்க சந்தோஷம். ஏனென்றால் தெளிவாகப் புரிகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவர்கள் புரிந்துகொண்டு ஒத்துழைப்பு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது. ஏனென்றால் பல விஷயங்கள் புரியாத காரணத்தால் ஒத்துழைப்பு கிடைக்காமல் போய் விடுகிறது. தலைமை நீதிபதி அவர்கள் இது சம்பந்தமாக என்னென்ன செய்யலாம் என்று முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி இதை எப்படி சமாளிக்கலாம் என்பதற்காக அவர்கள் முயன்றார்கள். ஆனால் எந்த யோசனையும் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் ஒரு சிலரால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. அவர்களே மனம் நொந்து அரசாங்கத்திற்கு

ஒரு கடிதம் எழுதினார்கள். அதிலே அவர்கள் நிறைய எழுதி இருக்கிறார்கள். அதிலே சிலவற்றை மட்டும் நான் குறிப்பிட்டால் போதும் என்று கருதுகிறேன். அவர் மட்டுமல்ல, அங்கே உள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகள் அனைவரும் சேர்ந்து ஒத்த கருத்தோடு எழுதி அனுப்பப்பட்டதுதான் இந்தக் கடிதம்:

'with heavy heart, I have to inform you that the voice of responsible have been drowned by ,he voice of irresponsible. As it happens in any agitation, the bad is taken by the elements in the cloak of the learned....'

என்று மிக அழகாக, பொறுப்பில் உள்ளவர்களுடைய குரல் பொறுப்பு இல்லாதவர்களால் நெருக்கப்படுகிறது என்பதை மிக அழகாகச் சொல்லி இது இந்தப் போராட்டத்திலே மட்டுமல்ல, எல்லா போராட்டத்திலேயும் இப்படித்தான் நடக்கிறது என்று தலைமை நீதிபதி அவர்களே மனம் நொந்து எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் மேலும் எழுதுகிறபோது

'This may put strain on the local police who have to give full protection not only to the Judges, staff of the High Court but also to the Judges and staff of the City Civil Court and Small Causes Court which are housed in one campus. Toward off unforeseen and unpleasant occurrence, a minimum of 634 armed guards for the High Court and 172 for the Small Cause Court and/City Civil Court, totalling abont 536 for the entire High Court building campus would be necessary.'

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, தலைமை நீதிபதி பற்றியோ, கவர்னர் பற்றியோ நாம் இங்கே விவாதிக்கக் கூடாது. தலைமை நீதிபதி அவர்கள் சொன்ன சில பகுதிகள் படித்துவிட்டு தங்களுக்குச் சாதகமாக சூழ்நிலையை ஆக்கிக் கொள்ளக்கூடாது. விதிக்குப் புறம்பாக நாம் அவர்களைப் பற்றி விவாதிக்கக் கூடாது. அது நீக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் அவர்கள் கடிதத்தை பற்றிப் படித்ததை எல்லோரும் புரிந்து கொள்வார்கள். நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் எப்படி காவல் துறையினர் உள்ளே போகலாம் என்பதுதான் கேள்வி. அரசாங்கத்தின் பதில் நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் காவல் துறையினர்......

திரு. க. சுப்பு: யு கெனாட் டிராக் சீப் ஜஸ்டிஸ் அண்டு இன்ப்ளுயன்ஸ் தி டிபேட்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை சில நேரங்களில் எரிச்சலாக இருக்கும். கசப்பாகவும் இருக்கும். ஆனால் கசப்பு இருந்தாலும் உடம்புக்கு நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப் பேச முற்படல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பேசும்போது நீங்கள் பேச முற்படுவது முறைதானா? நான் முதலில் தங்களுக்குப் பேச அனுமதி தரவேண்டும். பிறகு தான் நீங்கள் பேசலாம்.

(திரு. எம். ஏ. லத்தீப் பேச முற்படல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை நகர காவல சட்டத்தின் 41-வது பிரிவை அமுல்படுத்தலாமா என்று கேட்டார்கள். அமுல் படுத்தலாம். எப்போது அமுல்படுத்தலாம், அவர்கள் கேட்கிறபோது அமுல்படுத்தலாம். ஆகவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் பாதுகாப்பு தர வேண்டியது தலையாய கடமை. ஆகவே, நீதி மன்றத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அது செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல. 18-ம் தேதியிலே அவர்கள் இத்தகைய நிலைமையை எதிர்பார்த்திருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கு இன்றையதினம் கருத்து மாறுபாடு இருந்தாலும் வன்முறை செயலுக்கு ஈடுபடாமல் அவர்கள் வழக்கு மன்றங்களுக்கு செல்வதை அரசு வரவேற்கிறது. திரு. லத்தீப் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவர்களை கேட்டுத்தான் நாங்கள் காவல் துறையினரை அங்கே அனுப்பினோம்.

திரு. எம். ஏ. லத்தீப் : லெட்டர் தேதியைப் படியுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 26—3—1979. முதலில் 18-ம் தேதியில் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தைப் படித்தால் என்ன எழுதியிருக்கிறார் என்று சொன்னால், லத்தீப் அவர்கள் ராஜினாமா செய்வார்களா?

திரு. எம்.ஏ. லத்தீப் : I am prepared to accept the challenge Are you prepared?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உறுப்பினர் லத்தீப் அவர்கள் ராஜினாமா செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. ஏனென்றால் நீங்கள் ஒருவர்தான் மிகவும் கஷ்டப்பட்டு வந்திருக்கிறீர்கள். ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று சொல்வதுபோல். நீங்கள் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பது என் ஆசை. அரசாங்கத்தின் பெருந்தன்மையை ஒரு பலவீனமாகக் கருதக்கூடாது என்று சொல்லிக்கொண்டு, இந்த அவையை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கூறி அமர்கிறேன்.

1979 மார்ச் 30]

[முற்பகல் 11-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி : நீங்கள் அவை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவில்லை என்பதற்காக அல்ல. நாங்கள் சொன்ன கருத்துக்களை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்காக நாங்கள் அடையாள பூர்வமாக வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. கு. ரமணி : இந்தப் பிரச்சினையில் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சொல்லிக்கொள்ள விரும்புவது, வக்கீல்களை இங்கு மட்டுமல்ல, மாவட்ட ரீதியாக வக்கீல்களை பிளவு உண்டு பண்ணக்கூடிய வகையில் அமைச்சர் அவர்களுடைய பேச்சு அமைந்திருப்பதாலும், போலீசை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்ததற்கு ஜஸ்டிபை செய்து சொல்லக்கூடியவகையில் அவர்கள் கேட்டுத்தான் போலீஸ் அங்கு வந்தது என்று சொல்வது, இந்த நிலை நிச்சயமாக நீதிக்கு பெரும் கெடுதலை உண்டுபண்ணும் என்று நாங்கள் உணர்ந்து கொள்வதால். நாங்கள் 'வாக் அவுட்' செய்கிறோம்.

(மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. ரா. மார்க்கபந்து : எங்களது நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால்....

To mark my protest, myself and my other members are walking out from this House.

*Thiru Margabandu and his party membe s walked out.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : வழக்கறிஞர்களுடைய நிகழ்ச்சியில் ஒரு சமரசத் தீர்வுக்கு வர அரசு மறுப்பதின் காரணமாக இந்த அவையை விட்டு வெளிநடப்பு செய்கிறோம்.

(காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட பிரச்னைகள் எடுத்துச்சொல்லப்பட்டும், நீதிக்கு குறுக்கே யார் நிற்கின்றார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். ஒய்வு பெற்ற நீதிபதி என்ற அளவில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிப்பாகச் சொல்லி விட்டு வெளிநடப்பு செய்யலாம், மீண்டும் இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கவேண்டிய தேவையில்லை.

திரு. கே. கந்தசாமி : நான் சொல்ல விரும்புவதை சொல்லி விட வேண்டாமா?.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட இதைக் கண்டித்து வெளியேறு கிறோம் என்றுதான் சொன்னார்கள்.

திரு. கே. கந்தசாமி : நாங்கள் வெளியேறுகிறோமா இல்லையா என்பதை தெரிந்து கொள்வதற்கு முன்னால் தாங்கள் இப்படிச் சொல்வது என்ன முறை? எதிர்கட்சிகள் அவர்கள் கருத்தை எடுத்து சொல்லி வெளியே சென்றார்கள். அரசின் நல்லெண்ணத்தை எதிர்ப்பார்த்து, சட்டப்படி பிரச்னையை சுமுக மாக முடித்து வைக்கும் என்று எதிர்ப்பார்க்கிறேன். முக்கிய மாக ஒய்வு பெற்ற ஹைக்கோர்டு நீதிபதியையோ அல்லது ஸிட்டிங் செஷன்ஸ் ஜட்ஜையோ விசாரிப்பதற்கு போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சபையில் அமருகிறேன்.

THIRU M. A. LATHEEF: The answer and the explanation given by the Hon. Minister amply substantiate my charges. Hence with a profound sense of disappointment I do hereby, as a mark of my protest, stage a walk out.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) பூச்சி கொல்லி மருந்தினை விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பருத்தி, மிளகாய் போன்ற பயிர்களை பூச்சிகள் சேதமாக்கியுள்ளதால் அவைகளைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் வேண்டிய 'டெமரான்' போன்ற பூச்சிக் கொல்லி மருந்தினை விவசாயிகளுக்கு வழங்கவேண்டியது குறித்த", அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

1979 மார்ச் 30]

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை வட்டாரத்திலும், மதுரை மாவட்டத்தில் தேனி பகுதியிலும் 1978-ம் ஆண்டு மார்ச்—ஏப்ரல் மாதங்களில் புரூடினியா பூச்சி மொத்தம் 11,927 ஏக்கர் பருத்திப் பயிரை தாக்கியிருந்தது. பாதிக்கப்பட்ட இடங்களில் வேளாண்மை துறை அலுவலர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி தீவிர பயிர்பாதுகாப்பு முறைகளுக்கான பெருந்திட்டம் செயலாக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 25 சதவிகித மான்ய விலையில் பூச்சி மருந்துகளை வழங்க அரசு ஆணையிட்டது. இப்பகுதி விவசாயிகளுக்கு ரூ. 3.3 இலட்சம் பெருமானமுள்ள பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டு புரூடினியா தாக்குதல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டது.

<u>எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்</u> : பாதிக்கப்பட்ட இடங்களில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த தேவையான பூச்சி மருந்துகள், போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டது. தீவிர அளவில் மருந்து தெளிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

புரூடீனியா புழுவை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது :—

பின்வரும் பூச்சி மருந்துகளைக் கொண்டு மருந்து தெளித்து கட்டுப்படுத்துதல்.

குளோரோபைரிபாஸ் 20% இ.சி.	ஏக்கருக்கு	400	மி.லி.
டைகுளோர் வாஸ் ..	ஏக்கருக்கு	400	மி.லி.
பென்தைவேட் ..	ஏக்கருக்கு	800	மி.லி.

அரிசி, தவிடு, சர்க்கரை கழிவு அல்லது பழுப்பு சர்க்கரை ஆகியவற்றை கார்பரில் 50 சதம் (நீரில் கரையக்கூடியது) கலந்து மாலை நேரங்களில் பொறி வைப்பதன் மூலம் புழுக்களை அழித்தல், தாய் பூச்சிகள் உண்டாவதை அறிந்து கொள்ள விளக்கு பொறிகள் அமைத்து தடுப்பு முறைகளை முன்கூட்டியே மேற்கொள்ளுதல், புரூடினியாவின் இளம் புழுக்களை கட்டுப்படுத்த அப்புழுவின் இயற்கை எதிரியான "நுக்கிளியர் டாலி ஹெட்ரோஸிஸ் வைரஸை" பயன்படுத்துதல்.

இவ்வகையான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை எடுத்ததால் நடப்பு ஆண்டில் புரூடீனியா தாக்குதல் முழு அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 30

மிளகாயில் புருடினியா புழு : திருநெல்வேலி மாவட்டத்தில், மிளகாய் புருடினியா புழுதாக்குதல் சிற்சில இடங்களில் காணப் பட்டது. மேற்குறிப்பிட்ட முறைகளின்படி உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

மிளகாயில் பேன் : இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் மிளகாயில் பேன் தாக்குதல் காணப்பட்டது. மிளகாயில் பேன் ஒரு நிரந்தர பூச்சியானதால் பூச்சி மருந்துகளை அவ்வப்பொழுது இட்டு கட்டுப்படுத்துதல் ஆவசியமாகும். மிளகாயில் பேனை கட்டுப்படுத்த வேளாண் துறையால் பின்வரும் முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

பேன்களில் பெருக்கத்திற்கு அதிக அளவு இரசாயன உரங்கள் இடுவது உதவியாக இருப்பதால் அவ்வாறு அதிக இராசயன உரமிடுதலை தவிர்க்க வேண்டும். கட்டுப்பாடற்ற முறையில் பூச்சி மருந்துகள் உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். பூச்சி களை அழிப்பதற்குத் தேவையான சரியான அளவில் பூச்சி மருந்துகளை உபயோகிக்க வேண்டும்.

பின்வரும் பூச்சி மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றது :

ஊடுருவும் பூச்சி மருந்துகளான டைகுளோர்லாஸ், மற்றும் டாஸேலேனை பயன்படுத்துதல்.

புகையிலை சாற்றினை (நிக்கோட்டின்), மீன் எண்ணெய், ரெசின் சோப்புடன் சேர்த்து பயன்படுத்துதல்.

இம்முறைகளை பயன்படுத்தியதால் இப்பூச்சிகளின் தாக்கு தல் கட்டுப்படுத்தப்பட்டது.

மிளகாயில் பேனை சிறந்த முறையில் கட்டுப்படுத்த வல்ல ''டெமரான்' என்ற புதிய பூச்சி மருந்தை அளிக்கக் கோரி சில விவசாயிகள் இத்துறைக்கு முறையிட்டுள்ளார்கள்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள ''பயார்'' பூச்சி மருந்து கம்பெனி யினால் இப்புதிய பூச்சி மருந்தான ''டெமரான்'' கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. மிளகாயில் புருடினியா மற்றும் பேன் பூச்சியினை இப்பூச்சி மருந்தைக் கொண்டு குடுமியான்மலை மற்றும் கோவில் பட்டியிலுள்ள ஆராய்ச்சி நிலையங்களில் முன்னோடி பரிசோத னைகள் நடத்தியதில் நம்பிக்கையூட்டும் முடிவுகள் பெறப் பட்டுள்ளன.

1979 மார்ச் 30] [திரு. ப. குழந்தைவேலு]

பூச்சி மருந்து சட்டம் 1968-ன் கீழ் மத்திய பூச்சி மருந்து கழகத்திலுள்ள உரிமம் வழங்கும் குழுவிற்கு இப்பூச்சி மருந்துக்கான உரிமத்தை வழங்கிட இந்நிறுவனம் மனு செய்துள்ளது. உரிமத்துக்கான மனு மத்திய பூச்சிமருந்து கழகத்தின் பரிசீலனையிலுள்ளது இக்கழகத்தால் இப்பூச்சி மருந்துக்கான உரிமத்திற்கு அனுமதி கிடைத்த பின்னரே அதிக அளவில் இப்பூச்சி மருந்தை இறக்குமதி செய்து உபயோகப்படுததமுடியும்.

மத்திய பூச்சி மருந்து கழகத்தால் இப்பூச்சி மருந்துக்கான உரிமம் வழங்குவதில் ஒரு முடிவு எடுத்த பின்னரே ''டெமரான்'' பூச்சி மருந்தை தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

மத்திய பூச்சி மருந்து கழகம் இப்பூச்சி மருந்துக்கான உரிமத்தை வழங்குவதில் விரைவான முடிவு எடுக்க ஏதுவாக இத்துறையால் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் இத்துறையால் தரப்பட்டுள்ளன. இந்நிறுவனம் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தி இப்பூச்சி மருந்தை கொண்டு விரிவான உயிரின மற்றும் வயல் வெளிச் சோதனைகளை இத்துறையால் நடத்தக் கோரியுள்ளன. கோவில்பட்டியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இப்பரிசோதனைகள் நடை பெற்று வருகின்றன.

(ஆ) முகவை மாவட்டத்தில், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் கொடுக்க மறுப்பது குறித்து.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''முகவை மாவட்டத்திலுள்ள, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகளில் நூல் கொடுக்க மறுப்பதால், நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காமல் உள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் தற்போது 135 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்கின்றன். இவைகளில் 26,854 தறிகள் உள்ளன. மேற்கூறிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் விநியோகம்

செய்யும்பொருட்டு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ ஆப்டெக்ஸ்), அருப்புக்கோட்டை, மற்றும் ஸ்ரீவில்லிப் புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு விநியோக நிலையங்களை அமைத்துள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மாதாந்திர தேவைகளுக்கேற்ப மேற்கூறிய நூல் விநியோக நிலையங் கள் மூலம் மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு நூற்பு ஆலைகளிடமிருந்து நூல்களை கொள்முதல் செய்து கைத்தறி இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது. இந்த மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குக் கடந்த ஆகஸ்ட் 1978 முதல் சனவரி 1979 முடிய 2,270 பேல் பருத்தி நூல் விநியோகிக்கப்பட் டுள்ளது. இதுதவிர ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு 107 பேல் பாலியஸ்டர் நூல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் முகவை மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தித் திறனைக் காட்டும் வகையில், கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களை நோக்கலாம்:—

மாதம்.	மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.)
ஆகஸ்ட் 1978	56.00
செப்டம்பர் 1978	52.00
அக்டோபர் 1978	66.62
நவம்பர் 1978	61.89
டிசம்பர் 1978	78.51
ஜனவரி 1979	81.37

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்டத்தி ஒவ்வொரு மாதமும் அதிகரித்துள்ளதைத் மேற்கண்ட குறிப்பிலிருந்து அறிய லாம்.

எனவே, மேற்கண்டவைகளின் மூலம் முகவை மாவட்டத்தில் நூல் பற்றாக்குறையோ அல்லது நெசவாளர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமையோ ஏற்படவில்லை.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்திலே கைத்தறி ஆய்வாளர்கள் சில கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கொடுக்கவேண்டுமென்று கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ஒப்புதல் கொடுத்தாலும், நூல் கொடுக்க மறுக்கிறார்கள். அதே மாதிரி, கோ-ஆப்டெக்சிலும் சில குறிப்பிட்ட சங்கங்களுக்குத்தான் நூல் கொடுக்கிறார்கள். எனவே, அவர்களும் நூல் கொடுக்க மறுக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, திருச்செந்தூர், கன்னியாகுமரி, பேட்டை, திருவில்லிப்புத்தூர் போன்ற இடங்களிலே உள்ள நூற் பாலைகளிலும் நூல் கொடுக்க மறுக்கிறார்கள். ஆதலால் அங்கே நூல் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கிடைக்க வேண்டுமென்பதற்காக இரண்டு ''யார்ன் டிப்போக்கள்'' திறந்திருக்கிறோம். எனவே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நேரடியாக நூல் சப்ளை செய்ய வேண்டிய அவசியமில்லை. கைத்தறித் துறை இயக்குநர் அவர்கள் நூலை விலைக்கு வாங்கி, இந்தக் கூட்டுறவு சங்கங் களுக்கு இந்த நூலை விற்பனைக்கு கொடுக்கிறார்கள். ஒரு வேளை இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நேரடியாக ஆலைக்கு குச் சென்று, கடனுக்கு நூல் வேண்டுமென்று கேட்டு, மறுக்கப் பட்டிருக்கலாம். எனவே, இந்தச் சங்கங்களுக்குத் தேவை யான நூலை, இந்த நூல் விற்பனை நிலையங்களிலே இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பி னர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே.இரா. ஜெயராமன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எனது கவன ஈர்ப்புத், தீர்மானம் குறித்து அறிக்கை இங்கே வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இங்கே அறிக்கை வைக்கப்பட வில்லை. வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி விசாரிக்கிறேன்.

(5) அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973–74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள், பற்றிய மேற்படி குழுவின் ஆறாவது அறிக்கையை அளிக்கிறேன்.

(6) ஒழுங்குப் பிரச்சினை.

பாளையங்கோட்டையில் நடைபெற்ற கால்நடை கண்காட்சி விழா குறித்து.

திரு. பொ. விஜயராகவன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நெல்லை—குமரி மாவட்டத்தின் கால்நடைக் கண்காட்சி அரசு விழாவாக 29–3–1979 அன்று பாளையங்கோட்டையிலே நடைபெற்றிருக்கிறது. இதில் முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே குறுக்கிட விரும்பவில்லை. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவிலே குறிப்பாக, பிரச்சினைகள் முடிந்தவுடன் மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும், ஏதாவது விவரம் கேட்பதானால், கட்சியின் தலைவர்கள் கேட்க வேண்டுமே தவிர, மற்றவர்கள் கேட்கக் கூடாது என்றும் தீர்மானத்திருக்கிறோம். அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் விஜயராகவன் அவர்கள் கூறியது போல் நெல்லை— குமரி மாவட்டங்களின் சார்பில் இந்த விழா நடைபெற்றிருக்கிறது. அதில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மற்றும் பல அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு உரிய மரியாதையை காட்டியதற்காக, மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்; வரவேற்கிறேன். ஆனால், இந்த அரசு, இந்த விழாவிற்கு எனக்குக்கூட அழைப்பு அனுப்பவில்லை. இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில்தான் இருக்கிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியும்; இந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் தெரியும். இதிலே பணியாற்றுகின்றவர்களுக்கு நன்கு தெரியும். இருந்தாலும் கூட, இங்கே சென்னையிலேயும் எனக்கு அழைப்பு அனுப்பவில்லை; ஊரிலேயும் எனக்கு அழைப்பு அனுப்பியதாகத் தெரியவில்லை; அது மட்டுமல்ல, இந்த விழாவிற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தாலே போதும்; அதைநான் விசாரிக்கலாம். இதற்காக நேரத்தை வீணாக்கவேண்டாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுடைய விருப்பத்திற்கு நான் உண்மையிலேயே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அழைப்பு அனுப்பப்படாதது பற்றி அரசு நிச்சயமாகக் கவனிக்கும்.

(7) வரவு-செலவுத் திட்டம் 1979–80 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 20 வேளாண்மை

(ஆ) கோரிக்கை எண்: 36 பாசனம்

(இ) கோரிக்கை எண். 50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண்: 52 பாசனம் குறித்த மூலதனச் செலவு.

*திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்படுகின்ற விவசாயத் துறை மானியத்தின் மீதும், நீர்ப்பாசன மானியத்தின் மீதும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு காவிரி நீர்ப் பிரச்சினையிலும், மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆற்று நீரைப் பயன்படுத்தி பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் பயன்படுகின்ற வகையிலே அதனை கிழக்கு திசைக்குத் திருப்புகின்ற திட்டமும், சென்னை நகரத்திற்கு கிருஷ்ணா ஆற்று நீரைக் கொண்டு வருகின்ற முயற்சியும் மேற்கொண்டிருப்பதற்காக நான் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 11-30)

தமிழகத்தில் பல பெரிய திட்டங்களை மேற்கொள்வதற்கு நீர்வசதி இல்லாத காரணத்தால் சிறு பாசனத் திட்டங்களை ஆங்காங்கே மேற்கொண்டு அதன் மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாக நன்மை கிடைக்க அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபாசன சிறப்பு திட்டங்கள் பற்றி விவர அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதிலே வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரே ஒரு திட்டந்தான் இருக்கிறது. இந்த விவர அறிக்கையில் மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது வட ஆற்காடு மாவட்டத்திற்கு பல திட்டங்கள் இல்லையென்பது தெரிகிறது. வட ஆற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். தஞ்சைக்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் மாவட்டம். நீர்ப்பாசன வசதியற்ற மாவட்டம். என்னுடைய மாவட்டத்தில் இருப்பது ஒரே ஒரு அணைதான். அந்த அணையினால் பெரிய அளவுக்கு தென்னாற்காடு மாவட்டந்தான் பாசன வசதி பெற்று பயன்பெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு உள்ள ஒரே ஆறு பாலாறு. அது தண்ணீர் இல்லாத பாழாறு. ஆகவே, இந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்யும் வகையில் அரசு இந்த மாவட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரை 100 ஏக்கருக்கு மேல் பாசனம் தரும் பகுதிகளை பொதுப்பணித் துறையும், அதற்குக் குறைவாக இருந்தால் ஊராட்சி ஒன்றியங்களும் மேற் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் கத்தர் என்ற பகுதியில் ஒரு ஏரி உடைந்துவிட்டது. அதைப் புதுப்பிக்க, திருப்பிக் கட்ட பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில் பொதுப்பணித் துறையை அணுகுகிற நேரத்தில் அவர்கள் அது ஊராட்சி ஒன்றியத்தின் கையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்: ஊராட்சி ஒன்றியத்தை அணுகினால் பொதுப்பணித் துறையின் பொறுப்பில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதுவரை அந்த ஏரி கட்டப் படாமல், செப்பனிடப்படாமலிருக்கிறது. இதுபோன்ற குறை களை நிவர்த்தி செய்ய அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை, நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தும்போது ஏரிகளைத் தூர் எடுக்க மட்டுந்தான் அதிகாரம் இருக்கிறது. நீர் வசதியற்ற ஏரிகளுக்கு புதிய கால்வாயை வெட்ட ஊராட்சி ஒன்றியங்கள் நிதி ஒதுக்க அதிகாரம் இல்லை. புதிய கால்வாயை வெட்ட வேண்டுமென்றால் பொதுப் பணித் துறைக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. ஆகவே, அரசு தண்ணீரற்ற புதிய கால்வாய்களை வெட்ட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் விலக்கல் நத்தம் என்ற பகுதியில் ஒரு நீர்த்தேக்கம் கட்டி ஐந்து வருஷம் ஆகிறது. அது கட்டி முடிந்து ஒரே ஒரு ஆண்டு தான் அந்த நீர்த்தேக்கம் நிறைந்தது. அதற்குப் பிறகு அதிலே தண்ணீரே நிறையவில்லை. அந்த அணையைக் கட்டியதன் காரணமாக அதற்குக் கீழே இருக்கக்கூடிய ஏறத்தாழ 20 ஏரிகளுக்கு தண்ணீர் வராமல் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அணைக்கே தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அணை ஆந்திர மாநிலத்தின் ஓரப் பகுதியில் அமைந்திருக்கும் காரணத் தால் அணையின் மேற்குப் பகுதி ஆந்திர மாநிலத்தில் இருக் கிறது.

ஆந்திரப் பகுதியில் புகுடகலாறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றின் நீர் வீணாகப் போய் பாலாற்றில் சேருகிறது. ஆகவே, புகடகலாற்றிலிருந்து புதிய கால்வாய் வெட்டி இந்தத் தண்ணீரை அணைக்கு திருப்பிவிட்டு அணையின் கீழ்ப் பகுதி பயன்பட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 30] [திரு. தி. அன்பழகன்]

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) தலைமை]

பாலாற்றுப் படுகை விதி காரணமாக பாசனத்திற்கும் விவசாயத்திற்கும் இடையூறு ஏற்படுகிறது. புதிய குளம், ஏரிகளை அமைக்க இந்த விதி தடையாக இருக்கிறது. ஆகவே, பாலாற்றுப் படுகை விதியை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில திட்டங்களைப் பரிசீலித்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் போது மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. இதன் விளைவாக நிறைவேற்றப்படுகிற திட்டங்களின் செலவுத் தொகை அதிகமாகிறது. முதலிலே ஒரு மதிப்பீடு போட்டு பிறகு திருத்திய மதிப்பீடு போடும்போது செலவு அதிகமாகிறது. குறிப்பாக, கந்தலி ஒன்றியத்தில் கந்திரி ஊராட்சியில் காடவல்லி ஏரி என்ற ஏரியைப் புதுப்பிக்க வேண்டுமென்று பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டு ரூ. 1.84 லட்சத்தில் மதிப்பீடு செய்யப்பட்டது. அது இரண்டு வருஷம் காலதாமதமானவுடன் திருத்திய மதிப்பீடு 2.40 லட்சம் ரூபாய் அளவுக்கு உயர்ந்தது. கந்தலி ஊராட்சி ஒன்றியத்தில் மண்டல நயன ஏணிகுண்டா என்ற புதிய ஏரி அமைக்க அரசு கவனத்திற்குக் கொண்டு வந்து மதிப்பீடு 5.6 லட்சம் ரூபாய்க்கு செய்யப்பட்டது.

அதற்கு பிறகு திருத்திய மதிப்பீடு 7.85 லட்சம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது. ஆகவே, நிறைவேற்றுகிற இந்த திட்டங்களை காலதாமதம் செய்யாமல் நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி வறட்சி பகுதியாகும். தமிழகம் முழுவதும் மழையாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட நேரத்திலே கூட என்னுடைய தொகுதியிலே மழையின்மை இருந்த காரணத்தால் பல ஏரிகள் நீர் இல்லாமல் வறண்டிருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயிகளுடைய நலனைக் கருதி நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் முக்கியமான இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை, நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்று, வேளாண்மை, இரண்டு பாசனம், இந்த இரண்டு முக்கிய மானியங்களுக்காக இந்த அரசு இந்த ஆண்டு ஒதுக்கியுள்ள தொகை போதுமானதா என்று எண்ணிப் பார்த்தால், போதுமானது இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே வேளாண்மை எவ்வளவு முக்கியமானதோ அதைப்போல் விவசாயத்திற்குத் தண்ணீர் மிக முக்கியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழகத்திலே உள்ள அனைவரும் இன்றைக்கு மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பது விவசாயிகளின் பிரச்சனை ஆகும். காரணம் என்ன? விவசாயிகள் இந்த ஆண்டு சாகுபடி செய்வதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே தந்த மாளிகைகளிலே இருப்பவர்கள் தாழ்வாரங்களுக்கு வரவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது விவசாயிகள் அந்தத் தாழ்வாரத்திலே கூட அல்ல, நடு வீதியிலே கையிலே கொடியுடன் தங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொதுக்கூட்டங்கள் மூலமாகவும், மாநாடுகள் மூலமாகவும் அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை அரசுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் மூன்று ஆண்டுகளாக இயற்கையின் சீற்றத்தாலும் அரசின் கவனக் குறைவினாலும் கடன் சுமைகளாலும் விவசாயிகள் இன்றைக்குக் தாங்கமுடியாத தொல்லைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று சொல்வார்களே, அதைப்போல அதைவிட இன்றைக்கு விவசாயிகள் வேதனையடைந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே விவசாயிகளுடைய போராட்டம் நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டு வருகிறது. அவர்களுடைய கோரிக்கைகள் என்ன? அரசுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும், மடம், கோயில் என்று பாகுபாடு செய்யக்கூடாது, குத்தகை பாக்கிகளை தள்ளுபடி செய்ய வேண்டும், கூட்டுறவுக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும், உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு நியாயமான விலை கொடுக்கவேண்டும். உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். இவைகள் தான் அவர்களுடைய கோரிக்கைகள். முதலமைச்சர் அவர்கள், வரிகொடா இயக்கத்தை அனுமதிக்கமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பேசுவது நல்லதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வரி கொடுக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள் என்றால், வரி கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. அவர்கள் வரியைக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, வரி கொடுக்க மாட்டோம்' என்று தான் சொல்கிறார்கள் எங்களிடத்திலே வசதி இருக்கிறது, ஆனால் வரி கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லவில்லை. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்பார்கள். இப்போது அது கூட மிஞ்சவில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. அவர்கள் 'இன்றைக்குத் தாங்க முடியாத கடன் சுமைகளுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கிறோம், எங்களுக்கு நிவாரணம் தாருங்கள்' என்று தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

1979 மார்ச் 30] [இரெ. இராசமாணிக்கம்]

முதலமைச்சரே பேசியிருக்கிறார்கள் உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது என்று. ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்ய 117 ரூபாய் செலவாகிறது என்று முதலமைச்சரே பேசியிருக்கிறார்கள். 117 ரூபாய் செலவு செய்து உற்பத்தி செய்கிற அந்த நெல்லுக்கு அரசாங்கம் கொடுக்கிற விலை இன்றைய தினம் 85 ரூபாய் தான். இப்படி 85 ரூபாய்க்கு தான் உற்பத்தி செய்த நெல்லைக் கொடுத்துவிட்டு ஒரு குவிண்டாலுக்கு 32 ரூபாய் நட்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு கணக்கு எடுத்துப் பார்த்தால் இரண்டு போகம் நட்டால் சாதாரணமாக 30 மூட்டை கண்டுமுதல் ஆகும். அதாவது 17 குவிண்டால். இப்படி அதை விற்கக்கூடிய விவசாயிக்கு ஏற்படக்கூடிய நட்டம் 544 ரூபாய் ஆகும்.

[முற்பகல் 11-40]

இப்படி ஒரு ஏக்கருக்கு 544 ரூபாய் நஷ்டத்திற்கு விற்றுக் கொண்டிருக்கும் விவசாயியால், மூன்றாண்டுக் காலமாக பாதிக்கப்பட்டிருக்கும் அந்த விவசாயியால் தான் வாங்கியிருக்கும் கடன்களை எப்படித் திருப்பிச் செலுத்த முடியும் என்பதைத் தயவு செய்து அமைச்சரவை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவேதான், அவர்கள் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்து கொடுங்கள் என்று நாங்கள் கேட்கிறோம் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த ஆண்டு விவசாயிகளுக்கு எந்தப் புதிய நன்மையான திட்டத்தையும் இந்த அரசு அறிவிக்கவில்லை. மத்திய அரசாவது, உரத்திற்கு மூட்டைக்கு ரூபாய் ஐந்தாவது குறைத்திருக்கிறார்கள். அந்த அளவு அக்கறைகூட இந்த அரசுக்கு விவசாயிகளிடம் இல்லை என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டில், நம்மையெல்லாம் ஆளாக்கிய அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக ஆனார். அன்றைய தினம் தமிழகத்தின் நிலைமை என்ன? உண்ண உணவில்லை, எங்கும் அரிசி கிடைக்கவில்லை. அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, விவசாயிகளுக்குக் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக உற்பத்தி பெருகியது. இப்பொழுது நாம் பஞ்சம் இல்லை என்று பெருமையாகப் பேசுகிறோம். இங்கு உற்பத்தியாகும் நெல்லைக்கூட வாங்காமல் வெளி மாநிலத்தில் அதிக விலை கொடுத்து இந்த அரசு வாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொன்ன வாக்குறுதியையாவது நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமா என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். நமது முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட

பொழுது, நெல்லுக்கு நீங்கள் கொடுத்ததைவிட அதிகமாக விலை தருவோம் என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதி என்ன வாயிற்று? அவர்கள் அந்த நேரத்தில் பேசும்பொழுது நாங்கள் டெல்லியைக் கேட்டுச் சொல்கிறோம் என்று சொல்லவில்லை. 'நீங்கள் கொடுத்ததைவிட அதிகமாக நாங்கள் தருவோம்' என்று எதிர்க்கட்சித் தலைவரவர்களிடத்திலே சொன்னார்கள். அந்த வாக்குறுதி என்னவாயிற்று என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில், வண்டிச் சத்தம், போனஸாக குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் சேர்த்துக் கொடுத்ததே, அதையாவது இந்த அரசு கொடுக்க முன் வந்ததா என்றால், கொடுக்க முன்வரவில்லை என்பதை வருத்தத்தோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப் பட்ட ஒரு நல்ல காரியத்தைக் கூட செய்ய முடியாவிட்டால் ஆட்சியிலிருந்து கீழே இறங்கி விடுவது நல்லது அல்லவா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற போது ஒரு குவிண்டால் நெல்லின் விலை—நடுத்தர நெல்லின் விலை—42 ரூபாய். 1976 இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் ஒரு குவிண் டால் நெல்லின் விலை 95 ரூபாய்.

விவசாயிகளுக்கு நியாயமான விலை நெல்லுக்குக் கிடைக்க வேண்டும், உடனடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நுகர் பொருள் வாணிபக் கழகம் துவக்கப் பட்டது. அது மட்டுமல்ல, வாங்கும் நெல்லை உடனடியாக வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற் காகப் பொருள் போக்குவரத்துக் கழகம் திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரால் துவக்கப்பட்டது. இப்பொழுது அவைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரிய வில்லை.

கூட்டுறவுக் கடனுக்காக ஜப்தி செய்யப்பட்டு வருகிறது. இல்லை என்று மறுக்க முடியுமா? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மென்றால், நக்கம்பாடி விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தால் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதில் சந்திரகாசு என்பவ ரிடமிருந்து பசுமாடு ஒன்றும், காளை கன்றுக்குட்டி இரண்டும் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல, ரெகுநாதன் என்ப வரிடமிருந்து எருமை மாடு ஒன்றும், பசு கன்று ஒன்றும், காளை கன்று இரண்டும் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல, பெரம்பூர் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கத்தால், வெங்கடாஜல படையாட்சி என்பவரிடமிருந்து சுவர் கடிகாரம் ஒன்றும், மர்பி டிரான்சிஸ்டர் ஒன்றும், பித்தளை குவளை இரண்டும், பித்தளை குடம் ஒன்றும், பித்தளை அரை அடுக்கு ஒன்றும் ஏலத்திற்குக்

1979 மார்ச் 30] [திரு. இர. ரா. இராசமாணிக்கம்]

கொண்டு வரப்பட்டிருக்கிறது. பத்மனாபன் என்பவரிடமிருந்து எருமை கொம்பு மாடு ஒன்றும், கோவிந்தசாமி உடையார் என்பவரிடமிருந்து எருமை மாடு ஒன்றும், பிச்சை படையாட்சி என்பவரிடமிருந்து பிலிப்ஸ் டிரான்சிஸ்டர் ஒன்றும், ஸ்டீல் ஈசி சேர் ஒன்றும், பித்தளை குவளை ஒன்றும் ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சாமான்களை கூட்டுறவுச் சங்கங்களில் ஜப்தி செய்து ஏலம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் நான் இங்கே சொல்லியிருக்கின்ற சாமான்களைப் பார்க்கின்ற பொழுது, அவைகள் பெரிய பணக்காரர்களின் வீட்டிலேயிருந்து ஜப்தி செய்யப்பட்டவை அல்ல, ஏழை, சிறு விவசாயிகளின் வீடுகளிலேயிருந்து இப்படிப்பட்ட சாமான்களை ஜப்தி செய்து ஏலம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். ஒரு பொருளுக்கு இருவர் சொந்தம் கொண்டாடினால் நிலைமை என்னவாகும். அதை இந்த ஆட்சியிலே உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். முதலமைச்சர் புரட்சித் தலைவர் சொல்கிறார், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பது சரியான வாதமா என்று. இதுதான் அண்ணாயிசமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது). ஒரேயொரு நிமிடம் தாருங்கள், முடித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த அந்தச் சட்டத்தை மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு வேளாண்மை பொறியியல் பணி மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணி மையங்களின் நிர்வாகபோர்டு இப்பொழுது கலைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் பொறியியல் வல்லுநர் ஒருவர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். குமாஸ்தா, டிரைவர் வாட்சுமேன் ஆகியோர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அலுவலகத்திற்கு வாடகை தந்து கொண்டிருக்கிறோம். அதிலே என்ன வருமானம் வருகிறது என்று பார்த்தால், ஒரே ஒரு டிராக்டர் இருக்கிறது. அதுவும் ஓடாத நிலையிலிருந்து கொண்டிருக்கிறது. எந்த வருமானமும் இல்லாமல் கிட்டத்தட்ட மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 செலவு செய்து கொண்டிருக்கிறோம். எதிலேயிருந்து செலவு செய்கிறோம் என்றால், உறுப்பினர்களது பங்குத் தொகையிலேயிருந்து செலவு செய்கிறோம் என்பதை எண்ணிப் பார்த்து.......(மணியடிக்கப்பட்டது.)

•

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஒரு அறிவிப்பை இங்கே கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றும் இன்றும் விவசாயத் துறையிலும், பாசனத் துறையிலும் பல்வேறு கருத்துக்களை, நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு

ஒரு இனிப்பான செய்தி. இப்பொழுது உங்களுக்கு ஃப்ரூட் சாலட் வழங்கப்படுகிறது. அதை எதற்காக நாங்கள் வழங்கு கிறோம் என்கின்ற விளக்கத்தினை பின்னால் விவரமாகக் கூறு கிறேன் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு லாபி யிலுள்ள கமிட்டி ரூமில் ஃப்ரூட் சாலட் காத்துக் கொண்டிருக்கிறது ஆகவே, எல்லோரும் ஒன்றாகப் போய் விடாமல், ஒவ்வொருவ வராகச் சென்று ஃப்ரூட் சாலட் சாப்பிட்டு, தங்களுடைய இனிப் பான இனிமையான கருத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : இப்பொழுவு ஃப்ரூட் சாலட் வழங் கப்படுவது இனிமையாகப் பேசுவதற்கா ? காரசாரமா கவிமர்சனம் வரக் கூடாது என்பதற்காகக் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, என்னு டைய தொகுதியில் ஏராளமான ஆறுகள் ஓடிக் கொண்டிருக் கின்றன. அஞ்சலாறு, காவேரி, மஞ்சளாறு, மகிமாலை ஆறு வீரசோழன் ஆறு, நண்டலாறு, நாட்டாறு, கோரையாறு, குட முருட்டியாறு, கீர்த்திமான் ஆறு, முட்டையாறு, அரசலாறு, திருமலைராசன் ஆறு, நூலாறு, இந்த ஆறுகளையும் அதன் கிளை வாய்க்கால்களையும் சரியான முறையில் பராமரிக்க வேண்டும். தேவையான இடங்களில் வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்று அடுத்த உறுப்பினர் அழைக்கப்பெற்றார்.)

*திரு. சி. பழனிமுத்து : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மை, பாசன மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னு டைய, சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் வட்டம் பல ஆண்டு களாக வறட்சியாலும் மழையாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, சிறு பாசனத் திட்டங்கள் பல செயல்படுத்த வேண்டிய நிலையில் அப்பகுதி உள்ளது. சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்த வேண்டுமென்று பல கோரிக்கைகள், மனுக்கள் இந்த அரசுக்கு வந்திருக்கின்றன. இருப்பினும், அந்தத் திட்டங் கள் செயல்படுத்தப்படாமல் பல ஆண்டு காலமாக நிலுவையில் இருந்து வருகின்றன. ஆகவே. வறட்சியான பகுதிகளில் விகிதா சாரப்படி செலவு செய்து, பாசனத் திட்டங்களுக்கு வழி வகுப்பது பொருத்தமாக இருக்காது. எனவே, மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆத்தூர் தாலூகாவில் சிறு பாசனத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் அருகிலே பைத்தூர் அணைத் திட்டம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. அந்தத் திட்டத்தை உடனே மேற் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தத்

திட்டமானது ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டிலே உள்ளது. அந்தத் திட்டத்தையும் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பெரிய கல்ராயன்மலை, சின்னக் கல்ராயன்மலை யிலிருந்து உற்பத்தியாகும் வசிஷ்ட நதியின் தண்ணீரை பல ஏரிகளுக்குக் கொண்டு போவதன்மூலம், ஆயக்கட்டில்லாத நிலங்களை ஆயக்கட்டுகளாக மாற்றலாம். எனவே, வறட்சித் திட்டம் என்ற வகையில், உமையாள்புரம், தமைடனூர் ஏரி களுக்குக் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு போகும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால், புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும். ஏரியில், தண்ணீர் நிரம்பி 7 ஆண்டுகள் ஆகின்றன எனவே, ஏழைஎளிய விவசாயிகள் விவசாயம் செய்ய, சிறுபாசன கால்வாய்கள் கண்மாய்கள் அமைத்துக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கல்பகனூருக்கு அருகிலே ரெட்டி அணைத் திட்டம் என்ற ஒரு திட்டம் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அந்த அணைத் திட்டம் உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்கப் படும் என்று நம்புகிறேன்.

[முற்பகல் 11-50.]

மேலும் கீரிப்பட்டி ஊராட்சி எல்லையில் ஒரு ஏரி கட்டுவதற்கு அதிகாரிகள் பலமுறை ஆய்வு செய்து இருக்கிறார்கள். இது வரையில் அதுகுறித்து எந்தவிதமான முன்னேற்றமும் செய்யப் படவில்லை. மேலும் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதில் மிகவும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் சில மாவட்டங் கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. தருமபுரி மாவட்டத்திற்கும் சேலம் மாவட்டத்திற்கும் ஒரே மேற்பார்வை பொறியாளர் உள்ளார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் என்ற முறையில் அனுமதித்தால் இந்த இரண்டு மாவட்டங்களிலும் வேலைகள் துரிதமாக நடைபெறுவதற்கும், பாசன திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே, இந்த முறையில் இரண்டு மேற்பார்வை பொறியாளர்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். சேலம் மாவட்டத்தில் எந்தவிதமான நீர்ப்பாசனத் திட்டங்களும் இல்லை. தொப்பையாறு அணைத் திட்டத்தைச் செயல்படுத்தினால் அதவ மூலம் கிட்டத்தட்ட 10,000 ஏக்கர்களுக்கு மேல் நிலங்கள்டிபாஇ வசதி பெறும். வறட்சிப் பகுதியாக அந்தப் பிரதேசம்ப்பகை பதால் இதை உடனடியாக நிறைவேற்றித் தர நடனசருன் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களில் பல பகுதிகளில் நீர்அளவு குறைந்து வருகிறது. இந்த அரசு 100க்கு 90 சதவிகித நிலநீர் உள்ள பகுதிகளில் பாசன திட்டங்களை அமல்படுத்தியுள்ளது என்று மான்யத்தில் அறிக்கையில் கூறி உள்ளது. வறட்சிப் பிரதேசமாக இருக்கும் சேலம் மாவட்டத்தில் தான் பல பகுதிகளில் நீர்த்தேக்கங்கள் இல்லை. அதனால் எல்லா ஏரிகளிலும் எல்லா அணைக் கட்டு களிலும் தண்ணீர் வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எகனாமிக், அன்எகனாமிக் என்ற முறையில் திட்டங்கள் இருந்தாலும் அவைகள் எல்லாம் மக்களுக்குப் பயன்பெறும் வகையில் இருக்க இந்த விகிதாச்சார முறையை கருத்தில் கொள்ளாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல ஆண்டு காலமாக ஆத்தூர் தாலூகா வறட்சிப் பகுதியாக இருந்து வருகிறது. 1974 ஆம் ஆண்டு ஆத்தூர் தாலூக்கா வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு வரி வசூலை நிறுத்தி இருந்தார்கள். இப்போது சேலம் மாவட்டம் முழுமையும் நீர் வசதி இல்லாததால், முழுவதும் வறட்சிப் பகுதி என்று அறிவித்து அங்கேயுள்ள ஏழை எளிய விவசாய மக்களுக்கு வரிச் சலுகை தர வேண்டும். மேலும் விவசாயிகள் எங்கள் மாவட்டத்தில் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். சில இடங்களில் 100 அடிக்குக் கீழேயிருந்துகூட எடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு விவசாயம் செய்யும் காலங்களில் தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாயத்தைச் செய்ய முடியவில்லை . பயிர்களும் மடிந்து விடுகின்றன. இந்த நிலையில் மின்சார அழுத்தம் கிடைக்கப் பெறாத காரணத்தால் மின் மோட்டார்கள் சரிவர இயங்காமல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பயிர்கள் தீய்ந்து விடுகின்றன. காய்ந்து விடுகின்றன. அந்தப் பயிர்கள் முழுமையும் பாதுகாக்க, மழை, வெள்ளம், வறட்சி போன்ற நிலைகளில் உள்ளற்றைத் தடுக்க இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வர வேண்டும்.

நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் பெரிய கல்ராயன்மலை, சிறிய கல்ராயன்மலைத் திட்டங்களையும், பாப்பாநாய்க்கன்பட்டி திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும். அநித்து கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் உள்ள ஆனைமடுவு திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேளாண்மைத் துறையில் இருக்கும் விவசாயிகள் பிரச்னை நாளுக்குநாள் வளர்ந்து கொண்டு வருகிறது. அவர் களுக்கு வாழ வசதி சரியாக இல்லை. உற்பத்திப் பொருள்களுக்கு எந்தவிதமான விலை நிர்ணயமும் செய்யப்படவில்லை. ஆகவே, நெல் விலையை இந்த அரசு உயர்த்திக் கொடுக்கவேண்டும்; குவிண்டால் ஒன்றுக்கு 120 ரூபாய் கொடுக்க வேண்டும். கூட்டுறவுச்

சங்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள கடன்களை பெரிய விவசாயிகள் சிறிய விவசாயிகள் என்று பாகுபடுத்தி அந்தச் சிறிய விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடனை ரத்து செய்ய வேண்டும். பெரிய விவசாயிகளுக்கு அதிகமாக இருக்கும் பளுவைக் குறைக்கும் வகையில் வட்டி நீக்கம் செய்து தர வேண்டும். மேலும் இந்த விவசாயப்பிரச்னையில் அரசு முடிவு எடுப்பதை தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறது. மற்ற பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து இருக்கிறபோது, விவசாயிகளுக்கும் நியாயமான விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அவர்களுக்கு சரியான விலை நிர்ணயிக்கப்படாததால் நஷ்டம் அடைகிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும்.

விவசாயிகள் பிரச்னையைத் தீர்க்க மேல் மட்டக் கமிட்டி போட்டு அந்தக் குழு ஆராய்ந்து வருகிறது. அப்படி ஆராய்ந்து வருகிறபோது மின் இணைப்பை ரத்து செய்து இருக்கிறார்கள். அந்த மின்னிணைப்பு ரத்து செய்வதை நிறுத்தி, மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் இணைப்பு கொடுத்து, சிறிது விதிவிலக்கு, சலுகை கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சனை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகிறது. எங்கள் மாவட்டமாகிய சேலம் மாவட்டத்தில் எந்தவிதமான பெரிய பாசனத் திட்டமும் இல்லை. சேலத்திலிருந்து தலைவாசல் வரையில் 50 அடிக்குக் கீழே பாறை இருப்பதாக நிலவியல் துறையினர் எடுத்த புள்ளிவிபரத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த பாசன வசதிக்கு உடனடியாக ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில்தான் மேட்டூர் நீர்த்தேக்கம் இருக்கிறது. ஆனால் எங்களுடைய மாவட்டத்திற்கு அதிலிருந்து எந்தவிதமான பாசன வசதியும் இல்லை. இந்தக் குறையைப் போக்க மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து ராட்சச குழாய் அமைத்து பாசன வசதி செய்யும் ஒரு திட்டம் இருந்தது. அது இப்போது கைவிடப்பட்டுவிட்டது என்று அறிகிறேன். மேட்டூர் நீர்த்தேக்கம் இருக்கிற மேட்டூர் பகுதி விவசாயிகளுக்கு பாசன வசதி இல்லை என்பது மிக மிக வேதனைப்படக்கூடிய ஒன்று. ஆகவே, அந்த நீர்த்தேக்கத்திலிருந்து ராட்சசக்குழாய்கள் அமைத்து, அந்தப் பகுதிகளுக்கு பாசன வசதி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா அரசியல் கட்சிகளும் விவசாயிகள் பிரச்சனையை அனுதாபத்தோடு கவனிக்கிறோம்; நன்மைகள் செய்ய வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம்; கிராம மக்களுக்கு நன்மை செய்கிறோம்;

கிராம முன்னேற்றத்திற்கு திட்டம் போடுகிறோம் என்று சொல்கிறார்களே தவிர ஒன்றும் செய்யவில்லை. அதனால் இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருக்கின்ற விவசாயக் கூலி களும், தொழிலாளர்களும், ஏழை எளிய மக்களும் நகரங்களுக்கு வந்து தொழில் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. கிராமப் புறங்களில் வேலை இல்லாப் பிரச்சனை தான் அதற்குக் காரண மாக இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென் றால் கிராம மக்களின், ஏழை எளிய மக்களின், விவசாயப் பெருங்குடி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, அவர்கள் முன்னேற வழிவகை காண வேண்டும். (மணி யடிக்கப்பட்டது).

அங்கே இருக்கிற நிலங்கள் எல்லாம் மானாவாரி சாகுபடி யாக இருக்கிறது. அதனால் பொருளாதாரத்தில் அங்குள்ள மக்கள் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய நிலையை முன்னேற்ற தக்க கவனம் செலுத்த வேண்டும்.

கிராமப் பொருளாதாரம் நாளுக்கு நாள் சீரழிந்து வருகிறது. அவர்களுடைய பொருளாதாரத்தைப் பெருக்க பல்வேறு திட்டங்களைச் சொல்கிறார்கள்; எதுவும் சரியாக நடை பெறுவதாகத் தெரியவில்லை. கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவில்லை என்றால் நிச்சயமாக ஏழை எளிய மக்கள் நகரங்களைத்தேடித் வருவதைத் தடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பொதுப்பணித் துறையில் (பி.டபிள்யூ.டி.) டெக்னிக்கல் ஸ்டாப் பயிற்சி பெற இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். ஆனால் இன்றுவரையில் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை.

தற்போது அரசு நிர்வாக இயந்திரம் ஒழுங்காக செயல்பட வில்லை. கோப்புகள் தேங்கிக் கிடக்கின்றன. நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதனால் பணிகள் ஒழுங்காக நடக்கவில்லை. அதற்குக் காரணம் தேவையான அளவுக்கு பணியாளர்கள் இல்லை. பொதுப்பணித் துறையில் 6 மாதத்திற்கு மேலாக 23 நிர்வாகப் பொறியாளர்கள் இடம் காலியாக இருக்கின்றன. இரண்டு தலைமைப் பொறியாளர்கள் இடம் காலியாக இருக்கின்றன. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் முதல் தலைமைப் பொறியாளர் (கட் டடம்) மாறுதல் பெற்றதன் காரணமாக காலியாக இருக்கிறது. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் முதல் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் இடம் நிரப்பப்படாமல் காலி யாக இருக்கிறது. அது பெரியாறு - வைகைத் திட்டம் சம்பந்தப் பட்ட பணியி...

1979 மார்ச் 30] [திரு. சி. பழனிமுத்து]

பொறியாளர்களுக்கு மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் சில முரண்பாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எல்லா ஊழியர்களும் அரசாங்க ஊழியர்கள்தான். அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு காட்டக்கூடாது. மத்திய அரசு வழங்குகின்ற அகவிலைப்படி இங்கே உள்ளவர்களுக்கு வழங்கப்படவில்லை என்ற பொதுவான குறை நீண்டநாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, அனைத்து ஊழியர்களையும் எடுத்துக்கொண்டால், பொறியாளர் அந்தஸ்தில் இருந்த காவல் துறை ஊழியர்கள், மருத்துவத்துறை ஊழியர்கள் போன்ற எல்லா ஊழியர்களையும் விட பொறியாளர்கள் சம்பளம் குறைவாக இருக்கிறது. மற்றவர்களுக்கு எல்லாம் 675 ரூபாயிலிருந்து 750 ரூபாய் வரை உயர்த்திருக்கிறார்கள். டாக்டர்களுக்கு 750 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் பொறியாளர்களுக்கு மட்டும் 600 ரூபாய் என்று ஊதியம் நிர்ணயித்திருக்கிறார்கள். மற்றவர்களை விட இவர்களுக்கு வேலைப் பளுவும் கூடுதலாக இருக்கிறது. ஆகவே, பொறியாளர்களுடைய ஊதியத்தை உயர்த்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் முரண்பாடு இருக்கிற காரணத்தால் ''ஒரு நபர் கமிட்டி'' ஒன் மேன் கமிட்டி போட்டு இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொறியாளர்களுக்கு உழைப்புக்கேற்ற சம்பளம் வழங்க இந்த அரசு முன்வரவேண்டும். இந்த அரசு கிராமப்புற மக்கள், ஏழை எளிய மக்கள் உற்பத்திச் செய்கின்ற பொருட்களுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்யக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12–00.)

எங்களுடைய மாவட்டத்திலே எந்தவிதமான பணித் திட்டங்களும் போடப்படவில்லை. ஆகவே இந்த ஆண்டு பணித்திட்டத்திலே அமைச்சரவர்கள் நல்ல கவனம் எடுத்துக்கொண்டு என்னுடைய சேலம் மாவட்டத்தை—அதாவது மாவட்டம் வறண்ட பிரதேசம் என்று இல்லாவிட்டாலும் கூட தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுகிற மாவட்டம் என்று கருதி போதுமான தண்ணீர் கிடைக்க திட்டங்கள் செயல்படுத்த வேண்டுகிறேன். தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்ய முடியாது. ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விவசாயம் செய்வதற்குரிய தண்ணீர் கிடைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமருகிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கின்ற வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத்துறை மானியக் கோரிக்கையின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

[திரு. வி. கொ. சின்னசாமி] [1979 மார்ச் 30

மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்த இந்த நீர்ப்பாசனத்துறையில் இன்று தமிழகம் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளது, முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்க்க வேண்டும். கடந்த தேர்தல் காலத்திற்கு முன்பு தமிழகத்தினுடைய நிலைமை எப்படி இருந்தது. அப்போது எந்த ஊருக்குச் சென்றாலும் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை, கிணற்றிலே தண்ணீர் இல்லை, மோட்டார்கள் ஓடுவதற்குத் தண்ணீர் இல்லை, டேமில் தண்ணீர் இல்லை, அணையிலே தண்ணீர் இல்லை என்ற நிலைதான் இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்பதை இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இன்று தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் தலைமையிலே பொறுப்பேற்ற பிறகு இன்று தமிழகத்தினுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது எந்த இடத்திலேயும் தண்ணீர் இல்லை என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல் 100 அடி, 120 அடி என்கின்ற அளவிலே தண்ணீர் சேர்ந்து அதற்கு அதிகமான தண்ணீரைத் தேக்க முடியவில்லையே என்ற நிலைதான் இருக்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

வேளாண்மைத் துறை அமைச்சரவர்களிடத்திலேயே இந்த நீர்ப்பாசனத் துறையையும் மாண்புமிகு முதல்வரவர்கள் கொடுத்தது தமிழக விவசாயிகளுக்கு கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி என்றும் மாபெரும் பாக்கியம் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்க்கவேண்டும். ஏனென்றால் வேளாண்மைத் துறை வளரவேண்டும் என்றால் நீர்ப்பாசனத் துறையும் கூட இருந்தால்தான் அது முடியும். ஆகவே மாண்புமிகு முதல்வரவர்கள் இவ்வாறு செய்துள்ளார்கள் என்பதை எண்ணி நான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் நான் இங்கே சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

பெரிய நடுத்தர பாசனத்திற்கு 1979—80-ல் 22·12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதை உண்மையிலேயே விவசாயிகள் பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள். அத்தோடு பரம்பிக்குளம், ஆழியாறு திட்டம் 1979 இறுதிக்குள் முடித்துவிடுகின்ற அறிவிப்பை எதிர்பார்க்கலாம் என்று ஒரு வரியை இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அது கோவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி என்பதையும் அது அவினாசி தாலூக்கா முழுவதற்குமாக வரவேண்டும், பயன்படவேண்டும் என்று நான் என்னுடைய தொகுதியின் சார்பாகவும், விவசாயிகள் நன்மை அடைகின்ற விதத்திலும் கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 30] [திரு. வி. கொ. சின்னசாமி]

அடுத்து சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒன்றை இங்கே உருவாக்கி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயத் தொழிலுக்கு உதவி செய்வதும் மற்றும் காளை மாடுகள் போன்றவைகளை வாங்குவதற்கும் கடன் வழங்கப்படுகிறது. இது எந்த அரசாலும் செய்யப்படாத ஒரு சாதனை என்பதைச் சொல்லி இது புரட்சித் தலைவர் தலைமையில் செய்யப்பட்டுவிட்டது என்பதை எண்ணி விவசாயிகள் ஒவ்வொருவரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

1978–79 ஆம் ஆண்டிலே தூர் எடுத்து சீரமைப்பதற்குரிய காரியங்கள் சம்பந்தமாக செலவு 11.63 இலட்சம் ரூபாய் என்று இருந்தது. 1979–80 ஆம் ஆண்டிலே 25 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இதனை உண்மையிலேயே நாங்கள் வரவேற்கிறோம். விவசாயக் காரியங்களுக்காக இப்படி அதிகமாக ஒதுக்கி இருப்பது குறித்து உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.

அடுத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நீர் நிலைகள், குட்டை குளங்கள், ஆறுகள் ஆகியவற்றைச் சீராக்குவதற்காக ரூ. 325 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு இதில் ரூ. 250 இலட்சம் நடப்பு ஆண்டிலேயே வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்துள்ளார்கள். உண்மையிலேயே நாங்கள் பெருமைப்படுகிறோம். அதே நேரத்தில் இங்கே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கோப்பம் பாளையம், நல்லூர் போன்ற இடங்களிலுள்ள குளங்களைச் சீர்படுத்துவதற்கு உள்ளூர் அதிகாரிகளின் மதிப்பீடு பரிசீலனையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு குளங்களும் கடந்த கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு இரண்டாண்டுகள் ஆகின்றன. நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அதற்கு மதிப்பீடு இன்னும் அனுப்பப்படாமல் உள்ளது என்ற குறிப்பை எனக்குக் கொடுத்துள்ளார்கள். அங்கே உள்ள எக்சிக்யுடிவ் எஞ்சினியர் பவானிசாகர் ஒரு எஸ்டிமேட் போட்டு எஸ்.இ.க்கு அனுப்பியிருக்கிறார்கள். கோயம்பத்தூர் எஸ்.இ. அதற்குத் தடையாக இருக்கிறார் என்று விவசாயிகளிடையே பேசிக் கொள்கிறார்கள். இந்தப் பிரச்னையை பற்றி நேரடியாகவும் நான் சொல்லி இருக்கிறேன். ஆகவே இந்த இரண்டு குட்டைகளை உடனடியாகச் சீரமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரு டாம் இருக்கிறது. அந்த அணையிலிருந்து சுமார் 25 மைல் தூரத்தில் உள்ள பகுதிகளுக்குப் பாசன வசதி கிடைக்கின்றது. அந்தப் பவானிசாகர்

[திரு. வி. கொ. சின்னசாமி] [1979 மார்ச் 30

அணை கட்டப்பட்டு சுமார் 25, 30 ஆண்டுகள் இருக்கலாம். அந்தப் பகுதியில் வெள்ளம், புயல் ஏற்படுகிற நேரத்தில் மின் சாரக் கோளாறு ஏற்படுகிறது. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஜெனரேட்டர் இல்லாத காரணத்தால் அந்த நிலை வருகிறது. ஜெனரேட்டர்களை எங்கெங்கேயோ வைக்கிறார்கள். அவசியமில்லாத இடங்களிலே எல்லாம் வைக் கிறார்கள். ஆனால், இங்கே வைக்க வேண்டும். 120 அடி தண்ணீர் தேக்கப்படுகின்ற இந்த அணையில் அவசியம் ஜென ரேட்டர் வைக்கப்பட வேண்டும். அப்படி வைக்கப்படாததற்கு வருத்தப்படுகிறேன்.

கடந்த மாதம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர் களும் எங்கள் பகுதிக்குச் சுற்றுப்பயணம் வந்தார்கள். மாண்பு மிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்டார்கள், ஏன் ஜெனரேட்டர் இங்கே வைக்கப்பட வில்லை என்று. நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தேனே, அப்போது கேட்டிருக்கலாமே என்றார்கள். எனவே, அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அங்கே உடனடியாக ஒரு ஜெனரேட்டரை வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பவானிசாகர் அணையிலே இந்த ஆண்டு 1,75,000 கன அடி தண்ணீர் 4 மணி நேரத்தில் வெள்ளம் வந்த காலத்தில் வந்தது. அதனால் அங்கே சர்பிளஸ் தண்ணீர் இருக்கிறது. ஆனால், அதிகாரிகள் 1,10,000 கன அடி தண்ணீர்தான் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் எப்படி 50,000 கன அடி தண்ணீர் சர்பிளசாக வருகிறது. எனவே, தொடர்ந்து 4 மணி நேரத்திற்கு பவானிசாகர் அணையில் வெள்ளத்தால் தண்ணீர் வந்தால் அது உடைகின்ற நிலைமை வரும். எனவே இப்படிப் பட்ட பயம் அங்குள்ள அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் வந்திருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே அதிகப்படியான தண் ணீர் வருமானால், அந்தத் தண்ணீர் வெளி யேறுவதற்கு ஒரு அவுட்-லெட் (சர்பிளஸ் வே) அமைக்க வேண்டும். இதனைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கீழ் பவானி வாய்க்காலில் விடப்படுகின்ற தண்ணீர் விவசாயிகளுக்குப் போதிய அளவில் இல்லை. இந்த நிலை காரணமாக, பெரும்பகுதி தரிசு நிலங்களாக இருக்கின்றது. அந்தப் புறம்போக்கு நிலங்களை, தரிசு நிலங்களை அந்தப் பகுதி யிலே உள்ள விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். அப்படி சாகுபடி செய்கின்ற விவசாயிகள் 50,100 என்று லீசுக்காக பணம்

கட்டி வருகிறார்கள். அவர்களுக்கு அந்த நிலங்களை இந்த அரசு பட்டா செய்து கொடுக்க வேண்டும். ஆனால், அதிகாரிகள் 4, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆட்சி மாறுகின்றபோது, வசதி படைத்தவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்து விடுகிறார்கள். அதனால் தகராறு ஏற்படுகிறது. இந்த நிலைமையையும் சரிசெய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பவானிசாகரிலே ஏராளமான கூலீஸ் லைன் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. அங்கிருக்கக் கூடிய வீடுகள் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. கடந்த 25 ஆண்டுகளாக சரியான பராமரிப்பு எதுவும் செய்யாததால், ஜன்னல் இல்லாமல், பெயின்ட் அடிக்காமல் இருக்கின்றன. எனவே, இந்த வீடுகளை அங்கே கூலி வேலை செய்கின்றவர்களுக்கே கொடுத்து விட வேண்டும். அதற்கான உத்திரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-10.]

காரணம் மேட்டூர் அணையில் அவ்வாறு கொடுக்கப்பட்டது. நான் இதைப்பற்றி நிர்வாகப் பொறியாளரிடம் மகஜர் கொடுத்து இருக்கிறேன். அதை நன்கு ஆராய்ந்து இங்கிருக்கின்ற குவார்ட்டர்ஸை அவர்களுக்கே கொடுக்க அதிகாரிகளை கலந்து கொண்டு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கீழ்பவானி தண்ணீர் திறந்து விடுகின்ற பிரச்னையில் இதற்கான அறிவிப்பு எங்கிருந்து வரவேண்டும், எப்படி வர வேண்டும் என்ற ஒரு நல்ல நிலைமை இல்லாமல் இருந்து வருகிறது, இந்த அறிவிப்பு பொதுப்பணித் துறையிடமிருந்துதான் வரவேண்டும். ஆனால் இப்போது ரெவின்யூ டிப்பார்ட்மென்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. கரெக்டான முறையில் இந்த அறிவிப்பு தெரிவதில்லை. பொதுப்பணித் துறைதான் திறந்து விடுகிறது. ஆனால் ரெவின்யூ டிப்பார்ட்மென்ட் இந்த அறிவிப்பை வெளியிடுகிறார்கள். எப்போது தண்ணீர் திறந்து விடுகிறார்கள் என்று எங்களாலும் சரியாக சொல்ல முடிவதில்லை. பொதுப்பணித் துறையினரிடம் கேட்டால் கலெக்டர் எப்போது அறிவிக்கிறார்களோ அதன் பின்னால் திறந்து விடுவோம் என்று தெரிவிக்கிறார்கள். இதனால் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் (மணியடிக்கப்பட்டது). நீங்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இன்னும் கொஞ்சம் நேரம் தருமாறு வேண்டுகிறேன். மேலும் கிளை வாய்க்கால்களில் தகராறு என்றால் அப்போது ஜாயின்ட் இன்ஸ்பெக்ஷன் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பொதுப்பணித் துறையினரும்

ரெவின்யூ டிப்பார்ட்மென்ட்காரர்களும் தனித்தனியாக ரிப்போர்ட் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதைப் போக்க தண்ணீர் திறந்து விடக்கூடிய அதிகாரம் இருக்கின்ற பொதுப் பணித்துறையிடமே அறிவிப்பு தருகின்ற முழுப் பொறுப்பையும் தருவதற்கு அமைச்சர் அவர்கள் மற்ற அதிகாரிகளிடமும் ஆலோசித்து இதில் நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) விரைவில் முடித்துவிடுகிறேன்.

கீழ் பவானியைப் பொறுத்தவரையில் கிளை வாய்க்காலின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது. முன்னால் 20 அடி வீதி வாய்க்காலில் இருந்தது என்றால் இப்போது 10 அடி தான் இருக்கிறது. கீழே இருக்கின்ற விவசாயிகள் மேலே சென்று பார்ப்பதற்கு நடைபாதை கூட இல்லாமல் இருக்கிறது. நீங்கள் சீரமைப்புக்காக பல இலட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆகவே கீழ் பவானி கிளை வாய்க்காலை நல்ல முறையில் சீரமைப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விவசாயிகளின் சார்பாக ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். பவானிசாகர் பகுதியில் வாழைப்பழம் 3 ரூபாய், 4 ரூபாய் என்று வாங்கி வருகிறார்கள். அது சென்னையில் 25 பைசா என்று விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அங்கே 3 பைசாவுக்கு கொடுப்பதை இங்கே 20 பைசா 25 பைசா என்று கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் எங்களைப் போன்றவர்கள் இங்கே வாழைப்பழம் வாங்கி சாப்பிடுவதேயில்லை.............. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) : வாழைப்பழத்தோடு முடியுங்கள். நேரமாகிவிட்டது.

திரு. வி. கொ. சின்னசாமி : மேலும் தட்டப்பள்ளி போன்ற பகுதிகளில் விதிக்கப்படும் வரியை விட அதிகமாக கீழ்பவானி பகுதியில் சிறப்புத் தண்ணீர் வரி என்று போட்டு அதிகமாக வசூலிக்கிறார்கள் தயவு செய்து இந்த சிறப்புத் தண்ணீர் வரியை வசூல் செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1979–80 ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியத்தை வரவேற்று பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற 1977–78 ஆம் ஆண்டு நிதிநிலையறிக்கையில் போளூர் வட்டத்தில்

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இடத்தில் செண்பகத் தோப்பு அணை கட்டுவதாக அறிவிக்கப்பட்டு, அதற்காக நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டிருந்தது. நானும் என் தொகுதியிலுள்ள விவசாயிகளிடம், புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் அணை வந்துவிட்டது என்று சொல்லி வந்தேன்.

பொதுவாக கிராமத்திலே சொல்வார்கள் ; அதை குறிப்பாக நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். முதலிலே வாழை இலை; இரண்டாவது தை இலை ; மூன்றாவதாக கை இலை என்று. ஆனால், நம் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்று, நம் ஏழை விவசாயிகளுக்கு முதலிலேயே வாழை இலை போட்டு, அதிலே உணவு பதார்த்தங்களையும் பரிமாறி விட்டோம். கைக்கு வந்தது, வாய்க்கு வரவிலை என்பார்கள். அதுபோல இந்த வேலையைத் துவக்காமல், தடையாக இருந்திடாமல் , அங்குள்ள மக்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே இந்த அணைத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் பல முறை இப்போதுள்ள நீர்ப்பாசன அமைச்சர் அவர்களிடம் இந்த செண்பகத்தோப்பு அணைக்கட்டைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். அது இன்வெஸ்டிகேஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஆனால், 1977–78 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு 3 கோடியே 55 இலட்சம் என்று திட்டமிடப்பட்டு, அந்த ஆண்டு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்த வேலை துவக்கப்படவில்லை. ஆனால், இந்தக் காரணத்தை அங்குள்ள மக்களுக்குச் சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே, அமைச்சர் அவர்கள் இந்த அணைக்கட்டு திட்டத்திலே கவனம் செலுத்தி, உடனடியாக இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கிராமங்களிலுள்ள ஏரிகளுக்கு வரும் வரத்துக் கால் வாய்களை, 100 ஏக்கருக்கு குறைவாக பாசனம் உள்ள ஏரிகளின் வரத்துக் கால்வாய்களையும் அரசு நிதியிலேயே வெட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, போளூர் ஏரியையும், அதனைச் சார்ந்த கால்வாய்களையும் ஆழப்படுத்துவதற்கான திட்டத்தை அமுல்படுத்த இருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஏரியை ஆழப்படுத்தும்போது, அவசியம் அதனைச் சார்ந்த கால்வாய்களையும் ஆழப்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் கோரும் நெல்லுக்கு அதிக விலையை, மத்திய அரசிடம் கேட்டு பெற்றுத் தரவேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ஜே. சுப்பிரமணியம்] [1979 மார்ச் 30

சில நேரங்களில் இயற்கையின் சீற்றத்தால், புயல், மழை, வெள்ளம், கல் மழையினால் விளையும் பயிர்களுக்கு ஏற்படும் சேதாரத்திற்கு அரசு மானியம் வழங்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டம். கிணறு பாசனத்தில் விவசாயம் நடைபெறுகின்றது. எனவே, கிணற்றை ஆழப்படுத்த துளை போடும் கருவி வேளாண்மைத் துறையினரால் குறைந்த வாடகைக்கு, குறுகிய காலத்தில் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு மின்சாரம் பெற, 90 நாட்களுக்குள் மோட்டார் வாங்கி பதிவு செய்ய வேண்டும் என்ற விதியைமாற்றி, 180 நாட்களுக்குள் மோட்டார் வாங்கி பதிவு செய்ய வேண்டுமென மின்துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லியும் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரையில் செய்யவில்லை. இனியாகிலும் நடவடிக்கை எடுத்து இதனை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் துணை வேளாண்மை அதிகாரிகள் அனைவரையுமே ஆணையாளரின் கீழ் பணியாற்ற உத்தரவளிக்க வேண்டும். ஒருவர் ஆணையரின் கீழும், இன்னொருவர் மாவட்ட வேளாண்மை அதிகாரியின் கீழும், பணியாற்றுவதால், பணி ஒழுங்காக நடைபெற முடியவில்லை. அதனால், எல்லா துணை வேளாண்மை அதிகாரிகளையும் ஆணையரின் கீழ் பணி செய்யவும், மற்றைய வேலைகளை மாவட்ட வேளாண்மை அதிகாரி ஆய்வு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எங்கள் மாவட்டத்தில் அரசினர் மருத்துவக் கல்லூரி இல்லை; பொறியியற் கல்லூரி இல்லை. நாங்களோ விவசாயிகள். அதனால், ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், போளூர், கலசபாக்கம், சேத்துப்பட்டு ஒன்றியங்களில் விவசாயிகள் நிறைய கரும்பு பயிரிடுகிறார்கள். நீண்ட நாட்களாக போளூரில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ வேண்டுமென்று விவசாயிகள் கேட்டு வருகிறார்கள். எனவே, அவர்கள் கோரிக்கையை ஏற்று இந்தத் திட்டத்தை நமது புரட்சித் தலைவர் ஆட்சியிலே உடனடியாக எங்கள் ஊரிலே ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 30] [திரு. கே. ஜே. சுப்பிரமணியம்]

[பிற்பகல் 12–20]

என்னுடைய மாவட்டத்தில் பாலாறு காய்ந்து வற்றி யிருக்கிறது. பாலாற்றில் தண்ணீர் விடப்பட்டால் அக்கம்பக்கத் தில் ஊற்றுகள் கிடைக்கும். பாலாற்றில் தண்ணீர் விடும்படி கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிமுடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, வேளாண்மை, பாசனம் சம்பந்தப்பட்ட மானிய கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய நிலையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு வேளாண்மை, பாசனம் போன்ற மானியங்களுக்கு வேளாண்மைத் துறைக்கு 109,19,79,000 ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கிறது. ஒட்டுமொத்தமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டிருக்கும் அம்சங்களைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும்பொழுது மொத்த வருவாயில் எட்டில் ஒரு பகுதிதான் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது என்பதை இந்த நேரத் தில் எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத் துறையில் திட்டமிடுவதிலும் சரி, நடைமுறைப்படுத்துவதிலும் சரி, இதிலே இருக்கக்கூடிய அடிப்படையான முதலாளித்துவ முறைகளிலே மாற்றம் வேண்டும். கிராமப் புறங்களிலே இருக்கக் கூடிய ஏழை விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலம் கொடுக்கும் முறையில் திட்டங்களைத் திருத்தி யமைக்கவேண்டும். 1977–78, 1978–79, 1979–80 ஆகிய ஆண்டுகளில் அரசாங்கம் சில திட்டங்களைப் போட்டு நிறை வேற்றப்படாமல் போனதற்கு சில குறைபாடுகளைக் கூறுகி றார்கள். அந்தக் குறைபாடுகள் அடிப்படையான காரணம் அல்ல என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1979–80-ஆம் ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்தி 88·73 லட்சம் டன் என்றும், வர்த்தகப் பயிர் உற்பத்தி 36·45 லட்சம் டன் என்றும் உற்பத்தியின் குறிக்கோளை நிர்ணயித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு உற்பத்தியில் 87 லட்சம் டன் என்றும், வர்த்தகப் பயிரில் 36 லட்சம் என்றும் திட்டமிடப்பட்டது. ஒட்டுமொத்த மாகப் பார்க்கும்போது எண்ணெய் வித்துக்களில் திட்டமிட்ட அளவான 15·70 லட்சம் டன்னுக்கு மாறாக 14·07 லட்சம் டன்கள்தான் உற்பத்தியாகியிருக்கிறது. இதன் மூலம் குன்றந்த பரப்பளவில்தான் உற்பத்தியாகியிருக்கிறது என்பது தெரிகிறது. இதற்கு என்ன காரணம்? காலாகாலத்தில் மழை பெய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்தக் காரணங்கள் எல்லாம் சரியான காரணங்கள் அல்ல. நெல் சாகுபடியைப் பொறுத்து 27 லட்சம் ஏக்கர்களில் பயிர் செய்வதற்குப் பதிலாக 26·50 லட்சம் ஏக்கர்களில்தான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அரை லட்சம் ஏக்கர் குறைந்து விட்டது. அதேபோல் பருத்தி உற்பத்தியிலும் 4·25 லட்சம் பேல்களுக்கு எதிராக 3·75 லட்சம்

பேல்கள்தான் இருக்குமென்று தெரிகிறது. எனவே, குறிக்கோள் அடிப்படையில் நிறைவேறவில்லை என்பது தெரிகிறது. இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் மழை மாறிப் பெய்வதல்ல. அதற்கு அடிப்படையான காரணம் கிராமங்களில் இருக்கக்கூடிய சிறு விவசாயிகளை, விவசாயக் கூலிகளை ஊக்குவிக்கும் அடிப்படையில் திட்டங்கள் இல்லாதிருப்பதுதான்.

அரசாங்கத்தால் விவசாயத்திற்காகத் தரப்படுகிற பல்வேறு சகாயங்கள், உதவிகள் எல்லாம் வசதி படைத்த பணக்காரர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. அவர்கள்தான் அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு, சிறு குத்தகைதாரர்களுக்கு இந்த உதவிகள் கிடைப்பதில்லை. இன்றைக்கும் கிராமத்தில் பெரும் பணக்கார விவசாயிகள், முதலாளித்துவத்தின் ஆதிக்கம் குறையவில்லை. இந்த அரசு வந்த பிறகு அதிலே எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. இந்த அரசு அந்த மாற்றங்களை உருவாக்க எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பாசன வசதி. இன்றைக்குத் தமிழ் நாட்டிலே ஆற்றுப் பாசனம், குளத்துப் பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற இந்த மூன்று வகையான பாசனங்கள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக நீர் முழுமையும் பயன்படுத்தியாகி விட்டது. இனிமேல் மேற்கு நோக்கிப் பாயக் கூடிய ஆற்றிலே உள்ள எஞ்சிய தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பார்க்கவேண்டும். பாசனத்தில் ஒரு சரியான அடிப்படை வேண்டுமென்றால் மழை காலத்திலே விழுகிற நீரை, அதிலே எந்தவிதமான சேதாரமும் இல்லாமல் கிராமப் புறங்களிலே உள்ள விவசாயிகளுக்குப் பயன்படுகிற வகையிலே, ஒவ்வொரு கிராமத்திலேயும் கிணறுகளுக்கு அடி ஊற்றுகள் ஏற்படக்கூடிய முறையிலே மழை நீரைத் தேக்கி வைக்க ஆங்காங்கே குளங்கள், குட்டைகள், ஏரிகளைக் கட்டி அவைகளைப் பாதுகாத்து, நிலத்திலிருந்து கிணற்று ஊற்றை, குடிநீரை உருவாக்குவதற்குத்தான் முயற்சிக்க வேண்டுமே தவிர வேறு மார்க்கம் இல்லை. ஆகவே நிலத்தடி நீரை உருவாக்குவதற்கான கேந்திரமான ஒரு திட்டத்தை உருவாக்கி அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய பாசனத் திட்டங்கள் 12 திட்டங்களை நிறைவேற்றுகிறீர்கள், அது வரவேற்கக்கூடிய அம்சம். பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திலே 2 லட்சத்து 53 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் கிடைக்கவேண்டுமென்று திட்டம் போடப்பட்டது. ஆனால் இன்றைக்கு 1 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குத்தான் தண்ணீர் போகிறது என்ற நிலைமை இருக்

கிறது. பாக்கியுள்ள நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்கவேயில்லை. ஆனால் மேலும் $1\frac{1}{4}$ லட்சம் ஏக்கருக்கு விஸ்தரிக்கத் திட்டம் போட்டு இருக்கிறீர்கள், போடுகிற திட்டங்களை நிறைவேற்றி னால் நல்லது. அவைகளை நிறைவேற்றுவதற்கான சரியான வகையில் முயற்சி எடுக்கவேண்டும். கேரள அரசோடு பேசி தண்ணீர் வாங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். எஞ்சியிருக்கக்கூடிய தண்ணீரைபெற்று ஆங்காங்கு குளம், குட் டைகளைக் கட்டி அங்கே தண்ணீர் தேங்குவதற்கான அடிப்படை யான ஏற்பாடுகளைச் செய்தால் தான் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வைகை திட்டம். பார்த்திபனூர்—விரகனூர்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள், அதனால் அங்கே உள்ள 400 ஏரிகளுக்கு தண்ணீர் வசதி கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதையும் விரைவிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழனி தாலுகாவிலே வரதமா நதியிலே வாய்க்கால் கட்டி அதன் மூலமாக அய்யன்குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அந்த வாய்க்காலுக்கு சிமின்ட் சிலாப் போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்லணையைச் சீர்படுத்துவதற்கும் முக்கிய ஆறு களுக்கும் கிளைகளுக்கும் கரைகளை வலுப்படுத்தவும், ஆறுகள், அதன் கிளைகள் ஆகியவற்றின் குறுக்கே ரெகுலேட்டர்களை கட் டுதல், படுகை அணைகளை ரெகுலேட்டர்களாக மாற்றியமைத் தல், கதவுகளைப் புதுப்பித்தல் மூலம் கொள்ளிடம் அணைக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகிய திட்டங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைக்கோடியிலே உள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக் காத நிலைமை இருக்கிறது. அவர்களுக்குத் தண்ணிர் நிரந்தர மாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து, சிறுபாசனத் திட்டங்கள் என்ற அடிப்படையிலே 50 திட்டங்களை நடப்பு ஆண்டிலே நிறைவேற்றுவது அரசி னுடைய திட்டம். ஆனால் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அதிலே ஆறே ஆறு திட்டங்கள்தான் இருக்கின்றன. அந்த ஆறு திட்டங்களும் பவானி, கோபி, சத்தியமங்கலம், தாராபுரம் ஆகிய 4 தாலுக்காக்களிலேயும் ஒவ்வொரு திட்டம் என்ற முறை யிலே போடப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் தாலூகா, பல்லடம், அவினாசி ஆகிய மூன்று தாலுக்காக்களிலும் கிணறு அடி ஆழம் 200 அடி. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு இது தெரியும். இந்தியாவிலேயே 200 அடி ஆழம் உள்ள கிணறு கள் வேறு எங்கேயும் இல்லை. கோயம்புத்தூர் தாலூகாவிலே இருக்கக்கூடிய விசேஷமான நிலைமை அதுதான். என்னுடைய

தோட்டத்திலேயே கூட டபுள் மோட்டார்தான் வைத்து இருக்கிறோம். சிங்கிள் மோட்டார் வேலை செய்யாது. இப்படி நிலத்தடி நீர் 200 அடிக்குக் கீழே போய்விட்டது. அந்தப் பகுதியிலே நிலத்தடி நீரைக் கொண்டு வருவதற்காக எந்தத் திட்டமும் போடப்படவில்லை. மேல் பவானி திட்டம் என்று சொன்னார்கள், அது நடக்கவில்லை. பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் என்று சொன்னார்கள். எப்போது நடக்கப்போகிறதோ தெரியவில்லை. அடுத்து குந்தா நீர்ப்பாசன திட்டம் சாத்யமான திட்டம். சர்க்கார் அதைச் செய்யலாம். என்ன காரணத்தாலேயோ இதற்கு முன்னாலே இருந்த அரசுகள் இந்தத் திட்டத்தை கிடப்பிலே போட்டன. இந்த அரசும் கிடப்பிலே போட்டுவிட்டது. அது சரியல்ல. அந்த குந்தா திட்டத்தை நிறைவேற்றினால்தான் கோயம்புத்தூர் ஓரளவிற்கு உயிர் பிழைக்க முடியும். இல்லாவிட்டால் எந்தக் குடியானவனும் அங்கே இருக்க முடியாது. கோயம்புத்தூர் மாவட்டத்திலே உள்ள காட்டாறுகளைத் தடுத்து ஆங்காங்கு அணைகளைக் கட்ட வேண்டும்.

[பிற்பகல் 12-30]

என்னுடைய தொகுதிக்குள் இருக்கின்ற, கோயம்புத்தூர் தாலூக்கா வடக்கு பகுதியிலே நகரத்தின் மையத்திலுள்ள சங்னூர் பள்ளத்தைத் தடுத்து திருப்பி சின்னவாடம்பட்டியில் குளம் கட்ட வேண்டும். அவ்வாறு இல்லாத காரணத்தினால் கோவை நகர பகுதியில் வருஷத்திற்கு ஒருமுறை சேதம் ஏற்படுகிறது. அந்தப் பள்ளத்தைத் தடுத்து திருப்பி சின்னவாடம்பட்டியில் குளம் கட்டினால் அந்த வட்டாரத்திலே உள்ள 15 பஞ்சாயத்துக்களில் 50-க்கு மேற்பட்ட கிராமங்கள் பாசன வசதி பெறும், மேலும் ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர்கள் நஞ்சை பாசன வசதி அடையும், கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான கிணறுகளில் அடி ஊற்று கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டம் 1957 ஆம் ஆண்டிலேயிருந்து, சென்ற இருபதாண்டுக் காலத்திற்கும் மேலாகக் கிடப்பிலே இருக்கிறது. இன்றைக்கும் கூட ஆய்வு ஆய்வு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முதலில் 85 இலட்சம் ரூபாய் சிலவு ஆகும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். 1977ஆம் ஆண்டிலே 1 கோடியே 14 இலட்சம் ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள், இப்பொழுது என்னவென்றால், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். எத்தனை கோடி ரூபாய் வேண்டுமென்றாலும் செலவு செய்யட்டும். பணம் எவ்வளவு செலவு செய்கிறீர்களோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால் இந்தத் சின்னவாடம்பட்டி குளத்து திட்டம் நிறைவேறுமா நிறைவேறாதா என்பது தெரிந்தாக வேண்டும். ஒன்று தெளிவாகச் சொல்லிவிடுங்கள், அந்தக் குளத்தைக் கட்டமாட்டோம் என்று சொல்லுங்கள், இல்லை என்றால் கட்டுகிறோம் என்றாவது சொல்லுங்கள். இரண்டில் ஒன்று சொல்லாமல், அந்தத் திட்டத்திற்கு வாலிப வயதும் வந்து, கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யாமல் இருப்பது

சரியா? அந்த பகுதி விவசாயிகளிடத்தில் யார் பதில் சொல்வது? நான் வேண்டுமென்றால் அந்த விவசாயிகளைக் கூட்டி வைக்கிறேன், மாண்புமிகு அமைச்சரவர்கள் வந்து பதில் சொல்லி சமாதானம் ஏற்படுத்தட்டும். அங்கே நிலைமைகள் இப்படி இருக்கின்றன. 200 அடி ஆழம் கிணறு இருக்கிறது. எட்டிப் பார்த்தால் தலைப்பாகை கூட கீழே விழுந்து விடும். இவைகளெல்லாம் கவனிக்கப்பட வேண்டும்.

அடுத்து, ஏரி தூர் வாருதல் என்பதைப் பற்றி எடுத்துக்கொண்டால் 26 ஸ்கீம்களைப் போட்டிருச்கிறீர்கள். ஆனால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரேயொரு ஏரிக்குக் கூட ஒரு செம்பால் அடித்த காசுகூட ஒதுக்கப்படவில்லை. அது மிகப் பெரிய மாவட்டம். கோயம்புத்தூர், ஈரோடு என்ற இரண்டு மாவட்டங்களும் இருக்கின்ற மிகப் பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஒரு ஏரியைத் தூர் வாருவதற்கான திட்டம் கூட இல்லையா, ஒரு குளத்தைத் தூர் வாருவதற்கான திட்டம் கூட இல்லையா? 1979–80-ஆம் ஆண்டிற்கு அப்படி ஒரு திட்டம்கூடப் போடவில்லை என்றால் அங்குள்ள குளங்களிலே மண் அடித்திருக்கிறது, அந்த மண்ணை அகற்றுவதற்கான விசேஷ ஏற்பாடு ஏதேனும் செய்திருக்கிறீர்களா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள செண்பகவல்லி அணை பழுதுபட்டு இருக்கிறது. அதைப் பழுது பார்த்தால் குறைந்த செலவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லுக்கு புகையான் என்ற நோயும், வாழைக்கு முடிகொத்து என்ற நோயும், பருத்திக்கு புரொடீனியா என்ற நோயும் இரப்பருக்கு ஒடியம் என்ற நோயும் வருகின்றது. இந்தப் பூச்சிகளினால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. அதற்காகப் பயன்படுத்தப்படும் பூச்சி மருந்துகளுக்கு எந்தவிதமான சக்தியும் இல்லை. மருந்தில் அந்தப் புழுக்களைத் தூக்கிப் போட்டால் அந்தப் புழுக்கள் சாவதில்லை; ஆள்தான் சாகிறான். சர்க்கார் அதிகாரிகள் சர்டிபிகேட் செய்து கொடுத்த மருந்துகளைப் போட்டாலும் பலன் இல்லை. பாலிதானாக இருந்தாலும் சரி, எண்ட்ரின் மருந்தாக இருந்தாலும் சரி, டி.டி.சி.யானாலும் சரி, இப்படிப் பல்வேறு உயர்தரமான மருந்துகளைக் கிராமக் குடியானவர்களுக்குக் கொடுப்பதில் புழுக்களைத் தூக்கிப் போட்டால் அவைகள் சாவதில்லை. இப்படித்தான் நெல், பருத்தி, வேர்க்கடலை என்று இதில் எதை எடுத்துக் கொண்டாலும் இந்த நிலைமைதான் இருக்கிறது.

விதை தானியங்களைப் பொறுத்தவரையிலும் நல்ல பொறுக்கு விதைகளாக இல்லை. சோளம், ராகி, கம்பு, வேர்க்கடலை ஆகியவற்றிற்கு அதிகாரிகள் சர்ட்டிபிகேட் செய்து

கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கின்ற 10 பொட்டலங்ளிலே 8 பொட்டலங்கள் வேஸ்ட்டாகி விடுகின்றன. இரண்டு பொட்டலங்கள்தான் பிழைக்கின்றன. எனவே, தரமான விதை தானியங்கள் அளிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கிருக்கின்ற கவனம் போதாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எலித் தொல்லைகளை எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆறில் ஒரு பகுதி உணவை அழிக்கிறது. ஆகவே, எலியை ஒழிப்பதற்குச் சரியான திட்டம் வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேமாதிரி பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு நியாயமான விலையிலே காலாகாலத்திலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவைகளைக் கன்சஷன் ரேட்டிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்படிக் கிராமப்புறங்களில் உள்ள ஏழை சிறிய நடுத்தர விவசாயிகள் பாதிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு, சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதை அரசு கணக்கிலெடுத்துக் கொண்டு செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குத் திட்டம் இடுவதிலும், அமுலாக்குவதிலும் இருக்கக் கூடிய கோளாறுகளைப் போக்குவதற்குச் சரியான நடவடிக்கை தேவை என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, பாய்ண்ட் ஆப் ஆர்டர். ½ மணி நேரமாக, எதிர்க்கட்சி வரிசையில் எந்தத் தலைவரையும் காணோம். 9 மணியிலிருந்து 1½ மணி வரை நான் ஒழுங்காகக் கடமை ஆற்றுவேன் என்ற எதிர்க்கட்சித் தலைவர்களில் யாருமே இல்லாதது, வேதனை அல்லவா? அதிலும், இவ்வளவு மிக முக்கியமான பிரச்னையில்

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) : இதிலே ஒன்றும் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சருடைய பாராளுமன்றச் செயலாளராக மிகப்பெரிய பொறுப்பு ஏற்றிருக்கிற இந்த நிலையிலும் எதிர்க்கட்சி வரிசையிலே தலைவர்கள் இல்லையென்று சொன்

னார்கள். தலைவர்கள் எப்பொழுதுமே இங்கே இருக்க வேண்டுமென்ற நிலை இல்லை. அவர்கள் தங்கள் ஓய்வு அறையிலே இருப்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், அதைவிட, முதலமைச்சர் வரவில்லை; இந்த மன்றம் கூடிய நாளிலேயிருந்து முதலமைச்சர் வரவில்லை. அது அந்தப் பகுதியிலேயிருக்கிற உறுப்பினருக்குத் தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் இப்பொழுதுதான் போனார், இதோ வந்துவிட்டார்.........

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு பாராளுமன்றச் செயலாளர் அவர்கள் இங்கே எடுத்து வைத்த இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். உங்கள் முதலமைச்சரைப் போல், இங்கே வருவதே இல்லையென்கின்ற அந்த நிலையை நான் கடைப்பிடிக்கவில்லை, நீங்கள் அழைத்த உடனே எப்படி கஜேந்திரன் அழைத்தவுடன், மகாவிஷ்ணு அபயம் கொடுக்க வந்தாரோ, அது போல் நான் உடனே வந்துவிட்டேன். அதைப்போல் நாங்கள் அழைக்கிற காலத்திலே உங்களுடைய அமைச்சர்களை வரச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களும் கேட்டுக்கொண்டுதானிருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் இங்கே வந்து காப்பாற்றுகிறார், அவர் வராமலேயே காப்பாற்றுகிறார்.

திரு. கு. ரமணி: ஒரு விஷயம். எல்லா எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் இங்கே இல்லையென்ற மாதிரி அவர் சொல்கிறார். எதிர்க்கட்சித தலைவர்களோ, உப தலைவர்களோ இல்லாவிட்டால், அவர்களுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு எங்கள் கட்சியைப்பொறுத்தவரையில்—12பேர்கள் இருக்கிறஎங்களுடைய அங்கத்தினர்களில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். 125 பேர்களுக்கு மேல் அங்கத்தினர்களை வைத்திருக்கிற உங்கள் தரப்பிலே, எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்..........

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் முன் வரிசையில் இல்லையென்று சொன்னார்கள் இப்பொழுது, அவருடைய கோரிக்கைக்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவரும், அமைச்சர்களும் வந்துவிட்ட காரணத்தால், இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து, விவாதத்திற்கு போக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரை மூன்று பேர் முதல் வரிசையிலே உட்காருகிறோம். அந்த மூவரில் ஒருவராகிய நீங்கள், சபாநாயகரே இல்லாத காரணத்தால், அங்கே போய் உட்கார வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுவிட்ட நிலைமையிலே தான் இந்தச் சங்கடம் ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) : சபாநாயகர் இல்லையென்ற பிரச்சனை இல்லை. சபாநாயகர் நியமித்த ''சேர்மன் பேனல்'' இருக்கிறது. அந்தப் பேனலில் நானும் ஒருவனாக இருக்கிற காரணத்தால், சபாநாயகர் என்னை நியமித்து விட்டுப் போயிருக்கிறார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒவ்வொரு நாளும் காலை 2 மணி நேரமாவது இந்த அவையில் வந்து இருந்து முக்கியமான பிரச்சனைகளில் கலந்து கொண்டுதான், ஓய்வு பெறுவதற்கு அல்லது சில முக்கியமான தேவைக்காக வெளியே செல்கிறார்கள்.

திரு. சீனி. செல்வராஜ் : * * *

[பிற்பகல் 12-40]

திரு. ஜே. ஜேம்ஸ் : * * *

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) : ஜேம்ஸ் கோபப்படக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் பிரச்சனையை மட்டும் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நாங்கள் ஒவ்வொரு நாளும் இங்கே வந்து முக்கியமான எல்லா பிரச்சனைகளிலும் கலந்து கொண்டுதான் வெளியே செல்கின்றோம். முக்கியமான தேவைக்காகத்தான் வெளியே செல்கிறோம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கோட்டைக்குள் தினமும் வந்தாலுங் கூட, அவையில் எட்டிப்பார்க்கின்ற வழக்கமே இல்லாதிருக்கிறது. இது அவையை அவமதிப்பதாகவும் கருதப்படும். ஆகவே, நாங்கள் பொறுப்பற்ற முறையில் எந்த நாளும், எந்த நேரமும் நடந்து கொள்ளவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பொறுப்பற்ற முறையில் இந்த அவையைத் தட்டிக் கழிக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே, பொறுப்பு, பொறுப்பற்ற பிரச்னை என்பதற்கே இடம் இல்லை. முதலமைச்சர் என்கிற பொழுது அவருக்குப் பல்வேறு பொறுப்புகள் இருக்கின்றன என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. பொதுவாக மன்ற நிகழ்ச்சிகள் நடக்கிற பொழுது, காலையில் முக்கியமாக அனைவரும், எல்லா கட்சித் தலைவர்களுமே கூடயிருந்து நிகழ்ச்சிகளை நடத்துகிறோம். சில நேரங்களிலே வெளியே போய் வருவது தவறில்லை. ஓய்வுக்காகவோ மற்றவைகளுக்காகவோ சில நேரங்களிலே வெளியே போய்

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வருவது என்றைக்கும் முறைதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது அவ்வாறு போய் வருவது இயற்கைதான். ஆனால், அதைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வரவே இல்லையென்றால், பல்வேறு பிரச்னைகளிலே இங்கே பேசியிருக்கிறார்களே, அதெல்லாம் எப்படி நடந்தது என்பதை மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும். பல்வேறு நேரங்களில் அல்ல, சில நேரங்களில்தான் கலந்து கொண்டிருக்கிறார்களே தவிர, பெரும்பான்மையான அளவுக்கு அவர்கள் கலந்து கொள்வதில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சில, அல்லது பல என்பது அவரவர் எண்ணத்தைப் பொறுத்தது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, புரட்சித் தலைவரது ஆட்சியிலே இந்த மன்றததிலே எந்தச் சந்தர்ப்பத்திலும் மெம்பர்கள் எழுந்திருந்து பேசலாம் என்ற உரிமை இருப்பதாகவே என்னைப் போன்றவர்கள் அறிகிறோம். அந்த நிலையில், நம்முடைய அனுபவம் உள்ள மெம்பர் எழுந்திருந்து இன்னொரு மெம்பரை மரியாதைக் குறைவாகப் பேசுவதால்

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): சபாநாயகர் அனுமதித்தால் பேச வேண்டும். ஜேம்ஸை பேசத்தான் நான் அனுமதித்தேன். அப்பொழுது ஒரு உறுப்பினர் என் அனுமதியில்லாமல் குறுக்கிட்டார். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி வரக்கூடாது என்று சொல்லி, திரு. ஜெயராமன் அவர்களைப் பேசும்படி அழைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஜேம்ஸ் அவர்கள் கோபத்திலே சில வாசகங்களைச் சொன்னார்கள். அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பதற்குத் தாங்கள் தீர்ப்பு கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் (திரு. எஸ. ஜே. சாதிக் பாட்சா): ஜேம்ஸ் அவர்கள் கோபத்திலே சொன்ன வார்த்தைகளையும், குறுக்கிட்ட உறுப்பினர் சொன்ன வார்த்தைகளையும் குறிப்பேட்டிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன், பத்திரிகைகளிலும் வெளியிடக்கூடாது என்று உத்தரவிடுகிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சியிலே வேளாண்மைக்கும், வேளாண்மைக்கு அடிப்படையாக இருக்கிற பாசனத்திற்கும், வள்ளுவப் பெருந்தகையினுடைய வாக்குக்கேற்ப அதிக நிதி ஒதுக்கீட்டைச்

செய்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்றாகும். 1979—80 ஆம் ஆண்டிற்கு பெரிய, நடுத்தர பாசன திட்டங்களுக்காக ரூபாய் 22.12 கோடியும், சிறப்பு சிறு பாசனத் திட்டத்திற்காக ரூபாய் 250 இலட்சங்களும், தூர் எடுத்தல் மற்றும் சீரமைக்கும் திட்டத்திற்காக ரூபாய் 25 இலட்சங்களும் ஒதுக்கியிருப்பது வரவேற்புக்குகந்த ஒன்றாகும்.

அதற்கடுத்தபடியாக, பல்லாண்டுக் காலமாக கிடப்பிலே, போடப்பட்டிருந்த காவிரி நீர்ப் பிரச்னையிலே மத்திய அரசு உதவியோடு நடவடிக்கைகள் எடுத்து, மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து மாநில அரசு ஆய்ந்து வருவது, இந்தப் பிரச்னையில் இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியையும் ஆர்வத்தையும் காட்டுகிறது.

அதற்கடுத்தபடியாக, மத்திய அரசால் அமைக்கப்பட்டிருக்கிற தொழில் நுட்பக் குழு மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளில் உள்ள மிகுதியான நீரினை கிழக்குத் திசையில் திருப்பி விடுவதற்கான திட்டங்கள் குறித்து பரிசீலனை செய்கின்ற இந்த நேரத்தில், அது பற்றிய பேச்சு வார்த்தைகள் தொடரும் இந்தச் சந்தர்ப்பத்திலே, மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்களால் பெரிதும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிற 'கார்லன்ட் கனால்' திட்ட அடிப்படையிலே, மேற்குநோக்கி ஓடும் ஆறுகளை தமிழகத்திலே வறண்ட மாவட்டங்களான மதுரை, முகவை, மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களிலே திருப்பி விட மாநில அளவில் ஒரு ரீஜினல் கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு நோக்கிப் பாயும் கல்லலாறு, பெரியகுளம், உத்தமபாளையம் போன்ற பகுதிகளில் ஆழப்படுத்தப்பட்டு ஒரு மினி கார்லன்டை அந்தப் பெரியகுளம் கோட்டத்திலே ஏற்படுத்தினால் சுமார் 3 இலட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால், அந்தத் திட்டம் குறித்தும் ஆய்வுப் பணிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக "பெனிஃபிட் காஸ்ட் ரேஷியோ" கணக்கைப் பார்த்து, அதன் காரணமாக நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு பணிகள், பல்வேறு திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டத் திட்டங்கள் மறுபரிசீலனை செய்வதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதை அறிந்து இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூகப் பொருளாதார அடிப்படையில் அவைகளுக்கு உதவும் வகையில் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நீர்ப்பாசன மாநாட்டில் கூறப்பட்ட கருத்துக்கு மதிப்பு அளித்து, பயன் செலவு விகிதாச்சாரம் என்ற கணக்கு பார்க்கும் முறை ரத்து செய்யப்பட்டிருப்பதற்காக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தமட்டில், இந்த ''பெனிஃபிட் காஸ்ட் ரேஷியோ'' அடிப்படையினால் பாசனம் பெற வேண்டிய பல்வேறு பகுதிகள் அதைப் பெற முடியாமல் போயிருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளுக்கு நியாயம் வழங்கும் வகையில் திட்டங்களை மறு பரிசீலனை செய்து, நிறைவேற்றுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் கிடப்பில் போடப்பட்ட பல திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கின்ற நிலை ஏற்படும் என்பதறிந்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியான தேனி பகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியை மேம்படுத்த கூத்தநாச்சியார், சண்முகா நதித்திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே இருந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அதற்காக 12.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் திரும்ப நிறைவேற்றும்போது மேடான பகுதிகளுக்கும் பலன் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்கிலேயர் காலத்தில், 1856-ல் எச். ஜி. ஸ்டோர்க்ஸ் எஞ்சினியராக இருந்தபோது உருவாக்கப்பட்டத் திட்டம் அது. அது நிறைவேற்றப்பட்டால் தேனியிலுள்ள வறண்ட பகுதிகள் வளம் பெறும்.

அடுத்தபடியாக இப்போது ஆய்வில் உள்ள அந்த காட்டாலூர் வாய்க்கால் திட்டத்தை விரைவிலேயே நிறைவேற்றி, வேப்பம் பட்டி, தம்பம்பட்டி, காப்புப்பட்டி, கொடுவாம்பட்டி, தாடிச்சேரி போன்ற கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த வேளாண்மைத் துறையில் பருத்திக்கு பரப்பு குறைவாகவும், விளைச்சல் குறைவாகவும் இருப்பதாக நமது மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அதற்கும் காரணம் நல்ல விதை என்று சான்றளிக்கப்பட்ட விதைகளும், தரமான பூச்சிக்கொல்லி மருந்துகளும், போதுமான இராசயன உரங்களும் கிடைக்காதது மட்டுமல்ல ; புரூடோனியா நோயும் முக்கியமான காரணமாகும். இந்தக் குறைகளைப் போக்கி, பருத்திக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் புஞ்சை நிலங்கள் எல்லாம் மானாவாரி நிலங்களாக இருக்கும் நிலையை மாற்றி, நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தி, அந்தப் பகுதிகளுக்கு ஏற்ப புதிய ஒரு ''கிராப்பிங் பாட்டனை'' உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேனிக்கு அருகே வத்தலக்குண்டு பகுதியில் 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே அரசாங்க விதைப்பண்ணை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

மதுரைக்குப் பக்கத்தில் அல்லது வசதியான இன்னொரு இடத்தில் மற்றொரு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) நேரம் இல்லாததால் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, வேளாண்மை பாசனம் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது நான் ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இவை முக்கியமான கோரிக்கைகள். வேளாண்மை இல்லை என்று சொன்னால் உணவு உற்பத்தி வராது. இப்போது உணவு உற்பத்தியில் தன்னிறைவுப் பெற்றிருக்கிறோம். நெல், மற்றும் வேறு உணவுப்பொருள்களில் போதுமான உற்பத்தியை நாம் கண்டிருக்கிறோம். அதற்கு வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட சாதனைதான் காரணம் என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். ஆனால், இன்றைக்கு இந்த வேளாண்மைத் துறைக்கும் அதோடு சேர்ந்த பாசனத் துறைக்கும் இந்த அரசு ஒதுக்கி இருக்கிற தொகை போதாது. இன்னும் தீவிரமாக இதில் முனைந்து, அதிகத் தொகை ஒதுக்கியிருக்க வேண்டும்.

பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்தமட்டில் எந்த அளவுக்கு அங்கே விவசாயம் முன்னேறி இருக்கிறதோ அந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் முன்னேற்றம். ஆகவே, கூடுதல் கவனம் செலுத்தி, உற்பத்தியில் இன்னும் முன்னேற்றம் காண, இந்த அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

தரமான வீரிய விதைகளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய திட்டங்களைப் போட்டு இருக்கிறோம். இதில் குறிப்பிட்ட ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் மண்வளம், தட்ப வெப்ப நிலை ஆகியவற்றில் மாறுபட்ட நிலையில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் பல முயற்சிகள் எடுத்தாலும், வீரிய விதைகளைப்போட்டு பயிர்செய்தாலும் நாங்கள் எதிர்பார்க்கின்ற விளைச்சல் கிடைக்கவில்லை. ஆகவே, அந்த மாவட்டத்திற்கு ஏற்றவாறு அங்கேயுள்ள சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு வீரிய விதைகள் உற்பத்தி செய்ய வேண்டும். அங்குள்ள அரசுப் பண்ணைகளில் நல்ல விதைகளைப் பயிர் செய்து அந்தப் பகுதிக்கு ஏற்றவாறு அவற்றைக் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

மேலும், மாதிரி விவசாயப் பண்ணை பரவலாக எல்லா இடங்களிலும் விவசாயத்துறை வைத்திருக்கிறது. அந்தத் துறையின் கீழ் மாதிரிப் பண்ணைகளை ஏற்படுத்தி, அந்தப் பகுதியில்

[1979 மார்ச் 30] [திரு. அ. சுவாமிதாஸ்]

அருகில் உள்ள விவசாயிகளை அழைத்து வந்து செயல்முறைகளைக் காட்டி, அந்த முறையில் பயிர் செய்து விளைச்சலைப் பெருக்க ஊக்குவிக்க வேண்டும்.

பயிர் இன்சூரன்ஸ் ஸ்கீம் வேண்டும் என்று நீண்டகாலமாக கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இந்த அரசாங்கம் அதற்காக முனைந்து நின்று தீவிரமாக அதைச் செயலுக்குக் கொண்டு வரவேண்டும். இந்த அரசு எப்போது அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தப்போகிறது என்பதை அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

பயிர்களுக்கு நோய் வந்தால் ஒட்டுமொத்தமாக மருந்து தெளிக்கும் நிலை இருக்கிறது. அரசாங்கத் துறையில் தொழி லாளர்கள் வைத்துத் தெளிப்பது எல்லா இடத்திலும் சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். நானே அதை நேரில் கண் டேன். என் நிலத்தில் அதைப் பார்த்தேன். அதனால் கேடு களும் விளைந்தது உண்டு. வில்லுக்கீறி கிராமம் பகுதியில் விவசாய இலாகா மருந்து அடித்தார்கள். தற்போது அதற்கான செலவை வசூலிக்கிறார்கள். மேலும், விவசாயியே மருந்து வாங்கி அடிப்பதைவிட மூன்று மடங்கு அதிகச் செலவு ஆகிறது விவசாயத்துறையின் மூலமாக அடிப்பதால். அதனால் விவசாயி கள் தலையில் அது ஒரு பளுவாக வந்து விழுகிறது. அரசாங்கம் மருந்து தெளிக்கிற முறையினால் விவசாயிகள் தலையில் சுமை வரக்கூடாது. ஆகவே, என்ன செய்தால், எப்படி நடைமுறைப் படுத்தினால் நன்மை வரும் என்று பார்த்து அதனை நன்கு செயல் படுத்த வேண்டும்.

மண்வள ஆராய்ச்சிக்கு நாம் நிலையங்களை வைத்து இருக்கிறோம். இன்னும் அந்த மண்வள ஆராய்ச்சி தீவிரப் படுத்தபடவில்லை. அதற்குத் தகுந்தவாறு நடமாடும் ஆராய் ச்சி நிலையங்களை அனுப்பி வைத்து கிராமம்தோறும் மண்வள ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், முந்திரிப் பயிர் கூடுதலாகப் பயிர் செய்வதற்கு ஏற்றவாறு பல பகுதிகள் உள்ளன. மிகுதியாக முந்திரி செடி (கேசுநட்) பயிரிடப் வேண்டும். இதனால் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு முந்திரி பயிர் அதிகமாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லுக்குப் புகையான் என்ற நோய் வருகிறது. இந்தப் புகையான் நோய் எந்தக் காரணத்தினால் வருகிறது என்பதை விவசாயத்துறை தீவிரமான கவனம் செலுத்தி கண்டுபிடிக்கத்து அதைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நோய் ஆரம்ப காலத்தில் வந்தால் மருந்து அடித்துப் போக்கிவிடலாம். நெற்பயிர்கள் மூதிர்ந்த நிலையில் பொதியும் கதிருமாக உள்ள நிலையில் வருகிறது.

[திரு. அ. சுவாமிதாஸ்) [1979 மார்ச் 30

அதனால் நல்ல விளைச்சல் எதிர்பார்க்கும் விவசாயி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவனைப் பாதுகாக்கிற வகையில் இந்த நோயை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாசனத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பாசனத்துறையையும், விவசாயத்துறையையும் ஒருங்கிணைத்து செயல்பட அரசு ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டும் வெவ்வேறு வகைகளில் தனித்து இயங்குகின்றன. வேளாண்மைத் துறையோடு ஒருங்கிணைந்து பாசனத்துறை பணி செய்தால் தான் எந்த நேரத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் தேவை என்று அறிந்து அந்த வகையில் தண்ணீர் கொடுக்க செய்ய முடியும். எப்போது கடைநிலத்திற்கு தண்ணீர் வேண்டும் என்று விவசாய இலாகாவிற்குத் தான் தெரியும். ஆகவே, விவசாய இலாகா பொறுப்புக்கும் ஆலோசனைக்கும் வரவேண்டும். வருவாய் அதிகாரிகளிடத்தில் இதை விட்டால் அது சரியாக வராது. ஆகவே, விவசாய இலாகாவும், பாசன இலாகாவும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

பாசனத் துறையைப் பொறுத்தவரையில், குளங்கள், கண்மாய்கள் தூர்ந்து போய் இருக்கின்றன.

ஃபுட் ஃபார் வொர்க் ஸ்கீம் என்று மத்திய அரசு நமக்கு புதிய திட்டங்கள் பல தந்திருப்பதாக அரசுக் குறிப்பிலே தந்திருக்கிறார்கள். அந்த திட்டங்களைப் பயன்படுத்தி தீவிரமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்போது கோடை காலம். எல்லா நீர்நிலைகளிலும் குளங்களிலும் நீர் வற்றி இருக்கும். ஆகவே உடனடியாக குளங்களைத் தூர் எடுத்து செப்பனிட ஏற்பாடு செய்யவேண்டும். அந்த ஃபுட் ஃபார் வொர்க் ஸ்கீம் என்ற திட்டத்தால் உடனடியாக வேலைகளைத் தொடங்கவேண்டும். அதோடு தூர் வாங்கின்ற வேலைகளையும் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

அடுத்துப் பேச்சிப்பாறை கோதையாறு நீர்ப்பாசனத் திட்டம் கன்னியாகுமரியில் உள்ளது. கோதையாறு நீர்ப்பாசன திட்ட கால்வாய்கள் பழுது பார்க்கப்பட்டு ஏறத்தாழ நூறு ஆண்டுகள் ஆகின்றன. அவைகளை உடனடியாக பழுது பார்க்க வேண்டும். கால்வாய்களில் தண்ணீர் விட்டால் அது பாழாய் வீணாய் போகிறது. ஆகவே கடைவரம்பு நிலங்களுக்கு நீர் செல்லாமல் அங்கு நெல்பயிர் தீய்ந்துபோய் விடுகிறது. தற்போது நீர் நிலைகளில் போதிய நீர் நிரம்பி வழிந்தபோதும் கடைவரம்பு நிலங்கள் தீய்ந்துபோகும் நிலை ஏற்படுகிறது. ஆகவே கால்வாய்கள் அனைத்தும் செப்பனிடப் பட்டிருக்கவேண்டும். மதகுகள், மடைகள் சீர் செய்யப்படும் போது டேம்பர் ப்ரூப் மடைகள் அமைக்கவேண்டும்.

அடுத்து கால்வாய்களை எல்லாப் பழுதுபார்ப்பதற்கு மாஸ்டர் ப்ளான்போட்டு உலக வங்கியிலே இருந்து கடன் வாங்கியாவது சீர் செய்யவேண்டும். தற்போது பேச்சிப் பாறை அணையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக பத்திரிகைகளில் படித்தேன். அதையும் அரசு கவனிக்குமாறு வேண்டுகிறேன். அங்குள்ள மதகுகளை எல்லாம் செப்பனிடும்போது டேம்பர் ப்ரூபாக ஆக்கவேண்டும். அதிலே அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுககொள்கிறேன். அடுத்து மழைக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பழயாறு தண்ணீர் வீணாகப் போய்விடுகிறது. அதனைத் திருநெல்வேலி மாவட்டத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு அங்கு அத்தண்ணீரை கொண்டு செல்வதற்கு ஏதாவது வழிவகைகள் இருக்கின்றதா என்று ஆராய்ந்து அதற்கு ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து மாம்பழத்துறை அணை கட்டவேண்டும் என்று நான் நீண்டகாலமாக கோரிக்கை விட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால் அந்த அணை இதுகாறும் கட்டப்படவில்லை. அங்கு ஒரு சிறிய அணை இருகின்றது. அதனை பெரிய அணையாக மாற்றினால் குடிதண்ணீர் பிரச்சினை தீருவது மட்டுமின்றி விவசாயத்திற்கும் பயன்படும்.

அத்தோடு சில கால்வாய்களை நீட்டிக்கொடுக்க வேண்டும் என்று நான் 1964-லே இருந்து இந்த சட்டமன்றத்திலே பல முறை எடுத்துச்சொல்லி இருக்கிறேன். நான் பல முறை வெட்டுத் தீர்மானங்கள், கேள்விகள் போன்ற பல வழிகளில் அது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் இன்னும் அது செய்யப்படவில்லை. குறிப்பாக திருவிதாங்கோடு சானலில் உள்ள கிளைக்கால்வாயாகிய கோடியூர் கால்வாயின் புன்னைமூட்டுப் பிளாக் கால்வாயை நீட்டிக்கொடுக்க வேண்டும். அதற்கு திட்டமிட்டு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது. அதை அரசு செயல்படுத்தவேண்டும்.

அடுத்து சிற்றாறு, பட்டணங்கால்—கருங்கல் கால்வாய் களில் பல கிளைக்கால்வாய்கள் வெட்டவேண்டும் என்று பல முறை சொல்லி இருக்கிறேன். கப்பியறை, பள்ளியாடி ஆகிய பகுதி வாழ் மக்கள் பயன்பெறும் அக் கால்வாய்களை உடனடியாக வெட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து வள்ளியாற்றில் இரண்டு கரைகளிலும் பெரு மழையால் உடைப்பு எடுத்திருக்கிறது. அதைச் செப்பனிட வேண்டும். பல மாதங்கள் ஆகியும் இதுவரை செப்பனிடப் படவில்லை. உடனடியாக அதைச் செப்பனிடவேண்டும்.

கல்குளம் தாலுக்காவில் குமாரகோயில் பெரிய குளம் முன்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. அந்த ஆக்கிரமிப்பு பின்பு அகற்றப்பட்டது. ஆனால் அக்குளத்தில் இன்னும் சீர்திருத்த வேலை நடைபெறவில்லை. மீண்டும் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி நடைபெறுகிறது. ஆகவே அக்குளத்தை சீர் செய்ய உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து திருவெட்டாறு தொகுதியில் நெய்யாற்றின் இடது கரை விஸ்தரிப்புத் திட்டம் என்பது அரசாங்கத்தின் அளவிலே இருந்துகொண்டிருக்கிறது. 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளாங்கோடு, அருமனை, தீக்குரிச்சி ஆகிய கிராமங்களுக்கு கால்வாயை விஸ்தரிக்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக மேற்கு இராமநாதபுரத்தில் வெம்பங்கோட்டை ஒன்றியத்தில் வைப்பாற்றில் ஒரு அணைக்கட்டும், சிவகாசி வட்டாரத்தில் அர்சுணா நதியில் ஒரு அணைக்கட்டும் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு, பூர்வாங்க வேலைகள் முடிந்தும், இன்னும் இந்த வேலைகள் எடுக்கப்படாமலிருக்கின்றது. இந்த வேலைகளை உடனடியாக எடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே :............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேச வேண்டும். உங்கள் தொகுதி குறித்த விவகாரத்தை மட்டும் சொல்லி 5 நிமிடத்திலேயே முடிக்கவேண்டும்.

(பிற்பகல் 1-00)

திரு. த. இராமசாமி: சபாநாயகர் அவர்கள் தயவுசெய்து பயமுறுத்த வேண்டாம்.

(சிரிப்பு)

பேரவைத் தலைவர் அவர்களே, பாசனத் துறையையும், வேளாண்மைத் துறையையும் இணைத்து, அதற்கு ஒரு தொகை ஒதுக்கிட்டிருப்பதை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பு நல்கியமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் இன்றையதினம் உணவுத் துறையில் தன்னிறைவு பெற்று விளங்குகிறது. அதற்கு அடிப்படையான காரணம், வேளாண்மைத் துறைதான் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறை கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகச் சிறப்பான

முறையில் இயங்குவதற்கு நம்முடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளை மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. குறித்த காலத்தில், காலம் தவறாமல் பொறுக்கு விதைகளும், பூச்சிக் கொல்லி மருந்துகளும், நீர்ப்பாசன முறைகளை உடனடியாகச் செய்கின்ற முறையும் உழவர் பெருமக்களால் பாராட்டப்பட்டு, உழவர்கள் தங்கள் பணிகளை மிகைப்படுத்தி செய்து வருவதால், இன்றைய தினம் உணவுத் துறை திருப்திகரமாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இதற்கு முந்திய அரசாங்கம், மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று உழவர் பெருமக்கள் கிளர்ந்து எழுந்த நேரத்தில், அன்றைய தினம் அவர்களுக்கு பரிசாக வழங்கப்பட்டது துப்பாக்கி குண்டுதான். இராமநாதபுரம் மாவட்டத்தில் கருப்பையா என்பவர் அன்றையதினம் ஒரு பைசா கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்ட காரணத்திற்காக துப்பாக்கியால் சுடப்பட்டார் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிர்வாகத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் அரசு, விவசாயத்திற்காக அதிகமாக செலவழித்து, நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், உழவர் பெருமக்களுடைய பிரச்னைகளில் நல்லமுறையில் தீர்வுகண்டு, அந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் ஒரு நல்ல பதில் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையை நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, சிறு விவசாயிகளுக்கு 12 பைசா என்றும், பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் மின்சார கட்டணம் விதித்து, விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கின்ற வகையில் இன்றைய தினம் நமது அரசாங்கம் சில சலுகைகளைத் தந்துகொண்டிருக்கிறது. அந்தத் துறையில் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சில பிரச்னைகளைச் சொல்லிக்கொள்ள, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இராமநாதபுரம் பகுதியில் இரண்டு பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. ஒன்று சக்கரக்கோட்டை கண்மாய். வைகையைக் கொண்டு வந்து சேர்க்கின்ற கண்மாய். அதன் பரப்பளவு 14 சதுர கிலோ மீட்டர். இதிலே 3,500 ஏக்கர் நீர்ப்பாசனம் செய்யக்கூடிய கண்மாய். 13 கண்மாய்கள் இந்த கண்மாயோடு சேர்கிறது. 30 ஆண்டுகளாக இது ஆழப்படுத்தப்படாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ அடி அளவுக்குத்தான் இந்தக் கண்மாயில் தண்ணீர் நிற்கிறது. அதிகப்படியான தண்ணீர், வெள்ளம் வருகின்ற காலத்தில் அதிலே நிற்கக்கூடும். ஆனால், இப்போது அப்படி நிற்காமல். அதிகப்படியான தண்ணீர் கடலிலே போய் சேருகிறது. ஆகவே, இதை $3\frac{1}{2}$ அடி கொள்கின்ற அளவிற்கு இந்தக் கண்மாயை ஆழப்படுத்த வேண்டும். இப்படி

இதை ஆழப்படுத்த வேண்டுமென்று சொன்னால், இதை வெட்டு மராமத்து மூலம் ஆழப்படுத்தக் கூடாது. புள்டோசரை வைத்து இதை செம்மைப்படுத்த வேண்டும். தடுப்புச் சுவரும் கட்டப்பட வேண்டும். வெட்டு மராமத்து என்று சொன்னால், ஏதோ வேலை வாய்ப்பு கொடுக்கலாம். ஆனால் வெட்டு மராமத்து மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கும், ஒப்பந்தக்காரர் பணம் சேர்ப்பார். $3\frac{1}{2}$ அடி ஆழத்திற்கு அதைச் செய்ய முடியாது.

இராமநாதபுரம் பகுதியிலே வெள்ளம, புயல் அடித்து, கடந்த 78 நவம்பரிலே இந்த இயற்கையின் சீற்றம் காரணமாக, ஒரு கோர சம்பவம் நடைபெற்று வெற்றிலை கொடிக்கால்கள் பயிருக்கு பெருத்த நஷடம் ஏற்பட்டது. முத்துப்பேட்டை, பெரிய பட்டிணம், புதுமடம், தங்கச்சிமடம், அழகர்குளம் போன்ற இடங்களிலே ஏற்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் பயிர்களுக்கு நட்ட ஈடாக கொடுத்தது 75,000 ரூபாய். இப்படிக் கொடுத்ததற்காக அந்தப் பகுதிகளிலே உள்ள மக்கள் புரட்சித் தலைவர் அவர்களை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னாலும் அரசு இருந்தது, புயல் அடித்தது, வெள்ளம் வந்தது, வெற்றிலைக் கொடிக்காலுக்கு எந்தவிதமான உதவியும் கொடுத்தது கிடையாது. என்றைக்கும் இல்லாத அளவுக்கு புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு உதவி செய்த அரசு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தான் என்பதை அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், ராமநாதபுரத்தையொட்டியிருக்கின்ற, வைகை பாசனத்தை நம்பியிருக்கின்ற பெரிய கண்மாயிலுள்ள சானல் பகுதியில் குறிப்பாக மரப்பாளையம் பகுதியில் மணல் மேடிட்டுக் கிடக்கிறது. இதில் சிலர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அப்புறபபடுத்தி அந்த சானலை சீரமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மானாமதுரையை சுற்றியுள்ள பகுதிகளில் பெரும்பகுதி கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. கரும்பு பெரிய அளவில் கிடைத்துக் கொண்டிருப்பதால், அங்கே ஒரு கரும்பாலை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பாம்பன் பகுதியில் தென்னை மர உற்பத்திக்காக— அகதிகளாக இருக்கின்றவர்களுக்கு ஐந்து ஏக்கர் தரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இப்படி ஐந்து ஏக்கர்களை மட்டும் கொடுப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை, அத்துடன் அவர்களின் தண்ணீர் வசதிக்காக தண்ணீர் இறைத்துச் கொள்ள அவர்களுக்கு பம்பு செட் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அந்தப் பகுதியில் தண்ணீர் இல்லை, நிலத்தடி

நீர் இல்லை என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், சிலர் அங்கே வசதியுள்ளவர்கள் ஆயில் என்சின் மூலம் பம்புசெட்டு வைத்து தண்ணீர் இறைக்கிறார்கள். நிலத்தடி தண்ணீர் இல்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆனால் தனிப் பட்டவர்கள் ஆயில் என்சின் வைத்து தண்ணீர் எடுத்துக் கொள் கிறார்கள். இதில் ஏன் இப்படி முரண்பாடு இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே, தென்னை வளர்ப்பதற்காக ஐந்து ஏக்கர்கள் கொடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு பம்புசெட்டுகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்லதொரு சந்தர்ப் பம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றிதெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ப. சந்திரன்: தலைவர் அவர்களே, வேளாண்மை, நீர்ப் பாசனம் மானியக் கோரிக்கைகளின் மீது உழைப்பாளர் கட்சி யின்சார்பாக பேச அனுமதித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள் கிறேன். இன்று தமிழகத்தில் விவசாயிகளுடைய பிரச்னை பெரும் பிரச்னையாக இருக்கிறது. குறிப்பாக விவசாயிகள் பொருட் களை பயிரிடுவதற்கு இடுகின்ற மூலதனம், விவசாயத்தின் மூலம் கிடைக்கின்ற விளைபொருள்களை விற்று அதிலிருந்து பெறுவதைவிட அதிகமாக இருக்கின்றது. இதனால் விவசாயி கள் தாங்கள் விளைவிக்கின்ற விளைபொருட்களையும் விட்டு, சாகுபடியையும் விட்டுவிடலாமா என்று எண்ணக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக நெல்லின் விலை கட்டுப்படியாகவில்லை என்று விவசாயிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற வாரம் மத்திய உணவு அமைச்சர் பர்னாலா அவர்களை நாங்கள் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த போது, நெல்லுக்கு குறைந்த அளவு 120 ரூபாய் அல்லது 130 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு தரவேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையின் அடிப்படையில் கேட்டபோது, மத்திய அமைச்சர் அவர்கள் அந்த விலையைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில் இப்போது நிர்ணயித்திருப் பது போல் 85 ரூபாயை உயர்த்தி கொடுக்கின்ற அதே நேரத்தில் 200 ரூபாய் என்று விற்கின்ற விலையை உயர்த்த நீங்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால், இப்போதுள்ள வாங்கும் விலையை யும் அதிகரித்து தர தயாராக இருக்கிறோம் என்றார்கள். தமிழகத்திலுள்ள உற்பத்தியாகின்ற அதிகப்படியான நெல் அத் தனையும் வாங்கிக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்றார்கள். ஆகவே இதற்கு மாநில அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அமைச்சர் சொன்னது, நாங்கள் ரஷ்ய அரசாங்கத்தோடு உடன்பாடு செய்து கொண் டிருக்கிறோம், அவர்கள் கோதுமை கேட்டார்கள், நாங்கள் அதற்கு கோதுமை இல்லை, அதற்குப் பதிலாக அரிசி தருகிறோம்

என்று சொல்லி உடன்பாடு செய்துகொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழகத்திலுள்ள நெல்லை அதிகப்படியாக தருவதற்கு முன்வருவார்களேயானால் நிச்சயமாக எல்லாவற்றையும் நாங்கள் வாங்கிக்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் இங்கே 85 ரூபாய்க்கு விற்க முடியாத நிலைமையில் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்று சொன்னோம். ஆகவே மாநில அரசு அதற்கேற்றவாறு உடன்பாடுகளை செய்து கொண்டால், மார்க்கட்டிங் கமிட்டிகளை போட்டு வாங்கிக் கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்யலாம் என்று அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த உறுதியை ஏற்றுக்கொண்டு நன்மை புரிய வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அணைக்கட்டுப் பகுதியில்—எங்கள் தலைவரின் தொகுதியிருக்கின்ற அணைக்கட்டுப் பகுதியில், மேலரசம்பட்டு திட்டம், என்று ஒரு திட்டமிருக்கிறது. இதற்கு சாதகமாக ஒரு ரூபாய்க்கு 2 ரூபாய் லாபம் வரக்கூடிய விதத்தில் அதாவது 5 சதவீதம் முதலீடு இருந்தால் 4 ரூபாய் லாபகரமாக இருக்கக் கூடிய திட்டம், அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் செயலராக இருக்கக் கூடிய ஜெயவேலு அவர்கள் இங்கே பேசக்கூடிய வாய்ப்பு இல்லாததால், முக்கியமாக ராஜா தோப்பு அணைக்கட்டுத் திட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்—அவர் என்னிடம் கேட்கச் சொன்னார்—(சிரிப்பு).

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மழை காலத்தில் இந்த வேலைகள் நடைபெறுகின்றன. மேலும் முக்கியமாக ஸ்டாண்டிங் க்ராப் இருக்கின்ற நேரத்தில் இந்த வேலையை மேற்கொள்ளும்போது, பயிர்கள் மிகவும் பாதிக்கப் படுகின்றன.

[பிற்பகல் 1-10]

இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்காக கிராமசேவக்குகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 10, 15 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கிராம சேவக் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாக் கிராமங்களுக்கும் சென்று இந்த பூச்சிக்கொல்வி மருந்துகளை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், 10, 15 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கிராம சேவக் என்று இருப்பதால், அவர்கள் எல்லாக் கிராமங்களுக்கும் சென்று இந்தப் பணியைச் செய்ய முடிவதில்லை. எனவே, அதிகப்படியான கிராம சேவக்குகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் விவசாயிகளிடம் போய், சரியான ரேஷியோவிலே இந்தப் பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கலந்து

உபயோகிக்க வேண்டுமென்று சொல்ல முடியாத காரணத்தால் அந்த மருந்துகளை பூச்சிகளே சாப்பிட்டு, இம்மியூன் ஆகி விடுகின்றன. எனவே, இதனைச் சரியான முறையிலே பயன் படுத்திக்கொள்ள அதிகப்படியான கிராம சேவக்குகள் நிய மிப்பதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது மின்சார வெட்டு பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. 8 மணி நேரம் மின்சாரம் கொடுப்பது என்ற அடிப்படையிலே, அந்த டிரான்ஸ்பார்மரிலே ஒரே நேரத்திலே எல்லா விவசாயிகளும் பயன்படுத்துகின்ற காரணத்தால், பியூஸ் ஆகிவிடுகிறது. இதை நான்காகப் பிரித்துக் கொடுக்கும்போது, இந்த 8 மணி நேரம் என்பது 2 மணி நேரமாக குறைந்து விடுகின் றது. எனவே, இன்றைய தினம் விவசாயிகள் பெருத்த அளவிலே கஷ்டப்படுகிறார்கள். இதையெல்லாம் இந்த அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதல் முறையாக பேசக்கூடிய வாய்ப்பு பெற்றிருப்பதால், என்னுடைய மாவட்டத்தைப் பற்றி ஒருசில கருத்துக்களைப் பேசலாம் என்று நினைக்கிறேன். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய சட்டமன்றத்தில் காயிதே மில்லத் அவர்களுடைய படத்தையும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் படத்தையும் திறந்து வைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு, இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒரு மாவட்டத்தை இராமநாதபுரம் மாவட்டம் என்றும், இன் னொரு மாவட்டத்தை முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்றும் அறிவித்திருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடை கிறேன். அதற்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, நம்முடைய பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள் ஒரு தடவை ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வரு கின்றார். அங்கு வருகின்ற சமயத்திலே அவர்களுக்கு வாய் பூட்டுச் சட்டம் போட்டு, வாய் பூட்டப்பட்டு வருகின்றார். லட்சக்கணக்கான மக்கள் அவரைப் பார்த்துக் கேட்கின்றார்கள். அப்போது முத்துராமலிங்க தேவர் அவர்கள் சொல்கிறார்கள்: நான் ஆதியிலும் ஊமை அல்ல; ஜாதியிலும் ஊமை அல்ல; பாதியிலே ஊமை ஆக்கப்பட்டேன்'' என்று சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட பெரும் தியாகியின் பெயரை இந்த மாவட்டத் திற்கு வைக்க வேண்டும் என்று நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எந்தத் துரோகிகள் அவ

ருக்கு அன்றைக்கு வாய்பூட்டுச் சட்டம் போட்டார்களோ அதற்கு மாறாக இந்த உலகம் உள்ளளவும், இந்த மண் உள்ளளவும் உங்கள் பெயர் நிலைத்திருக்கட்டும் என்று நமது புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருப்பதற்காக, அவருக்கு அந்த மாவட்டத்து மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் மலட்டாறு திட்டம் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் தீட்டப்பட்டு இதற்கு முன்பிருந்த ஆட்சிகளால் செயல்படுத்தவில்லை. அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், வைகை ஆற்றில் அதிகமாகப் போகக்கூடிய தண்ணீரை திருப்பி விடுகின்ற வகையிலே, கிருதமால் நதித் திட்டம் என்பதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதி தண்ணீர் பாசன வசதி எதுவும் இல்லாத ஒரு பகுதி. எனவே நான் இதைப்பற்றி அதிகம் பேசத் தேவையில்லை.

அதோடு, 200, 300 ஆண்டுகளுக்கு முன்பு அருப்புக்கோட்டை முதுகுளத்தூர், கடலாடி பகுதிகள் அரசியல் காரணங்களுக்காக தவிர்க்கப்பட்டு, அந்தப் பகுதிகள் ஒரு தரிசு காடாக ஆக்கப்பட்டது. இப்போது வைகை ஆற்றுத் தண்ணீரை, பெரியார் ஸ்கீம் என்று போட்டு கிட்டத்தட்ட 41 கோடி ரூபாய் செலவில் உபரி தண்ணீரை சிங்கம்புனேரி, திருப்பத்தூர் பகுதிகளுக்கு திருப்பி விட்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒரு கண்ணில் வெண்ணெயையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பையும் வைத்த கதையாக அவர்கள் செய்தார்கள். அதையே நம்முடைய அரசாங்கமும் தயவு செய்து பின்பற்ற வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் விவசாயத்தைப் பற்றிப் பேசப்போவதில்லை. காரணம், தண்ணீரே இல்லாத நிலையில் விவசாயத்தைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நிதானமாகப் பேசுங்கள். எங்கே மணியடித்துவிடப் போகிறேனோ என்று பரபரப்பாகப் பேசவேண்டாம்.

<u>திரு. ஆர். சி. சுப்பிரமணியம் :</u> கடலாடி பகுதியில் 41 கோடி ரூபாய் திட்டத்தில் கிடைக்கக்கூடிய மீதித் தண்ணீரை எங்கள் பங்காக நிச்சயமாகக் கொடுத்தாக வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

41 கோடி ரூபாய்த் திட்டத்தில் கிட்டத்தட்ட 6,800 ஹெக்டர் நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஒரு ஹெக்டருக்கு எவ்வளவு ரூபாய் அந்தத் திட்டத்திற்காகச்

1979 மார்ச் 30] [திரு. ஆர். சி. சுப்பிரமணியம்]

செலவழிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையில் ரொம்ப மன வருத்தமாக இருக்கிறது.

எங்கள் பகுதியில் ஒவ்வொரு வருஷமும் மழை பெய்வதில்லை. இந்த வருஷம் மழை வெள்ளம் ஏற்பட்ட சமயத்திலும் எங்கள் பகுதியில்மழை கிடையாது, கண்மாய்கள் பெருகவில்லை. இதைப் பற்றி எஞ்சினியரைக் கேட்டால் உண்மை என்னஎன்பது விளங்கும். சென்றவருஷம் வெள்ள நிவாரணப் பணி ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியிலுள்ள 100 கண்மாய்கள் பெருகவில்லை. அங்கு மழையே இல்லை. தென் மேற்குப் பருவ மழை பெய்யும்போதும் அங்கு மழை பெய்வதில்லை. வட மேற்குப் பருவ மழை பெய்யும்போதும் அங்கு மழை பெய்வதில்லை. மழையே பெய்யாத அந்தப் பகுதிக்கு ஏதாவது செய்ய வேண்டும். அரசாங்க அதிகாரிகள் அதைப் பற்றி ஏதாவது சிந்தித்தார்களா என்றால் சிந்திக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். வெள்ளம் வருகிற காலத்தில் மட்டும் உங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் விடுகிறோம். வெள்ளத்தோடு வெள்ளமாக அடித்துக் கொண்டு கடலுக்குப் போங்கள் என்று சொல்லுகிறார்கள்.

எங்களுடைய கடலாடி பகுதியில் ஒன்றே முக்கால் லட்சத்தில் ஒரு கால்வாய்த் திட்டம் திட்டப்பெற்றிருக்கிறது. சங்கர தேவன் கால்வாய் என்று பெயர். 80,000 ரூபாய்க்கு வேலை செய்து விட்டு ஒரு லட்சத்திற்கு வேலை செய்யாமல் நிறுத்திவிட்டார்கள். எந்தவிதத்திலும் அது நிறைவேற்றப் படவில்லை. பயன் படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு அரசாங்கப் பணம் வீணடிக்கப்படுகிறது. என்னுடைய பகுதியில் 1,000 ஏக்கர் முதல் 2,500 ஏக்கர் வரை பாசன வசதி தரக்கூடிய அளவுக்குப் பல கண்மாய்கள் இருக்கின்றன. உலக வங்கி உதவியுடன் பெறும் தொகையிலிருந்து அந்தக்கண்மாய்களைச் சீர்படுத்த திட்டமிட்டால் ஓரளவு பயன் கிடைக்கும். மழை காலத்தில் வரக்கூடிய தண்ணீரையாவது தேக்கி வைத்துக் கொள்ள முடியும். அதனைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை தாலூகாவும் முதுகுளத்தூர் தாலூகாவும் சேர்ந்து ஒரு பி.டபிள்யூ.டி. டிவிஷனாக அமைக்கப்பட்டிருக்கிறது. சிவகங்கை தாலூகாவில் மட்டும் நான்கு சப்-டிவிஷன்கள் இருக்கின்கின்றன. முதுகளத்தூர் தாலூகாவிற்கு ஒரே ஒரு சப்-டிவிஷன் தான் இருக்கிறது. ஒரு தாலூகாவுக்கு நான்கு எஞ்சினியர்கள், ஒரு தாலூகாவுக்கு ஒரே ஒரு எஞ்சினியர் என்றால் எப்படி வேலைகள் நன்றாக நடக்க முடியும்? இந்த மாதிரி பாகுபாடுகளைக் களையவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட மூன்றே முக்கால் லட்சம் செலவில் சக்கிலியன் ஓடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் திட்டம் செயல் படாத முறையில் இருக்கிறது. தண்ணீரைத் திறந்து விட்டால் உடைத்துக் கொண்டு காடுகளுக்குப் போகிறது. லெவல் தப்பாகப்

போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். அரசாங்கம் பணம் இவ்வாறு விரயமாயிருக்கிறது. எந்த எஞ்சினியர் இதற்குப் பொறுப்பு என்று பார்த்து அவர் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பன்னிரண்டு லட்சம் செலவில் திட்டப்பட்ட கூத்தங்கால் திட்டம் பூரணமாக நிறைவேற்றப்படாமல் பாதியில் நின்றுவிட்டது. எங்களுடைய பகுதியில் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் ஆறு பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு ஆங்கிள்கள் மற்றச் சாமான்கள் எல்லாம் கொண்டு வந்து வைக்கப்பட்டன. ஆனால் அந்த ஆங்கில்களை பிறகு எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். வேறு எங்கோ பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக எடுத்துச் சென்று விட்டதாகச் சொல்லுகிறார்கள். அரசாங்கப் பணம் இப்படி வீணடிக்கப்படுகிறது.

[பிற்பகல் 1.20]

அரசாங்கப் பணம் எவ்வளவு வீணாகிறது என்பதைச் சொல்லி இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம், பாசனம் என்ற இரண்டு தலைப்பிலேயும், அதிலேயும் குறிப்பாக, விவசாயம் தமிழகத்திலே எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கிறது, விவசாயிகள் எந்த அளவிற்கு வேதனைப்படுகிறார்கள் ஏற்கனவே அறுவடை செய்த நெல்லுக்கு சரியான விலை கிடைக்காத நிலைமையும், நெல்லே விற்க முடியாத நிலைமையும், உற்பத்தி செய்கிற நெல் நிச்சயமாக அறுவடைக்கு வருமா என்ற அளவிற்கு இருக்கிற மின்சாரத் தட்டுப்பாட்டையும், நாம் பார்க்கிற சூழ்நிலைகள் தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. மின்சாரத் தட்டுப்பாடு என்பது தொடர்ச்சியாக இருப்பதால் உற்பத்தி செய்யப்படுகிற நெல் அறுவடை செய்யப்பட்டு களத்திற்கு வருமா என்ற அளவிற்குத்தான் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.

விவசாயிகள் பெரும்பாலும் பாதிக்கக்கூடிய நிலைமையில் அவர்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்குப் போதுமான விலை இல்லை என்ற நிலைமை இருக்கிறது. மத்திய சர்க்கார் ஒரு குவிண்டாலுக்கு 85 ரூபாய் தான் நிர்ணயம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி நாங்கள் அதற்கு மேலே கொடுக்க முடியாது என்று சொல்லாமல் அவர்களுக்கு அதிகமாகக் கூட்டிக் கொடுக்கக் கூடிய நிலைமையும் இல்லை. விவசாயிகள் விவசாயத்தைப் பெருக்குவதற்கான உணர்வுகளை உருவாக்குவதற்காக வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு செய்யவேண்டும்.

1979 மார்ச் 30] *[திரு. து. இராசரத்தினம்]*

பூச்சி மருந்தை எடுத்துக்கொண்டால் அவைகள் இன்றைய தினம் பூச்சிகளைக் கொல்லக்கூடியதாக இருக்கிறதா என்றால் ஒரு முறைக்கு இரண்டுமுறைகள் அடிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. முன்னாலே ஒரு முறை பூச்சி மருந்து அடிக்க ஏக்கருக்கு 50 ரூபாய் ஆயிற்று என்றால் இப்போது அதே மருந்து அடிக்க 100 ரூபாய் ஆகிறது, அதுவும் இரண்டு முறைகள் அடிக்கவேண்டுமென்றால் 200 ரூபாய் செலவாகிறது. அந்த அடிப்படையிலே வருகிறபோது விவசாயிகளை ஊக்குவிக்கிற முறையிலே பூச்சி மருந்தை பயன்படுத்தக்கூடிய வகையிலே எப்படி முன்பெல்லாம் 20 சதவீதம் 30 சதவீதம் மானியமாக அளிக்கப்பட்டதோ அந்த முறையிலே மானியம் கொடுத்து விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டும். அது மட்டுமல்ல, மின்சாரத் துறையிலே எந்த அளவிற்கு அதிகமாகக் கவனம் செலுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செலுத்தி கட்டணத்தை குறைக்கக் கோருகிறேன். மத்திய சர்க்கார் 84 ரூபாய்தான் நிர்ணயிக்கிறார்கள் நெல்லுக்கு என்று சொல்லாமல் — விவசாயிகளுக்கு வேறு ஏதாவது ஒரு வழியிலே ஆதாயம் கிடைக்கச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநின்றயூர், ஏரி, கூடப்பாக்கம் ஏரி ஆகியவை இருக்கின்றன கூவம் ஆற்றில் 4 லட்சம் ரூபாய் செலவில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அங்கே இரண்டு மதகுகள் மூலமாக தின்னனூர் ஏரிக்குத் தண்ணீர் வருகிறது. கூவத்திலே மாதத்திற்கு 30 நாளும் தொடர்ச்சியாகத் தண்ணீர் வருவதில்லை. தின்னனூர் ஏரி, செங்கற்பட்டு மாவட்டத்திலே உள்ள 4, 5, பெரிய ஏரிகளில் குறிப்பாக ஒரு பெரிய ஏரியாக இருக்கிறது, அந்த ஏரி மூலம் 2,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றாக வேண்டும். ஆனால் 2 மதகுகள் தான் திறந்து இருக்கின்றன கூவத்திலே தண்ணீர் வருவதோ ஒரு வாரமோ பத்துநாளோதான். ஆகவே அந்த தின்னனூர் ஏரிக்க தண்ணிர் வருவதற் ாக் மதகுகபிளத் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்ி கடந்த மூன்றுண்டுகளாக தொடர்ச்சியாக அந்த மாவட்டத்திலே மழை பெருதாலும் கூட அந்த தின்னூர் ஏரி நிரம்பவே இல்லை கவே அதை கவனிக்க வேன்டுமென்றி கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே எனது தொகுதியிலே உள்ள மிட்டனமலை ஏரியிலே வரத்துக் கால்வயும் கிடையாது, அதற்குப் பராமரிப்பும் கிடையாது. கோாவில்தாகை, கேக்காடு, திருமுல்லைவாயல் ஆகிய ஏரிகளும் பராமரிப்பதே இல்லை. இந்தக் குறையைக் போக்கி அவைகளைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடகிழக்குப் பருவ மழை வருமானால் சென்னையை ஆட்டிப் படைத்துவிடும் ஏரி செம்பரம்பாக்கம் ஏரியாகும். அதிலிருந்து 13,570 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் பாய்கிறது,

அதாவது 64 கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. 64 கிராமங்களுக்கும் 15 கிலோ மீட்டர் கால்வாய் வெட்டப்பட வேண்டுமென்றாலும் அதைச் சர்க்கார்தான் செய்யவேண்டுமே தவிர தனியார்களால் செய்யமுடியாது, முன்னாலே இருந்த மிராசுதாரர்கள் ஆட்சி இருந்த காலத்திலே அவர்கள் இருந்த நிலையில் கால்வாய் வெட்டி அதன் மூலம் கிராமத்திற்குத் தண் ணீர் கொண்டுவரும் நிலை இருந்தது.

ஆனால் இன்றைக்கு மாறாக 5 ஏக்கர், 3 ஏக்கர், 2 ஏககர், 1 ஏக்கர் என்று இருக்கின்ற நிலையில் தண்ணீர் வராத அளவிற்குக் கால்வாய் வெட்டாத நிலையை அரசு கணக்கில் எடுத்துக்கொண்டு அரசே அவைகளை வெட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படி வெட்டுவதால் ஏற்படுகின்ற பணச் செலவை விவசாயிகளிடமிருந்தே வாங்கிக் கொள்ளலாம்.

இப்பொழுது ஒரு தீர்வை புதிதாகப் போடப்பட்டிருக்கிறது. 1-7-1977 முதல் திருப்பெரும்புதூர் வட்டத்தில் போடப் பட்டிருக்கிறது. ஸ்பெஷல் அசெஸ்மெண்ட் தண்ணீர்த் தீர்வை என்று 1387ஆம் பசலிக்கு, 1-7-1977 முதல் என்று சொல்லி பசலி ஒன்றுக்கு 12 ரூபாய், 10 ரூபாய் என்று சொல்லி, போகத் திற்கு 10 ரூபாய், 8 ரூபாய் என்று வசூலிக்கின்ற நிலைமை செம்பரம்பாக்கம் பகுதியில், திருப்பெரும்புதூர் பகுதியில் ஏற்பட் டிருக்கிறது. குறிப்பாக செம்பரம்பாக்கம் ஏரியின்கீழ் பகுதியில் பாயும் பகுதிகளுக்கு புதிய தீர்வை போடப்பட்டிருக் கிறது. இதில் அமைச்சரவர்கள் கவனம் செலுத்துவதன் மூலம் ரத்துசெய்வது சாதகமாகச் செய்ய ஏதுவாக அமையும்.

அடுத்தாற்போல், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து குடி நீருக்குத் தண்ணீர் எடுப்பதைப்போல மாண்புமிகு மேலவையின் துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசிய பேச்சு 18-10-1978ஆம் தேதிய 'தினமணி' பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் பக்தவசத்லத்தைப் பாராட்டி அவரது 82ஆவது பிறந்த தின விழாவிலே பேசுகின்ற நேரத்தில் அவர், "சமீபத்தில் காமன்வெல்த் பார்லிமெண்டரி தூது கோஷ்டியில் தமிழகத்தின் பிரதிநிதியாக வெளிநாடு களில் சுற்றுப் பயணம் செய்தபோது உலக வங்கி அதிகாரிகளுடன் பேசிக் கொண்டிருந்தேன். சென்னை மாநகர குடிநீர்ப் பிரச்சனையை தீர்க்க செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 20 கோடி கன அடி தண்ணீர் கொண்டுவர ஒரு திட்டம் சமர்ப்பித்திருப்பதாக உலக வங்கி அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தார்கள். இதன்படி பாசன வசதி பெறும் எல்லா நிலங்களையும் அரசு கையகப்படுத்திக் கொண்டு ஏரி நீர் முழுவதையும் குடிநீருக்காக மட்டும் பயன் படுத்தினால் இத்திட்டத்தைப் பத்து கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற முடியும் என்று அப்போது உலக வங்கி அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தார்கள்" என்று பேசியிருக்கிறார். வட

1979 மார்ச் 30] [திரு. து. இராசரத்தினம்]

கிழக்குப் பருவக் காற்று மழையானது செங்கற்பட்டு மாவட்டத்தில் 42 அங்குலம், 43 அங்குலம்தான் பெய்கிறது. அப்படி 42 அங்குலம், 43 அங்குலம் பெய்கிறபொழுது அந்த ஏரி நிரம்புமா என்றால் நிரம்பாது. குறிப்பாக 51 அங்குலம் மழை பெய்தால் தான்—அதாவது அளவுக்கு மீறி மழை பெய்தால்தான்—ஏரி நிரம்பும். 1910ஆம் ஆண்டிலே இருந்து அந்த ஏரியானது எந்தெந்த ஆண்டுகளில் நிரம்பியிருக்கிறது, எந்தெந்த ஆண்டுகளில் நிரம்பவே இல்லை, எந்தெந்த ஆண்டுகளில் அறவே இல்லை என்ற அடிப்படையில் இருக்கின்ற நிலைமையில் யாரோ சில அதிகாரிகள் பார்த்துவிட்டு, 1976ஆம் ஆண்டு பார்த்து விட்டு, ஏரி நிரம்பியிருப்பதால் இதைக் குடிதண்ணிருக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 75,000 டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்யக்கூடிய பெரிய ஏரி அது. அதைப் பற்றிக் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் சிபாரிசு செய்யப்பட்ட நிலைமையினால் அந்தப் பகுதிவாழ் மக்களிடத்திலே பீதி ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பீதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள்தான் போக்குவதற்கு விளக்கம் தர வேண்டும். குடிநீருக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலையிருக்கிறதா ? அப்படியிருந்தால் சென்னைக்கு குடிநீரை நிரந்தரமாகக் கொடுக்க முடியுமா ? என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும். 51 அங்குலம் மழை பெய்தால்தான் முழு ஏரியும் நிரம்பும். சத்தியமூர்த்தி அணை என்று செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கிறது. பருவமழை தவறினால் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும், சென்னை நகரத்திற்கும் தண்ணீர் கொடுக்க முடியுமா ? அதே நேரத்திலே ஏனைய மாநிலங்களிலேயிருந்து கிடைக்கும் நீரை காசு அதிகமாக இருந்தாலும் ஏன் வாங்கிக் கொடுக்கக் கூடாது ? இதிலிருந்து தண்ணீர் எடுப்பதால் 13,570 ஏக்கர் விவசாய நிலங்கள் பாழாகக்கூடிய நிலைமை ஏற்படும். எனவே, கையகப்படுத்த வேண்டுமென்று ஏற்கெனவே சிபாரிசு செய்யப்பட்டிருப்பதை உடனடியாக ரத்து செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த நிலை இருக்காது என்ற உறுதியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நவம்பர் மாதம் அல்லது அக்டோபர் மாதம் வருகின்றபொழுதுதான் எல்லோரும் செம்பரம்பாக்கம் ஏரியைப் பார்க்கிறார்கள். அதற்கு முன் என்ன காரியம் செய்ய வேண்டும் அதற்கு எப்படித் திட்டம் போட வேண்டுமென்பதைப் பார்ப்பதில்லை. நவம்பர் மாதம் வந்தவுடன் தண்ணிர் அடையாற்றிலே வந்தால் சென்னையிலே உள்ள மக்கள் பீதி அடைகிறார்கள், எனவே, அங்கே 75 இலட்சம் ரூபாய்த் திட்டத்தில் கால்வாய் வெட்டி, 30 இலட்சம் ரூபாய்க்குத் தீட்டப்பட்ட திட்டத்தை உடனடியாக உருவாக்கி, அங்கேயுள்ள மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். ஆயிரம் பம்பு செட்டுகள் ஓடும் பகுதி அது. எனவே மக்களுக்குச் சிறப்பான முறையிலே இப்படிப்பட்ட நிலை இல்லை என்பதை நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

129. தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சிட் பண்டு சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் எல்லைக்குள் அமைந்துள்ள பேங்க் ஆப் கொச்சின் லிமிட்டெட்டின் கிளைகளை அங்கீகாரம் பெற்ற வங்கியாக அறிவிக்கும் பொருட்டு வணிக வரிகள்—அறக் கட்டளைகள் துறையின் 25–1–1979ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 70-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட் பண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%130. 1978ஆம் ஆண்டிற்கான அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 6ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%131. 1978ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 7ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

%132. 1978ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 7ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*102. 1978–79ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி பற்றிய, தமிழ்நாடு வேளாண் பண்ணைக் கழகத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

**103. சில வேளாண்மைத் திட்டங்கள், புதிய ரகங்கள் குறித்த சிறு புத்தகங்கள் (தமிழ்).

1979 மார்ச் 30]

***104. 1973–74ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகளின் மீதான தமிழ்நாடு பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை—ஆறாவது அறிக்கை) (தமிழ், ஆங்கிலம்).

***105. மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு மதிப்பீட்டுக்குழு அளிக்கும் அறிக்கை 1977–79 (ஆறாவது பேரவை—எட்டாவது அறிக்கை).

@106. கோரிக்கை எண். 10. பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

@107. 1978–79 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் செயலாக்கம் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

108. 1973–74ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய தமிழ்நாடு பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை, 1977–79 (ஆறாவது பேரவை—ஆறாவது அறிக்கை) (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

%தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதிகளில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

*26–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

**27–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

***29–3–1979 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றன.

@29–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

இணைப்பு

[682ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 561-க்கான விடையைக் காண்க].

மொழிப் பிரச்சினை.

தமிழ்நாடு, கருநாடகம், ஆந்திரப்பிரதேசம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாடு, இன்றைக்குச் செயல் படுத்தப்பட்டு வரும் மொழிக் கொள்கை குறித்து கருதிப் பார்த்து ஆங்கிலம் கூடுதல் இணை மொழியாக தொடர்ந்து இருந்துவரும் என்றும், இந்தியை ஆட்சி மொழியாக மாற்றுவதற்கான முடிவு, இந்தி பேசாத மக்களிடம் விடப்பட வேண்டுமேயல்லாமல் இந்தி பேசும் மக்களிடம் அல்ல என்று மறைந்த தலைமை அமைச்சர் பண்டிட் ஜவஹர்லால் நேருவும், இந்தி பேசாத மக்கள்மீது இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று மறைந்த தலைமை அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி முன்னாள் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி, தற்போதைய தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் ஆகியோரும் உறுதிமொழி அளித்திருந்த போதிலும் மத்திய அரசின் சில அமைச்சகங்கள் மறைமுகமாக இந்தியைத் திணிக்க முயற்சி செய்துள்ளமை கவலை தருவதாக உள்ளது என்று இம் மாநாடு கருத்து தெரிவிக்கின்றது. 1969 ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் சட்டத்தின் விதித்துறைகளுக்கு முரணாகச் செய்யப்படும் இம் முயற்சியை இம்மாநாடு வன்மையுடன் கண்டிக்கிறது. இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்படுவதை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு விரும்புவதுடன் இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க மேற்கொண்டும் முயற்சி செய்வதனால் மத்திய அரசின்மீது இந்தி பேசாத மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை குலைந்துவிடக்கூடும் என்ற அச்சத்தைத் தெரிவிக்கிறது. எனவே தலைமை அமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, இந்தியைத் திணிப்பதற்கான நடவடிக்கையை தடுப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

நடப்பாண்டு வரி வருவாய் ஒதுக்கீடுகள்.

மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரிகளில் மாநிலங்களுக்குப் பங்கிடத்தக்க அளவை 1978 மார்ச்சில் தேசிய வளர்ச்சிக்குழு தனக்கு வகுத்துக் கொடுத்துள்ள ஆய்வு வரம்பை ஒட்டி முடிவு எடுக்கும் வரையில் 75 சதவீதமாக இவ்வாண்டில் தற்காலிகமாக உயர்த்துமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதென முதலமைச்சர்கள் தீர்மானித்தனர்.

1979 மார்ச் 30]

மொழிச் சிறுபான்மையினர்.

அரசியலமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அடிப்படையில், இந்நாட்டிலுள்ள கலாச்சார, மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மாநில அரசுகளும், மத்திய அரசும் எடுக்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

பொதுவான ஊதியக் கொள்கை.

பொதுவான ஊதியக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளை முதலில் தென் மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர் நல அமைச்சர்கள் கூடிப்பேசி அவர்களது கருத்தை அறிந்து கொண்டு, அவை குறித்து முதல்வர்கள் அளவில் விவாதிக்க வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

கரும்பு—லெவி சர்க்கரை விலை குறித்த தீர்மானம்.

சாகுபடிக்காகும் செலவையும், ஏனைய விளைபொருள்களுக்குக் கிடைக்கிற விலைகளையும் கரும்பு பயிரிடுவோருக்கு கட்டுப்படியாகும் விலையை அளிக்க வேண்டியதன் தேவையையும் கருத்தில் கொண்டு, 8.5 சதவீதம் சர்க்கரை கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் டன் ஒன்றுக்கு 125 ரூபாய் என்று வரையறுக்க வேண்டும் என்று பெருவாரியாகக் கரும்பு பயிரிடும் கருநாடகம், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி, ஆகிய மாநிலங்களில் முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டனர்.

வெளி சர்க்கரையின் விலை கரும்பு விலைக்கு ஏற்பவும் கரும்பிலிருந்து பெறப்படும் சர்க்கரையின் அளவுக்கு ஏற்பவும் நிர்ணயிக்கப்பட வேண்டும். விலை வீதத்தில் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபாடு இல்லாமலும், ஒரு ஏக்கர் நிலத்தில் விளைவிக்கக்கூடிய கரும்பின் மகசூலையும் சர்க்கரை கிடைப்பதை ஒட்டி கரும்பின் தரத்தையும் அதிகரிக்கப் போதிய அளவிற்கு ஊக்கம் கிடைப்பதை உறுதி செய்யும் வண்ணம், கரும்பு, வெளி சர்க்கரை ஆகியவற்றின் விலை நிர்ணயிக்க வேண்டும்.

கேரளாவைப் பெறுத்த மட்டில் தொடர்புடைய கூறுகளை மேற்கொண்டும் ஆய்வு செய்த பிறகு அம்மாநில அரசு தனிப்பட்ட முறையில் முடிவெடுக்கும்.

கோதுமை, நெல் ஆகியவற்றிற்கு உதவித் தொகை.

நெல்லுக்கு தரப்படும் விலை, குவிண்டால் ஒன்றுக்கு 77 ரூபாயாக உள்ளது. ஆனால் கோதுமைக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 112·50 ஆக உள்ளது.

அரிசியை வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கு அரிசி விலை ஏறாத வகையில் நெல்லுக்கான கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்.

1978–79ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் உணவு தானியங்களுக்கு உதவித் தொகை வழங்கும் இனத்தில் கோதுமைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 3.19 ரூபாய் உதவித் தொகை தரப்படுகிறது. ஆனால் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 4 காசுதான் தரப்படுகிறது, என்பனவற்றை முதலமைச்சர்கள் கண்டுணர்ந்து, கோதுமைக்குத் தரப்படும் அதே உதவித் தொகை நெல்லுக்கும் கொடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்றும் இதன் மூலம் நெல் சாகுபடி செய்பவர்களுக்கு கட்டுப்படியாகும் கொள்முதல் விலை கிடைக்கச் செய்வது, அரிசியை வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கு தற்போதுள்ள விலையிலேயே அரிசியைக் கிடைக்கச் செய்வது என்ற இரண்டு நோக்கங்களும் எய்தப் பெறும் என்றும் முதலமைச்சர்கள் கருதுகின்றனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1979, மார்ச் 24, 26, 27, 29 மற்றும் 30 ஆம் நாட்கள்.

(தொகுதி XXVIII —எண்கள் 1-5.

அ

பக்கங்கள்

அகதி(கள்)—

தாயகம் திரும்புவோருக்கு கடன் வசதிகள் 180—183

நீலகிரி மாவட்டத்தில் குடியேறியுள்ளவர்கள் 177—180

அண்ணாமலை, திரு. எம்.—

அரூர், தர்மபுரி மாவட்டம், மருத்துவமனைக் கட்டிடம் 377—379

அப்துல் லத்தீப், திரு. கே.—

சுற்றுலா ஓட்டல், முதுமலைக் காட்டுப் பதிகுயில் கட்டுதல் 19—20

அப்புனு கவுண்டர், திரு. கா.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு

கல்வி 269—272

அம்பிகாபதி, திரு. மு.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து **(த.கோ.)** 229

என்.ஜி.ஓ. வினரின் உண்ணாவிரதம் குறித்து (ஒ.தீ.) 212—213, 222, 223

சிறைச்சாலை, சலுகைகள் அளித்தல் 20—25

பூச்சி மருந்து தொழிற்சாலை, மன்னார்குடி 14—16

பொள்ளாச்சி குவாலிட்டி மில் வேலைநிறுத்தம் குறித்து (ஒ.தீ.) 59—60

மின் வெட்டு, விவசாயிகள் பாதிப்பு (ஒ.தீ.) 445

அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

அரங்கசாமி, திரு. க.—

அகதிகள்-நீலகிரி மாவட்டத்தில் குடியேறியுள்ளவர்கள் 177—178

அரங்கநாயகம், திரு. செ.—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை (தீ.) 488

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

கல்வி 230, 232—233, 264, 542, 568—588

விதி 22-ஐத் தளர்த்துவது குறித்து (தீ.) 489

அரிசன நலம்—

அரிசன மற்றும் சமுதாயத்தில் பின்தங்கியோர் குழந்தைகளுக்கு செஃசயர் இல்லங்கள் 693—694

குடியிருப்புகள், கருங்காலக்குடி 693

தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள், மேலாநல்லூர் 370—372

மாணவர்கள், இலவசப்புத்தகங்கள் 694—699

அழகர்சாமி, திரு. சோ.—

திருப்பரங்குன்றம் சம்பவம், அரசு முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்தது குறித்து (ஒ.தீ.) 716, 720—721

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

பத்திரப் பதிவு, கூட்டுறவு, பல்வகை மூலதனச் செலவு 93—98

வழக்கறிஞர்களது வேலைநிறுத்தம் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருப்பது குறித்து (ஒ.தீ.) 44—45

அறிக்கைகள்—

வழக்கறிஞர்களின் போராட்டம் குறித்து 408—420

பக்கங்கள்

அன்பழகன், திரு. க.—

உணவுத்துறை அமைச்சர் மீது (உ.பி.) 407

வரவு-செலவுத் திட்டம், 1979-80—வாக்கெடுப்பு :
கல்வி 538—567, 571

வழக்கறிஞர்களது வேலை நிறுத்தம் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருப்பது குறித்து (ஒ.தீ.) 53—54,

வழக்கறிஞர்களின் போராட்டம் குறித்து (அ.) 416, 417—418

அன்பழகன், திரு. தி.—

வரவு-லெவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

வேளாண்மை, பாசனம், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, பாசனம் குறித்த மூலதனச் செலவு 605—607, 747—749

ஆ

ஆறுமுகம், திரு. எச். ஜி.—

மருத்துவமனைக் கட்டிடம், அரூர், தர்மபுரி மாவட்டம் 377—379

ஆறுமுகம், திரு. சி.—

உணவுத்துறை அமைச்சர் மீது (உ.பி.) 401

தூத்துக்குடி துறைமுகம், கூட்டுறவு பண்டகசாலை (ஒ.தீ.) 441

பொள்ளாச்சி குவாலிட்டி மில் வேலை நிறுத்தம் குறித்து (ஒ.தீ.) 63

ஆறுமுகம், திரு. சேலம். மு.—

அரிசன மற்றும் சமுதாயத்தில் பின்தங்கியோர், குழந்தைகளுக்கு செஃசயர் இல்லங்கள் 693—694

என்.ஜி.ஓ.வினரின் உண்ணாவிரதம் குறித்து (ஒ.தீ.) 313—314

பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி.

திருப்பரங்குன்றம் சம்பவம், அரசு முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்தது குறித்து (ஒ.தீ.) 716, 718, 719, 739

திருவண்ணாமலை அருகில் துரிஞ்சாபுரத்தில் தடியடிப் பிரயோகம், விவசாயிகள் கைது (ஒ.தீ.) 431—432, 434

மரண தண்டனையை ஒழித்தல் 25—27

வரவு-செலவுத் திட்டம், 1979-80, பொ.வி. 461—467

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

கல்வி, 231, 232,

பத்திரப் பதிவு, கூட்டுறவு, பல்வகை மூலதனச் செலவு 75, 76, 77

வேளாண்மை, பாசனம், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, பாசனம் குறித்த மூலதனச் செலவு 590, 591, 592, 593

வழக்கறிஞர்களது வேலை நிறுத்தம் காரணமாக நீதித்துறை இயங்காமல் இருப்பது குறித்து (ஒ.தீ.) 47—48, 57

இ

இரயில்வே—

தனுஷ்கோடிக்கு இரயில்பாதை 704

இராகவானந்தம், திரு. எஸ்.—

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது (உ.பி.) 421, 425—426

பொள்ளாச்சி குவாலிட்டி மில் வேலை நிறுத்தம் குறித்து (ஒ.தீ.) 61—63

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராசமாணிக்கம், திரு. இரா.—

மாயவரத்தில் பல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப் பெறுவது குறித்து (ஒ.தீ.) 427—430

வரவு-செலவுத் திட்டம் 1979-80, வாக்கெடுப்பு :

வேளாண்மை, பாசனம், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, பாசனம் குறித்த மூலதனச் செலவு 749—754

இராசரத்தினம், திரு. து.—

வரவு-லெவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

வேளாண்மை, பாசனம், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, பாசனம் குறித்த மூலதனச் செலவு 790—793

இராமச்சந்திரன், திரு. ச.—

அவையில் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டியவைகள் குறித்து (த.கோ.) 497—498, 499

உணவுத் துறை அமைச்சர் மீது (உ.பி.) 207, 208

எதிர்கட்சித் தலைவர்கள் அவையில் இல்லாதது குறித்து (ஒ.பி.) 773, 774—775

என்.ஜி.ஓ.வினரின் உண்ணாவிரதம் குறித்து (ஒ.தீ.) 218—222

கால்நடைக் கண்காட்சி, பாளையங்கோட்டை அழைப்பிதழ் (ஒ.பி.) 746

காவல்துறை தலைமை அதிகாரி மீது (உ.பி.) 714—716

திருப்பரங்குன்றம் சம்பவம், அரசு முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்தது குறித்து (ஒ.தீ.) 730—738

திருவண்ணாமலை அருகில் துரிஞ்சாபுரத்தில் தடியடிப் பிரயோகம், விவசாயிகள் கைது (ஒ.தீ.) 431—432, 438—440

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராமசந்திரன், திரு. ச.—தொடர்ச்சி.

நீலகிரி மாவட்டம், இதளார் பகுதியில் ஏற்பட்ட **வகுப்புக் கலவரம் குறித்து** (க.ஈ.அ.) **67—69, 70**

மாயவரத்தில் பல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப் பெறுவது குறித்து (ஒ.தீ.) 430—431

மின் துண்டிப்பு, விவசாயிகள் கைது, தி.அ. மங்கலம், வ.ஆ. மாவட்டம் (ஒ.தீ.) 455

மின்வெட்டு, விவசாயிகள் பாதிப்பு (ஒ.தீ.) 451—453

வழக்கறிஞர்களது வேலை நிறுத்தம் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருப்பது குறித்து (ஒ.தீ.) 39

வழக்கறிஞர்களின் போராட்டம் குறித்து (அ) 415

இராமசாமி, திரு. எஸ். ஜே.—

பேருந்து ர்பாக்குவரத்து, ஆய்வுக்குழு 699—700

முதியோர் கல்வித் திட்டம் **109**

வரவு-செலவுத் திட்டம் 1979-80, வாக்கெடுப்பு :

பத்திரப் பதிவு, கூட்டுறவு, பல்வகை மூலதனச் செலவு 83—86

இராமசாமி, திரு. த.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :

வேளாண்மை, பாசனம், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, பாசனம் குறித்த மூலதனச் செலவு 782—785

இராஜா முகமது, திரு. கே.—

கிராமத் தொழில் அமைச்சர் மீது (உ.பி.) 709—710

இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.—

பரம்பிக்குளம்—ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம். **173—175**

மின்சாரம், துண்டிப்பு 687

பக்கங்கள்

இளங்கோவன், திரு. கோ.—

திருவண்ணாமலை அருகில் துரிஞ்சாபுரத்தில் தடியடிப் பிரயோகம், விவசாயிகள் கைது (ஒ.தீ.) 431—432

வரவு-செலவுத் திட்டம், 1979-80, வாக்கெடுப்பு :
கல்வி 230, 233—241, 588

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

திருப்பரங்குன்றம் சம்பவம், அரசு முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்தது குறித்து (ஒ.தீ.) 716

நெசவுத் தொழிலாளர்கள், வருங்கால வைப்பு நிதித் திட்டம் 688—690

வரவு-செலவுத் திட்டம் 1979-80, வாக்கெடுப்பு—
பத்திரப் பதிவு, கூட்டுறவு, பல்வகை மூலதனச் செலவு 75—76, 99—104, 116, 117, 121, 122,

உ

உச்சி, திரு. கே.—

நீலகிரி மாவட்டம், இதளார் பகுதியில் ஏற்பட்ட வகுப்புக் கலவரம் குறித்து (க.ஈ.) 67, 69—70,

நீலகிரி மாவட்டம், கூக்கல் துறையிலுள்ள அரசு ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை, அங்கே மருந்துகள் இல்லாமை (க.ஈ.) 459, 460

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

உ—தொடர்ச்சி

உமாநாத், திரு. ரா.—

அவையில் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டியவைகள் குறித்து (த.கோ.) 496, 497, 498

திருப்பரங்குன்றம் சம்பவம், அரசு முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்தது குறித்து (ஓ.தீ.) 716

திருவண்ணாமலை அருகில் துரிஞ்சாபுரத்தில் தடியடிப் பிரயோகம், விவசாயிகள் கைது (ஓ.தீ.) 431—432

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது (உ.பி.) 192—194

தொழிற்சங்கம், டி.வி. எஸ். குரூப் கம்பெனிகளுக்கு முன் நுழைவாயில் கூட்டங்கள் 10—13

வழக்கறிஞர்களது வேலை நிறுத்தம் காரணமாக நீதித்துறை இயங்காமல் இருப்பது குறித்து (ஓ.தீ.) 34—37, 38—39,

வழக்கறிஞர்களின் போராட்டம் குறித்து (அ) 409, 410, 420

உரிமைப் பிரச்னை—

உணவுத்துறை அமைச்சர் மீது 203—209, 398—407

உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது 194—197

காவல்துறை தலைமை அதிகாரி மீது 710—716

கிராமத் தொழில்கள் அமைச்சர் மீது 707—710

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது— 192—194, 420—421

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது பேரவைத் தலைவர் தீர்ப்பு 198—203

உள்ளாட்சிகள்—

பெண்ணாடம் நல்லூர் ஒன்றியம், இரண்டாகப் பிரித்தல் 383

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

எ

எட்மண்ட், திரு. க. உரோ.—

உணவுத் துறை அமைச்சர் மீது (உ.பி.) 393—405

முதலமைச்சர் மீது கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்வது குறித்து (த.கோ.) 198

ஏ

ஏகாம்பர ரெட்டி, திரு. ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1979-80, பொ.வி. 481—486

ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப்பெற்றவை 193

428—490

488—190

607

ஒ

ஒழுங்குப் பிரச்சினைகள்—

எதிர்கட்சித் தலைவர்கள் அவையில் இல்லாதது குறித்து 772—775

கானடை கண்காட்சி, பாளையங்கோட்டை, அழைப்பிதழ் 740

க

கட்டிடங்கள்—

அங்காடிகள் மையம், மதுரை 690

